# நான்காம் பருவம்
## **பகுதி**-3

நடை

நாரா யணரே நல்லவை குண்டமெனச்
சீராக தெச்சணத்தில் சிறந்ததவஞ் செய்யலுற்றார்
ஆறு வருசத் துள்ளே யவர்நினைத்து
வாறு வகையெல்லாம் வந்து வழிப்படவே
நின்றார் தவசு நெடியநா ராயணரும்
குன்றாக் கடலில் கொண்ட வழிப்படியே
கடலில் மிகவே கண்டதெல்லாம் விள்ளாமல்
உடலுள் சூட்சம் ஒருவருக்குங் காணாமல்
அகமதுவே பூசித்து அதிகத் தவமிருந்தார்
தவப்புதுமை சொல்லித் தானுரைக்கக் கூடாது
ஈசர் முன்னாளில் இருந்தா ரொருதவசு
வாசக் குழலுமையை மதலை யுருவாக்க
வேட்டுவனுக் கீந்த விஞ்சைதனை நெஞ்சில்வைத்துக்
கூட்டுக் கிளியைக் குழந்தையுரு வாக்கவென்று
அத்தவந்தான் போதாது அய்யா இவர்தவத்தே
கற்றைக் குழலுமையாள் கரியமுற் காலமதில்
சூர னெனவந்தத் தோசப்பொல் லாதவனை
வீரத் தனமாய் வெட்டிச் சரமறுக்க
ஆறு முகமாய் அரியதொரு ஆண்பிள்ளைதான்
பேறுடனே நமக்குப் பிறக்கவே ணுமெனவே
சரவணப் பொய்கையிலே சாம்புவ னைநினைந்து
அரகரா அவள்தான் அன்றுநின் றதவமும்
இவர்தவத்துக் கொவ்வாது ஈசரரிலும் பெரிதாய்
அவர்தவமு மொவ்வாது அய்யா இவர்தவத்தே
சீதை தவசியதும் செப்பவொண்ணா தித்தவத்தே
நாத அரிச்சுனனும் நாட்டத் தவத்ததிலும்
எத்தனையோ கோடி இவர்தா னிருக்கும்தவம்
வித்தரிக்க வென்றால் வெகுமணிகள் சென்றிடுங்காண்
சொல்ல எளிதல்லவே சொன்னா லுலகிலுள்ளப்
பொல்லாத் பேரும் பொருந்தியிதைக் கேட்டாக்கால்
பாவந் தொலைந்திடுமே பாவிகட்கு மோர்நினைப்பாய்

நாமிருப் பதுவோ நாலு திரையதனுள்
ஆமவரே கண்டு அறிந்தா லதுவீதம்
இச்சொரூபத் துள்ளே இதுவிதிக்க வொண்ணாது
வச்சுகந்து பார்ப்பீரால் வழிதெரியு மிந்தேட்டில்
என்னமோ வென்று எண்ணம்வைத்துக் கேட்பீரால்
அன்னமுத லற்று ஆக்கினைக்குள் ளாவீர்
நல்லவர்கள் நல்லாவார் நானுரைக்கே னம்மானை
செல்லத் திருகேட்கச் செப்புகிறார் நாரணரும்

**விளக்கம்**:

நாராயணரே வைகுண்டமாக முப்பொருளும் ஒரு பொருளாக வந்திருந்து தன்னுடைய கருணையினால் சான்றோர் மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நல்வாழ்வு அருள வேண்டும் என்று தானே ஒரு மனிதர் போல் அங்கே உருக் காட்டி சர்வ சக்திகளையும் தனக்குள்ள அடக்கிக்கொண்டு தெட்சணத்தில் வந்து தவக்கோலத்தில் அமர்ந்தார். ஆறு வருட காலம் தவம் செய்கின்ற அந்த நேரத்தில் அவர் தான் நினைத்தபடி எல்லாம் அங்கே வகையாக வேண்டுமென்று தவம் மேற்கொண்டார்.

தர்மத்தை நிலைநாட்டவும் தீமைகளை அழிக்க வேண்டிய தவசு மேற்கொண்டார். அது மட்டுமல்ல கடலில் அவர் பெற்ற ஞான உபதேசத்தின் படி எல்லாம் நடத்தி காட்டுவதற்காக உடலுக்குள் சூட்சம் ஒன்றை குறியாக வைத்து வெளியில் எந்த விதமான அற்புதங்களையும் காட்டாமலும், அகத்தினுள் வைத்து பூசித்து அதிக தவசிறந்தார்.

அதாவது கலி என்பது மாய்கையாக எல்லோரிடமும் இருக்கிறது. இந்த கலியை வெல்ல வேண்டும் என்றால் ஒவ்வொரு வருடைய மனம் செம்மைப்பட வேண்டும். அதற்கு புற வழிபாட்டு முறை தேவை இல்லை என்று மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவருடைய தவத்தை மேற்கொண்டார். அவருடைய தவத்தினுடைய புதுமையை எடுத்துச் சொல்வது என்பது இயலாத காரியம் ஆகும்.

முன்னொரு சமயம் வேட்டுவனான மலையரசன் ஞான சொரூபிணியாகிய சக்தி தேவையை தனக்கு மகளாக வரவேண்டும் என்று சிவபெருமானிடம் வரம் பெற்று அதன்படி

அன்னையை குழந்தை உருவாக்கி அவரிடம் அனுப்பி வைக்க வேண்டும் என்று ஈசர் ஒரு தவம் இருந்தார். அத்தவம் இவருடைய தவத்திற்கு ஒவ்வாததாகும். மேலும் சூரப்பத்மனை அழிப்பதற்காக ஆறுமுகமாய் அரியதொரு ஆண் பிள்ளை உருவாக்க வேண்டும் என்று ஈசனை நோக்கி அன்னை பார்வதி தேவி சரவணப் பொய்கையில் சாம்புவனை நினைத்து இருந்த தவமும் இவருடைய தவத்துக்கு ஒப்பானது ஆகாது.

மேலும் ராவணன் வம்சத்தை வேரறுக்க வேண்டியும் தேவர்களின் சிறையை மீட்பதற்கும் வேண்டி சீதை அசோகவனத்தில் தவம் இருந்தாள். சீதையினுடைய தவத்தை விடவும் மேலானது வைகுண்ட மேற்கொண்ட தவம். மேலும் அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறு வதற்காக சிவபெருமானை நோக்கி இருந்த தவத்தை விடவும் இவருடைய தவம் எத்தனையோ கோடி பெருமை உடையதாகும். இவருடைய தவத்தினுடைய புதுமையை சொல்ல எளிதல்ல. ஆனால் சொன்னால் உலகில் உள்ள பொல்லாத பேரும் மனம் வைத்து கேட்பார்களேயானால் அவர்களுடைய பாவங்கள் எல்லாம் தொலைந்து விடும்.

நீச எண்ணங்கள் உடையவர்கள் கூட மனம் வைத்து கேட்பார்களேயானால் அவர்களுடைய பாவ வினையிலிருந்து விடுபடுவதற்கு இங்கு வழிகாட்டப்பட்டு இருக்கிறது. மேலும் ஏன் இவ்விதம் சொல்லப்படுகிறது எனில் மேற்படி தவங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் உட்பட்டு ஓரளவு தன்னலமும் கலந்தது. ஆனால் வைகுண்டர் இருந்த தவமோ அணு அளவு கூட சுயநலம் இல்லாத உலக உயிர்கள் அனைத்தும் விடுதலை பெறுவதற்காக செய்யப்பட்ட தியாகதவமாகும்.

தனக்கென எதுவும் வேண்டாத நிஷ்காமிய சூரிய தவமாகும். எனவே இத்தவம் முன்னெல்லாவற்றையும் விட அதிக சிறப்படையது என்று போற்றப்படுகின்றது. அதுபோல சுயநலம் எள்ளளவும் இல்லாமல் பொதுநல நோக்கோடு வாழ்பவர்கள் சிறந்த பேரின்ப வாழ்வை பெறுவார்கள் என்பதை இதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

"நாம் இருப்பதுவோ நாலு திரையதற்குள்" அதாவது கலியுகத்தில் வாழும் மக்கள் நாலு திரையாகிய மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் அந்த கிரணங்களான மாய்கைக்குள் சிக்கி

இருக்கும் நிலையைக் குறிக்கிறது. ஈஸ்வரூபம் என்பது ஞான சொரூபமாகும். ஞானம் என்பது மோனத்தின் எல்லை. அதைச் சொல்லால் விளக்கி புரிய வைக்க முடியாது. அவரவர் தங்களுடைய அந்தக் கரணமாகிய மாய திரையை விலக்கினால் மட்டும் அகமுகமாக உணரக்கூடியது.

அது மட்டுமல்ல வைகுண்டரின் உடைய அவதாரத்தினுடைய தத்துவமே தட்சிணாமூர்த்தியின் தத்துவம். பேசாத பரபிரம்மம். எங்கும் நிறைந்த பேரொளி. வைகுண்டருடைய சுட்சமத்தை உணர்ந்து கொள்ளத்தான் முடியும். யாருக்கும் உணர்த்த முடியாது. அவ்வாறு உணராதவர்களுக்கு என்ன சொல்லியும் பயனில்லை. எனவேதான் வச்சுகந்து பார்ப்பீரானால் வழி தெரியும் இந்த ஏட்டில் என்று சொல்லி இருக்கின்றார். அதாவது இந்த கலியுகத்தில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அய்யா வைகுண்டர் அகிலத்திரட்டு அம்மானையில் தெளிவுப் பெற விளக்கியுள்ளார்.

அகிலத்திரட்டு ஆகம நூல் படி வாழ்ந்தவர்கள் நன்றாவார்கள். அய்யா வைகுண்டரின் தவநிலையை உணர்ந்து அதன்படி நாம் நடக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் இறைவனுடைய பாதாரத்தை அடைவார்கள். அகிலத்திரட்டு அம்மானையில் அய்யா வைகுண்டர் அருளியுள்ள கருத்துகளை அது என்னவோ என்று எண்ணம் வைத்து கேட்பவர்கள் அன்ன முதலற்று ஆக்கினைக்கு உள்ளாவார்கள்.

அதாவது இந்த பருஉடலை வளர்க்கக்கூடிய உணவு கூட கிடைக்காமலும் அழிந்து, அதன் பிறகு பிறவிப் பிணியில் இருந்து விடுபட முடியாது துன்பக் கடலில் துன்பப்பட்டு மீண்டும் மீண்டும் பிறவி என்ற பிணியில் உழன்று அதிலிருந்து விடுபட முடியாமல் துன்பப்பட்டு கொண்டிருப்பார்கள். மனித பிறவியினுடைய நோக்கம் இறைவனை அடைவதாகும். அந்த மனிதப் பிறவி நமக்கு கிடைக்கப் பட்டுள்ளது. இந்த பிறவியின் நோக்கத்தினை உணர்ந்து இந்த பிறவிப் பிணியில் இருந்து விடுபட பாடுபட வேண்டும். அவ்வாறு செய்பவர்கள் நன்றாக வாழ்வார்கள்.

இவ்வாறு நல்ல குல சான்றோர் மக்களை வாழ வைப்பதற்காக வேண்டி அய்யா தவம் இருந்தார். அவ்வாறு தவம் இருக்குகின்ற போது சீமை ஐம்பத்து ஆறு தேசத்தில் உள்ள மக்கள் எல்லோரும் நிமிப் பொழுதில் வந்திட வேண்டும் என்று மனதில்

எண்ணுகின்றார். அவ்வாறு அவர் எண்ணிய மாத்திரத்திலே உயர்ந்தவர் தாழ்ந்தவர் எந்த வேறுபாடு இல்லாமல் மக்கள் வந்து அங்கே கூடுகின்றார்கள். வடக்கு, கிழக்கு, வடமேற்கு நேர்மேற்கு என்ற நான்கு திசையில் குடியிருக்கும் மக்கள் எல்லோரும் அங்கே வருகின்றார்கள். அப்படி வருகின்றவர்கள் சாணான் முதலாய் சாதி பதினெட்டும் நாணாமல் ஓடி வர வேண்டும் என்று வைகுண்டர் எண்ணினார்.

**வினாவிடை:**

1. சரவணா பொய்கையிலே சாம்புவனை நினைத்து தவம் இருந்தது யார்?
   அம்மை உமையவள்

2. வைகுண்டர் இருந்த தவத்தினுடைய பெருமையை யார் யாருடைய தவத்தோடு ஒப்பிட்டு கூற முடியாது என்று கூறினார்கள்?
   சிவபெருமான், அம்மை உமையவள், அர்ஜுனன், சீதை.

3. பாவிகளுக்கு கூட பாவம் தொலைவதற்கு அகிலத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்ற வழி யாது?
   கலியுகத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று வைகுண்டர் காட்டிய நெறியோடு வாழ்கின்றவர்களுக்கு பாவங்கள் தொலைந்து விடும்.

4. வச்சுகந்து பார்ப்பீரானால் வழி தெரியும் இவ்வேட்டில் இதில் இவ்வேடு என்பது எதைக் குறிக்கிறது?
   அகிலத்திரட்டு அம்மானை

5. கலியுக கடவுள் அய்யா வைகுண்டர் அவர் கூறிய வாழ்வியல் நெறிகளை இந்த அகிலத்திரட்டு அம்மானையில் அய்யா தந்திருக்கின்றார் அதை என்னவோ என்று எண்ணம் வைத்து கேட்டால் என்ன நிகழும்?
   அன்னம் முதல் அற்று ஆக்கினைக்குள் உள்ளாவார்கள்.

6. ஆக்கினைகள் என்பதை எதை குறைக்கிறது?
   இறை தண்டனைக்கு உள்ளாவதை பற்றி கூறுகிறது.

7. அய்யா தவமாக இருக்கின்ற போது அய்யாவை நாடி எத்தனை தேசத்து மக்கள் எல்லோரும் வந்தார்கள்?
56 தேசத்தினுடைய மக்களும் வந்தார்கள்.

8. அய்யா தவமாக இருக்கக்கூடிய நேரம் அய்யா வைகுண்டரை நாடி வந்த சாதிகள் எத்தனை?
பதினெட்டு சாதி மக்கள்

அய்யா மக்களுக்கு அருளல்

சீமையைம்பத் தாறு தேச நருட்களையும்
நேர்மை யொழுங்காய் நிமைப்பொழுதில் வந்திடவே
செல்லவை குண்டச் சீமானு மப்பொழுது
வல்ல தவமும் மனதுளரா தேமுடித்து
உலக நருட்கள் ஒக்கவொரு மிக்கவரத்
தலமளந்த நாதன் தானினைத்தா ரம்மானை
வடக்குக் கிழக்கு வடமேற்கு நேர்மேற்கு
நடக்கும் படியே நல்லதிக்கு நாற்றிசையும்
அடங்கல் குடியிருக்கும் ஆட்களெல் லாம்வரவே
சாணார் முதலாய்ச் சாதிபதி னெட்டையுமே
நாணாம லோடிவர நாரா யணர்நினைத்தார்
நினைத்த வுடனே நிமிசம் பொறுக்காமல்
தினந்தோறும் வந்து சேரும் நருட்களது
எண்ணக் கூடாது எவராலு மன்போரே
திண்ணமுள்ள சாதி செப்பொண்ணா தன்போரே
சாணா ரிடையர் சாதி வணிகருடன்
நாணாத காவேரி நல்லதுலுப் பட்டர்முதல்
சூத்திரன் பிரமா தொல்வணி கன்பறையன்
ஊத்திர நீசன் உழவ னுடன்குறவன்
கம்மாள னீழன் கருமற வன்பரவன்
வெம்மா நசுறாணி வேகவண்ட ரிடையர்
சக்கிலிய னோடு சாதிபதி னெட்டுகளும்
முக்கிய மாக ஓடிவந்தா ரம்மானை
ஆகாயங் காணாது அறைக்குள் ளடைத்திருந்த
வாகா ஸ்திரீமாரும் வந்தார்கா ணன்போரே
கிழவன் முடவன் கெற்ப ஸ்திரீமாரும்
இளவயசு கொண்ட ஏந்துபச லைமுதலாய்

ஒக்கவே வந்தார்காண் உடையவனார் தன்னிடத்தில்
வந்த நருட்கெல்லாம் வாய்த்தவலு வியாதிமுதல்
சிந்தையுடன் தன்னால் தீர்த்தாரே தர்மமதாய்
ஐம்பது வயதாய் அரைதளர்ந்தப் பெண்ணாட்கும்
சம்பத்துக் கேற்ற சந்ததிகள் தான்கொடுத்தார்
உடல்தன மில்லாது உருவழிந்த பெண்ணாட்கும்
சடலமுருக் கொடுத்துச் சந்ததி யுங்கொடுத்தார்
பிறவிக் குருடூமை பேச்சறா நாக்குழறல்
திறவி யொளிபோல் திறமும் மொழிகொடுத்தார்
தர்மமில்லாப் பாவிகட்குத் தாண்மை மிகக்கொடுத்தார்
கர்ம வியாதிகளால் கால்கள்மொட்டிக் கைகள்மொட்டி
அந்தமொட்டி யெல்லாம் அறத்தா லதைத்தீர்த்துச்
சந்தமுடன் கைகால் தானாக்கித் தான்கொடுத்தார்
உடலை யுருக்கும் உற்ற சயஇருமல்
குடலைப் புரட்டும் குன்மவாய் வுமுதலாய்த்
தீர்த்துக் கெடுத்தார் தேசத்தோர் கண்டுமிகப்
பார்த்துப்பார்த் துமகிழ்ந்துப் பச்சமுற்று வந்தனர்காண்
கர்த்தாதி கர்த்தன் கடவுளா ரென்றுசொல்லி
என்தேசத் தோரும் இங்குவந்தா ரன்போரே
பதிணென் சாதிகளும் பண்பா யொருதலத்தில்
விதிவந்து தென்று மேவிக்குலா வியிருந்தார்
மேவிக் குலாவி மிகவே யொருதலத்தில்
ஆவிநீ ருண்டு அகமகிழ்ந்தா ரம்மானை
நொம்பலங்க ளெல்லாம் நிசமாகத் தீருவதும்
அன்பா யுலகில் ஆனதே சத்தோரும்
ஒருதலமாய் வந்து ஒன்றாய்க் குவிகிறதும்
கருதினமாய்ப் பார்த்து அவர்கள் மிகவுரைப்பார்
முன்னாள் மொழிந்த முறையாக மம்போலே
இந்நாள் சமைந்திருக்கு தென்று மகிழ்ந்துரைப்பார்
வைகுண்ட ராசர் வருவார்தான் பூமியிலே
மெய்கொண்ட ராசர் மேதினியில் வந்தவுடன்
சாதிபதி னெண்ணும் தலமொன்றி லேகுவிந்து
கோதிக் குளிக்கும் ஒருகிணற்றி லல்லாது
கர்மவியா திசெவிடு கண்குரு டூமையெல்லாம்
தர்மத்தால் தீர்த்தார் சகலவுயி ரானதுக்கும்
செல்வ முண்டாகும் சீமானார் வந்தவுடன்
அல்லல் மிகத்தீரும் அவரை யறிந்தவர்க்கு

எளியோர் வலியோர் எல்லா மொருப்போலே
பழியான பேச்சுப் பாரினில் கேட்கவிடார்
தேசமெல்லாம் பரக்கும் சீமானார் வந்தசெய்தி
தோசமெல்லா மகலும் சுத்தமாய்க் கண்டவர்க்கு
சார்ந்தவர்க்கு சாந்தனுமாய்த் தர்மங்கொடுத் தருள்வார்
சேர்ந்தவர்க்கு நல்ல செல்வமுண் டாகுமெனச்
சொல்லியிருந் தாகமத்தின் துல்யச் சுருதிப்படி
நல்லவை குண்டர் நாட்டில்வந்தா ரென்றுசொல்லி
சாதிபதி னெண்ணும் சடல வரவுமற்று
ஆதிவை குண்டர் அடிவீழ்ந் தேத்தியவர்
எல்லா மொருதலத்தில் இரண்டு மனுப்போலே
அல்லோரும் வந்தோர் ஆவிநீ ருண்டிருந்தார்
அல்லாமல் முன்னாள் ஆகமத் தின்படியே
எல்லாமுன் வியாசர் எழுதின சொற்படியே
தெய்வச்சான் றோர்களுக்குச் சேர்ந்த வியாழமது
மெய்வகையாய் வந்து மிகத்தோன்றி யேயிருக்க
இன்ன மிவர்வழியில் இயல்பாய் மணமுகித்து
மன்னர் வைகுண்டர் மகராச ராகியவர்
சீமையைம்பத் தாறும் சொல்லொன்றுக் குள்ளாக்கி
மேன்மைச் சான்றோர்க்கு முத்திரிசெங் கோல்கொடுத்துத்
தாழ்வில்லாச் சான்றோரைத் தர்மபதி மீதில்வைத்து
ஆள்வதுவும் நிசமே ஆதியா கமப்படியே
நாரா யணர்க்கு நாள்பகையாய் வந்தவர்க்குப்
போரா தெனக்காலம் புராண முரைக்கிதுகாண்
சொல்லி யுலகோர் தொல்புவியில் கொண்டாடிப்
பல்லுயிரு மறிந்து பண்பாய் மகிழ்ந்திருந்தார்
மகிழ்ந்து சிலநாள் வைகுண்டர் பாதமதில்
மிகுந்துபல சாதிமுதல் மிகவந் துரைகேட்டார்
வந்த நருளறிய வைகுண்டர் வாய்திறந்து
சொந்தமுடன் வசனம் சொல்லிமிகக் கூறலுற்றார்

**விளக்கம்**:
அதாவது சாதி கொடுமைகள் தலைவிரித்து ஆடிய அந்த நேரத்தில் இறைவனுடைய சன்னிதானத்திற்கு யாரும் செல்லக்கூடாது என்று அங்கு அடக்குமுறை நிகழ்ந்து கொண்டிருந்த அந்த தருணத்தில் எல்லோரும் இறைவன் முன்பு சமம் என்பதை இந்த உலகிற்கு உணர்த்துவதற்காக வேண்டி, சாதி பதினெட்டாக கலிநீசர்களால்

உருவாக்கி வைக்கப்பட்டு இருந்த சாதி வேற்றுமையை தகர்த்து எறிந்து எல்லோரும் இறைவனின் பிள்ளைகளே என்று இந்த உலகிற்கு உணர்த்தும் பொருட்டு எல்லா வகையான சாதி மக்களும் வர வேண்டும் என்று நினைத்தார்.

வைகுண்ட பரம்பொருள் நினைத்த மாத்திரத்திலேயே சாணான், இடையன் சாதி வணிகன், காவேரி, நல்ல துலுக்கன், பட்டர், சூத்திரன்,பிராமணன், தோல் வாணியன், பறையன், கம்மாளன், ஈழன், கருமாளவன், வேகவண்டர், இடையர், சக்கிலியன் முதலான சாதி பதினெட்டுகளும் அய்யாவை நாடி ஒரு தலத்தில் ஓடி வந்தார்கள். அது மட்டுமல்லாமல் வீட்டை விட்டு வெளியில் வராமல் அறைக்குள் அடைந்திருந்த பெண்களும் அய்யாவை நாடி வந்தார்கள். இதையே அய்யா ஆகாயம் காணாது அறைக்குள் அடைந்திருந்த வாகா ஸ்ரீ மாரும் வந்தார்கள் என்கின்றார்.

காரணம் பெண் கொடுமை அதிகப்பட்டு இருந்த காரணத்தினால் இறைவன் முன்பு அனைவரும் சமம் என்ற சமத்துவத்தை உணர்த்தவும் இறைவனுக்கு தொண்டு செய்வதற்கு ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பதை உணர்த்துவதற்காகவும் இங்கே பெண்களையும் அய்யா வர வைக்குகின்றார். மேலும் கிழவன், முடவன், கர்ப்பஸ்தீ மார் இளம் வயது கொண்ட ஏந்து பசலை முதலாக எல்லோரும் அங்கே அய்யாவின் உடைய பாதாரத்தை நாடி வந்தார்கள். அய்யா சிந்தவுடன் எல்லா மக்களும் அவரை நாடி வந்தார்கள்.

தன்னை நாடி வந்தவர்களுடைய கர்ம வினைகளையும் சஞ்சலங்களையும் தண்ணீராலும்,மண்ணாலும், தர்மத்தாலும் நீக்கி வைத்தார். அது மட்டுமல்ல ஐம்பது வயதாய் அரை தளர்ந்த பெண்ணார்க்கு சம்பத்துக்கு ஏற்ற சந்ததிகளைத் தான் கொடுத்தார். இவர்களால் குழந்தை ஈன்றெடுக்கும் பாக்கியம் இல்லை என்று எல்லோராலும் கைவிடப்பட்டு இருந்தவர்களுக்கு கூட பிள்ளை பாக்கியம் கொடுத்து தன்னுடைய சக்தியை மக்களுக்கு வெளிப்படுத்தினார்.

இவ்வாறு உடல் தனம் எல்லாம் இழந்து அரைத்தளந்த பெண்ணார்க்கு கூட சம்பத்து ஏற்ற சந்ததிகளை தான் கொடுத்தார். அது மட்டுமல்லாமல் உடல் தரமில்லாது உரு அழிந்த பெண்ணார்க்கும் சடல உருகொடுத்து சந்ததியும் தான்

கொடுத்தார். அதாவது நோய்வாய்ப்பட்டு உடல் மெலிந்து உரு அழிந்து போன நிலையில் உள்ள பெண்களுக்கும் அவர்களுடைய நோய்களை மாற்றி சடல உருகொடுத்து சந்ததியும் கொடுத்தார்.

பிறவி குருடர்களுக்கு கண் பார்வைக் கொடுத்தார். ஊமைகளை பேச வைத்தார். பேச்சுத்திறன் இல்லாதவர்களுக்கு நல்ல பேசும் திறனும் மொழியும் கொடுத்தார். தர்மம் இல்லா பாவிகளுக்கு தாழ்மையும் பொறுமையும் நல்ல புத்தியையும் கொடுத்தார். தீராத வியாதிகளால் பீடிக்கப்பட்டு அவதி பட்ட மக்களுக்கும் அவ்வியாதிகளை குணமாக்கி நல்ல உடல் வலிமை கொடுத்தார். உடலை உருக்கும் உற்ற சய இருமல் மற்றும் குடலைப் புரட்டும் குன்ம வாய் முதலாய் நாலாயிரத்து நானூற்று நாற்பத்து எட்டு வகையான நோய்களையும் தண்ணீர் மண்ணால் தீர்த்து வைத்தார்.

இதனால் உலக மக்கள் எல்லாம் அவரை கர்த்தாதி கர்த்தர் கடவுளார் என்றுச் சொல்லிப் பார்த்து மகிழ்ந்து அய்யாவை நாடி வந்த வண்ணம் இருந்தனர். இவ்வாறு மேவி குலாவி மிகவே ஒரு தரத்தில் எல்லோரும் ஒன்றாக இருந்தார்கள். பதினெட்டு சாதிகளும் பேத புத்தி இன்றி தன் இயல்பு நிலை உணர்ந்து ஒரு தலத்தில் கூடி குலாவி ஆவி நீர் உண்டு சமூக நல்லிணக்கத்தோடு மகிழ்ந்து இருந்தார்கள். இவ்விதமாக நொம்பலங்கள் எல்லாம் நிசமாக தீர்வதைப் பார்த்து அனைவரும் ஒரு தலத்தில் கூடி மகிழ்வதையும் பார்த்து அறிந்த நல்ல அறிவோர் எல்லாம் முன்னாள் மொழிந்த முறை ஆகமம் போல் இந்நாள் சமைந்திருக்கிறது என்றுக் கூறி மகிழ்ந்திருந்தனர்.

வைகுண்டராஜர் இந்த பூமியிலே வருவார். அவர் வந்த உடனே சாதி பதினெட்டு ஒரு தலத்திலே கூடி ஒரு கிணற்று நீர் அருந்தி மகிழ்ந்திருப்பார்கள். கர்ம வியாதி கண் குருடு, செவிடு, ஊமை முதலாக அனைத்து வியாதிகளில் இருந்தும் அவர்கள் அவர்களை விடுவித்து சகல உயிர்களுக்கும் அவர் சகல உயிர்களுக்கும் அவர் நல்லளுள் புரிவார். ஆகவே எல்லோர்க்கும் மகிழ்வு உண்டாகும் என்று அங்கு எல்லோரும் சொல்லி இருந்தார்கள். "செல்வம் உண்டாகும் சீமானார் வந்தவுடன் அல்லல் மிக தீரும் அவரை அறிந்தவர்க்கு" இங்கு செல்வம் என்பது இறைவனின் திருவருளாகும்.

அல்லல் என்றப் பிறவி பிணியிலிருந்து விடுபடுவதற்குரிய வழிகளைக் காட்டி அவருடைய திருவருளால் வலியோர் எளியோர் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு எல்லோரும் ஒன்றாக இருப்பார்கள்.பழியான பேச்சு பாரினில் கேட்காது. " தேசம் எல்லாம் பறக்கும் சீமானார் வந்த செய்தி" அய்யா வைகுண்டர் அவதாரமானது உலகம் எங்கும் தெரியவரும். இதனால் தோஷமெல்லாம் அகலும் சுத்தமாய் கண்டவருக்கு" அதாவது உண்மையா அய்யாவை நம்பி பிடித்தவர்களுக்கு எல்லாவித தோஷங்களும் அகன்று விடும். சார்ந்தோர்க்கு சந்தனமாய் தர்மம் கொடுத்தருள்வார்.

அதாவது அவரை நம்பி வந்த நல்லவர்களை தற்காத்து அவர்களுக்கு வேண்டிய நல்ல அருளை எல்லாம் கொடுத்து அருள்வார். அவரிடம் சேர்ந்தவர்களுக்கெல்லாம் நல்ல செல்வம் உண்டாகும் என்று சொல்லி இருந்த ஆகமத்தின் திரு முறைப்படி வைகுண்ட நாட்டில் வந்திருக்கிறார் என்றும் சாதிபதினென்னையும் சடல உருமாற்றும் அதாவது சாதி வேற்றுமையை அறுத்து எல்லோரும் ஒரு இனமாக ஆதி வைகுண்ட அடிபணிந்து வணங்கி நின்றார்கள்.

அதாவது ஜாதி பிரிவினையால் ஒற்றுமை குன்றித் துயருற்ற மக்களெல்லாம் பகவான் அருளால் பிறப்பால் பேதம் பாராட்டாமல் எதிர் எதிர் துருவங்கள் ஒன்றையொன்று ஈர்ப்பது போல் ஈர்க்கப்பட்டு பகவான் முன்னிலையில் அவரை தொழுது வணங்கி நின்றனர். அனைவரும் ஆண்மநேயத்துடன் அன்பு குடி கொண்ட மக்களாகிய பசுவும் புலியும் ஒரு பக்கம் நீருண்டது போல் ஆவி நீர் உண்டு இருந்தனர்.

அதாவது இறைவன் ஒன்றே பிறப்பால் எந்தவிதமான பேதங்களும் இல்லை அனைவரும் அவரவர் செய்கின்ற தொழிலால் கலிநீசன் பிரிவினையை உருவாக்கி ஒற்றுமை குலைத்தான் என்பதை உணர்ந்து, அய்யாவை நாடி வந்ததன் பின்னர் வேற்றுமையை மறந்து ஒற்றுமையாக அய்யாவின் முன்பு நின்றார்கள். அது மட்டுமல்ல அய்யாவின் உபதேசங்களை அறிந்த மக்கள் தன்னுடைய உடல் உணர்வை கடந்து பக்குவம் அடைந்து இறைவனின் திருவருளால் மெய்ப்பொருளை அறியும் பேரறிவு பெற்றவர்களாக மகிழ்ந்து இருந்தார்கள்.

மேலும் முன்னாள் ஆகமத்தின் முறைப்படியே எல்லாம் நடைப்பெறுகிறது. இது முன்னர் வியாசர் எழுதிய எழுத்தின் சொல்படியே நடந்து கொண்டிருக்கின்றது. ஆகையால் நல்ல குணமடைய தெய்வச் சான்றோர்களுக்கு சேர்ந்த வியாழம் வருகின்றது. அதாவது உண்மையாக இறைவனை பற்றி பிடித்து நம்பி வாழ்ந்த சான்றோர் மக்களுக்கு எல்லாம் இனி இயல்பாக நடைபெற இருக்கின்றது. அந்த சான்றோர் குல மக்களை எல்லாம் தன்னோடு ஐக்கிய படுத்தி வைகுண்டர் ஒரு சொல்லுக்குள் இந்த உலகை ஆள இருக்கின்றார்.

சான்றோர் மக்களுக்கு முத்திரி செங்கோல் கொடுத்து தர்மபுவி மீதில் வைத்து ஆள்வது நிஜமாம் என்று ஆதி ஆகமத்தில் சொல்லப்பட்டிருந்தபடி இப்போது நடைபெற இருக்கின்றது. அது மட்டுமல்ல நாராயணனுக்கு நாள்பகையாக வந்தவர்களுக்கு போராத காலம் என்று புராணம் உரைக்கிறது. தீமைகளை அதிகம் செய்து கொண்டு வந்து நன்மைகளை அழித்துக் கொண்டிருந்த கலிநீச நீசர்களுக்கு எல்லாம் அழிவு காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்றது என்று மக்கள் எல்லாம் மகிழ்ந்து அவர் அருகில் குழுமி இருந்தார்கள். அவ்வாறு எல்லோரும் அய்யாவை நாடி இருந்த போது எல்லோரும் அறியும் படியாக ஒரு திருவாசகத்தை வைகுண்டர் எழுதி அனுப்புகின்றார்.

**வினாவிடை:**

1. வைகுண்ட தவமாக இருக்கின்ற போது அவரை நாடி வந்து பலன் பெற்ற மக்கள் யார் யார்?
   கிழவன் முடவன் கர்ப்பஸ்திரீமாரும் இளம் வயது கொண்ட பசலை முதலாய் ஆகாயம் காணாமல் அறைக்குள் அடைந்திருந்த பெண்களும் வந்து பலன் பெற்றார்கள்.

2. அய்யா வைகுண்டர் தன்னை நாடி வந்த மக்களுக்கு என்ன என்ன உபகாரகங்களை செய்தார்?
   தன்னை நாடி நோய் என்று வந்தவர்களுக்கு நோய் தீர்த்தார். பிள்ளை இல்லை என்று வந்தவர்களுக்கு பிள்ளை கொடுத்தார். உடல் ஊனமாக வந்தவர்களுக்கு உடல் ஊனத்தை மாற்றிக் கொடுத்தார். குருடர்களுக்கு கண் பார்வை கொடுத்தார். ஊமைகளுக்கு பேச்சு வருவதற்கான வழிகளை செய்து

கொடுத்தார். தர்மம் இல்லாத பாவிகளுக்கு தாழ்மை கொடுத்தார். கர்ம வியாதியால் கால் மொட்டை கைமொட்டை என்று வந்தவர்கள் அவர்களுடைய வினைகளை தீர்த்து வைத்தார். உடலை உருக்குகின்ற உற்ற சய இருமல் மற்றும் குடலை புரட்டும் குன்ம வாயு முதல் இவற்றையெல்லாம் தீர்த்துக் கொடுத்தார்.

3. எத்தனை வயதாய் அரைத்தளர்த்த பெண்ணாள்க்கு அய்யா சம்பத்துக்கு ஏற்ற சந்ததிகளை கொடுத்தார்?
   ஐம்பது வயதாய்

4. தர்மம் இல்லா பாவிகளுக்கு அய்யா என்ன கொடுத்தார்?
   தாழ்மை கொடுத்தார்

5. தேசம் எல்லாம் பறக்கும் சீமானார் வந்த செய்தி இதில் கூறப்பட்டுள்ள சீமான் என்பது யார்?
   அய்யா வைகுண்டர்

**திருவாசகம் - 4**

1008 ஆம் ஆண்டு மாசியில் கடற்கரையாண்டி நாராயணம் பண்டாரம் தெச்சணம் பள்ளிகொண்டுகாணிக்கை கைக்கூலி காவடி முதல் என்றனக்கு அவசியமில்லை யென்று, தர்மம் நித்திச்சு, கொற்றவரும் மாண்டு குறும்பு மிகத்தோன்றி, உற்ற துலுக்கன் உடன் வந்துடனோடி, மற்றொரு பத்தாமாண்டில் வைகுண்டம் வருவோ மென்ற ஆகமத்தின்படி வந்து வைகுண்டம் பிறந்து கொண்டிருக்கும் நச்சேத்திரத்தில் குதிச்சிக் கொள்ளுந்தன்னே, மாளுவது மாண்டு கொள்ளுந் தன்னே, முழிக்கப்பட்டது முழிச்சி கொள்ளுந்தன்னே, முழிக்கப்பட்டது கண்டு கொள்ளுந்தன்னே, ஒரு நெல் எடுத்துடைக்க நாடு கேட்டுக் கொள்ளுந்தன்னே, இரு நெல் எடுத்துடைக்க நாடு தாங்காது தன்னே, வானமும் பூமியும் கிடுகிடென்றாடிடுந் தன்னே, வானத்திலிருக்கிற வெள்ளிகளெல்லாம் ஆலங்காய்போல் உதிர்ந்திடுந்தன்னே, மலைகள் இளகிடும் தன்னே, பதி எழும்பிடும் தன்னே, முழிக்கப்பட்டது கண்டுகொள்ளுந்தன்னே. என்று நருட்களறியும்படி உபதேசித்துக் கொண்டிருந்தார்

அதை உலகோர் அறிந்தும் கேட்டும் முன்னுள்ள ஆகமமுஞ்சரி, இவர் சொல்கிறதுஞ் சரியென்று ஒத்துக்கொண்டு இவர்தான் வைகுண்ட சுவாமி யென்று கேட்டறிந்து, இவர் தலத்திலே போவோமென்று வந்தார்கள் பின்னும் நாராயண வைகுண்ட சுவாமிதானே, பேய் பல சீவசெந்து ஊர்வனம் புற்பூண்டு கற்காவே ரியறிய உபதேசித்தார். எப்படி யென்றால், வல்லாத்தான் வைகுண்டம் பிறந்து காணிக்கை கைக்கூலி காவடி ஆடுகிடாய் கோழி பன்றி இரத்தவெறி தீபதூபம் இலைப்பட்டை இது முதலானதென்றனக்கு வேண்டாம் அவசியமில்லையென்று, தர்மம் நித்திச்சு நாடு குற்றங்கேட்க நாராயணம் சிறையிருக்கும்போது, இனி ஆரேக்கார் என்று பார்க்க,
அதையறிந்து நீங்களும் ஒதுங்கியிருங்கோ வென்று உபதேசித்தார்,

உடனதுகளெல்லாம் அய்யாவாணை நாங்களொன்றும் ஏற்கமாட்டோமென்று சொல்லிப் போனார் உடனே நாராயண வைகுண்ட சுவாமி தானே ஒராண்டு ஒன்னரையாண்டு கழித்து உகஞ்சோதித்து வரும்போது, பேய் செய்கிற அன்னீதம் பொறுக்காமல் மானிடர் வைகுண்ட சுவாமியிடம் வந்து ஆவலாதி வைத்தார் உடனே வைகுண்டராசரும் திட்டிச்சுப் பார்க்கும் போது பேய் செய்கிறது அன்னீதந்தான் என்றறிந்து பேய்களுக்குள்ள முன்னாகமக் கணக்கைச் சோதித்துப் பேயை எரிக்கவேணு மென்று நாராயண வைகுண்ட சுவாமி தானே மனதிலுத்தரித்தார்.

பேய்களை எரித்தல்

விருத்தம்

பேய்கள்தான் பிறந்த வாறும் பெருவரம் பெற்ற நாளும்
மாய்கையால் உலகில் பேய்கள் வந்ததோர் நாளும் பார்த்து
ஞாயமாய் நடுவுங் கேட்டு நாமதை யெரிக்க வென்றே
ஆயர்முன் னெழுத்துங் கொண்டு அருள்முனி வரவே யென்றார்

விருத்தம்

வரவென வுரைத்த போது மறைமுதல் வேதன் வானோர்
துரகத மீதோ டாவிச் சீக்கிரம் வந்தா ரங்கே
பரமருள் வைந்த ராசர் பார்த்தவர் தன்னை நோக்கி
விரைவுடன் பேய்க்கு முன்னாள் விதிதனைப் பாரு மென்றார்

விருத்தம்

விதிதனைப் பார்த்து வேதன் விளம்புவான் வைந்த ரோடு
துதிகொடு எழுத்து மென்றன் சுருதியுங் கேண்மோ அய்யா
ஆதிநாரா யணர்தா னிந்த அழிகலி யுகத்தி லேதான்
பதிவை குண்ட மென்று வந்தன்றே யவர்கள் போனார்

விருத்தம்

பேயொடு பசாசு கூளி பொறாமையுங் கலியும் நீசம்
மாயொடு கபடு கள்ளம் மனக்கறுப் புகங்கள் தீர்ப்பு
பொய்யொடு மிரட்டு வஞ்சம் பிழைபொல்லாப் பென்ற
தெல்லாம்
வாயொடு வாயால் கெட்டு மறுபிறப் பில்லாப் போனார்

விருத்தம்

நாரணர் வைகுண்ட மாகி நாட்டினில் வந்த அன்றே
காரண மெல்லா மாச்சு கலியுக மழிந்து போச்சு
பூரண வேத நூலும் புராணமுன் னாக மங்கள்
சாரமுங் கெட்டுப் போச்சு சதாசிவம் வைகுண்ட மாச்சே

விருத்தம்

அழிவதை யழித்துப் போட்டு அவரொரு சொல்லுக் குள்ளாய்
சுழிவரை யெழுத்தை யூனி தெய்வமா தவரு மாகி
வழிதனில் வன்னி யாகி வகுத்திடும் மகவோ ராகி
அழிவில்லாப் பதிதா ளாள்வார் ஆகமத் துரைதா னென்றார்

விருத்தம்

ஆனதா லாகா தென்ற அவ்வகைக் கிதுநாள் சாக
ஏனமு மிதுதா னென்று இயம்பிட வேதன் தானும்
மானமாய்க் கேட்டு வைந்தர் வானவர் சாட்சி யென்று
தானவர் கணக்கி லூனி சத்தியாய்ப் பதித்தா ரன்றே

விருத்தம்

கணக்கிலே யெழுதிக் கொண்டு கருத்தினி லடக்கி வைத்து
இணக்கியே யவரை யெல்லாம் இலக்குலக் கதிலே கொல்வோம்
பிணக்கியே கொல்லே னானும் பிசகில்லா வழியே செய்வோம்
குணக்கில்லாச் செய்வோம் பாரும் கோகிரித் தேவ ரெல்லாம்

விருத்தம்

உகசிவா வானோர் வேதன் ஒருவரும் போக வேண்டாம்
வகையுடன் நான்தான் செய்யும் வழிதனைப் பார்த்துக்
கொள்ளும்
இகபரன் முதலா யிங்கே இருமெனச் சொல்லி வைத்துப்
பகைசெய்த கழிவை யெல்லாம் எரிக்கவே பரனங்குற்றார்

நடை

ஈசர்முதல் வானோர் எல்லோரும் போகரிது
வாச மலரோனும் மற்றோரும் போகரிது
என்று இவர்களையும் இவர்சூ ழருகிருத்தி
அன்றுபேய் கொண்டுவர அவர்நினைத்தா ரம்மானை
உடனே யுலகமதில் ஊர்ந்துதிரி யும்பேய்கள்
திடமே குளறி சிந்தை மிகக்கலங்கி
பேய்க ளொருதலத்தில் பிரமாண மாய்க்கூடி
மாய்கைத் தொழில்குளறி மனது மிகஅளறிச்
சீல முடனுரைத்த சிவவைந்த ராசர்மொழி
ஏலமேநாம் கேட்டு இருந்திலமே எல்லோரும்
என்னவோ வென்று எண்ணி நினைத்ததெல்லாம்
சன்னைபோ லாகாமல் சாக விதியாச்சே
அய்யோ கெடுத்தோம் அவர்பேரில் குற்றமில்லை

பொய்யென் றிருந்தோமே பெரியோ ருரைத்ததெல்லாம்
நம்பேரில் குற்றமல்லால் நாரணர்மேல் குற்றமில்லை
தம்பேரில் குற்றமல்லாமல் சாமிமேல் குற்றமில்லை
நமக்கு முன்னாளில் நாரத மாமுனிவர்
எமக்குயாமி யங்கொடுத்து அதிகவரம் வேண்டித்தந்தார்
அவரிடத்தில் நாமள் எல்லோரும் போயுரைத்தால்
சிவனிடத்தில் வந்து செய்திகேட் டேயுரைப்பார்
போவோம் வாருங்கோ பேய்க ளொருப்போலே
கோவேங் கிரிதனிலே குடியிருக்கும் மாமுனிவர்
அண்டை யவரணுகி அபயம் முறையமென்றார்
கண்டந்த மாமுனிவர் கழிவையெல் லாமமர்த்தி
அபயமிட்ட தேது அலகைகளே சொல்லுமென்றார்
கௌவை துயரமுற்ற கழிவெல்லாஞ் சொல்லலுற்று
மனுவுருப்போல் வையகத்தில் வைகுண்டம் வந்திருந்து
இனியுங்க ளையெல்லாம் எரிப்போ மிப்போதெனவே
முனிவாங்கிதந்த வார்த்தை முன்னாலே வையுமென்று
வரங்களையும் வைத்து மாண்டுபோங் கோவெனவே
துரத்தனமா யெங்களையும் துடர்ந்து பிடிக்கிறார்காண்
பதறியிங் கோடிவந்து பாட்டையும் மோடுரைத்தோம்
இதறு தனைத்தீர்த்து இரட்சிப்பீ ரென்குருவே
என்றுபே யெல்லாம் இப்படியே சொன்னவுடன்
அன்று தலையோடு அந்தமுனி தானடித்து
வைகுண்டம் பூமியிலே வந்து பிறந்தாரென்றால்
மெய்கொள் சிவன்முதலாய் மேல்பிறக்க வேணுமல்லோ
சத்தி சிவன்வரையும் சத்துப் பிறக்கணுமே
பக்தியில்லா கூளிகளே பகருவோமென்றாலும்
பொல்லாப் பிசாசுகளே புத்திகெட்டுப் போனீர்களே
வல்லாத்தா னல்லோ வைகுண்ட மாபொருளும்
அவர்நா மங்கேட்டால் அல்லவென்று சொல்வதுதான்
சீவபரன் முதலாய்ச் சிந்தை பதறணுமே
உங்களுட மூப்பு உகத்திலினி வாராது
எங்களுட மூப்புவரை இல்லையென்று போகுதுகாண்
எல்லா மவர்மூப்புக் குள்ளே யடங்குதுகாண்
பொல்லாப் பசாசுகளே பொன்றவிதி யுங்களுக்கு
ஆனாலு மீசர் அமைப்புக் கணக்கெடுத்து
நானே யிதுமேவித் தாறேனென் றிப்போது
இந்தக் கணக்கும் ஏழு யுகக்கணக்கும்

எந்தக் கணக்கும் இருப்பு மவரிடத்தில்
ஆனால் கணக்கை அவரிடத்தில் நாமள்போய்
நானாகச் சொல்லி நற்கணக் கும்பார்த்து
அறிந்துகொள்ள லாமெனவே எல்லோரும் போவோமென்று
மறந்துபோகாமல் மனதுள்மிக மகிழ்ந்து
நாரத மாமுனியும் நாட்டில்பே யத்தனையும்
காரண வைகுண்டர் காலில்வந்து தெண்டனிட்டார்
தெண்டனிட்ட போது சொல்வார் முனியுடனே
பண்டா கமப்படியே பசாசையெல் லாமெரிக்க
என்மனதி லுற்றேன் இங்கேவந்து வாய்த்ததென்று
நன்முனியே பேயை நகன்றிடாக் காருமென்றார்
முன்னேநீ பேய்க்கு முதல்யா மியங்கொடுத்து
இந்நேரங் கூட்டி என்னிடத்தில் கொண்டுவந்தாய்
வந்தது நல்லதுதான் வாய்த்தமுனி யேயிப்போ
இந்தாப் பேய்க்கணக்கை எடுத்துரைக்கேன் கேட்டிருநீ
பொல்லாக் கலியன் பிறந்தநா ளன்றுமுதல்
நல்லவைகுண்டம் நாட்டில் வரும் வரையும்
எல்லாம் பேய்களுக்கு ஈந்தவர மானதினால்
வல்லவரான வைகுண்டபெம்மானும்
நீசன் கொடுமை நீணிலமெல் லாம்பரந்து
தேசச் சிறப்புச் சிதறிக் குலைந்ததெல்லாம்
வாயநா ராயணரும் வைகுண்ட மாய்ப்பிறந்து
ஞாய நடுகேட்டு நாட்டுக்குற்றந் தீர்த்து
ஆகாத்த தெல்லாம் அழித்துநர கத்திலிட்டு
வாகாய் நரக வாசல் தனைப்பூட்டி
நல்லோர்க்கு நாலு வரங்கொடுத் தேயெழுப்பி
பொல்லாரை நரகில் போட்டுக் கதவடைத்து
வல்லோரைச் சொல்லொன்றுள் வைந்த ரரசாளப்
பிறந்துபூ மிதனிலே பேறாக வந்தவுடன்
இறந்ததுகாண் பேய்கள் இவர்க்காகாப் பேர்களெல்லாம்
என்று பேய்களுக்கு ஈந்துவரம் கொடுத்ததெல்லாம்
அன்று பேய்க்கணக்கு வாசித்தா ராதியுமே
இம்மணியி லித்திவசம் ஈந்தவர மல்லாது
எம்மணியு மிப்பேய்க்கு எள்ளளவு மில்லையென்றார்
உண்டோகாண் பேய்க்கு ஒருமணிதா னானாலும்
கண்டோ முனியே கணக்குண்டோ சொல்லுஇனி

கேட்டு முனியும் கெஞ்சிமிக வாய்புதைத்து
நாட்டுக் குடைய நாரா யணருரைத்தால்
எவர்தா னெதிர்த்து இல்லையென்று சொல்லுவது
மூவரு மங்கே ஒடுங்கி யிருக்கையிலே
அல்லாமல் நீசன் அழிவாகு முன்னதியாய்
எல்லாமவ னோடுளது ஏலமே சாகணுமே
நீசன் வலுவெல்லாம் நேர்முன்னே தானறுத்து
ஓசையொன்றுக் குள்ளே உகங்கேட்க நிச்சயித்தீர்
நன்றிகெட்ட நீசன்வேர் நாள்வழியே நீரறுத்து
ஒன்று விளிக்குள் உகமழித்துத் தீர்ப்புசெய்து
நல்லோரை யெழுப்பி நகரொருசொல் லுள்ளான
வல்லோராய் நீரும் வரம்பெற்ற மாதவமே
ஆனதினால் பேய்கள் அந்நீசக் குலமதினால்
வானக் கனலில் மாளுமிக் காலமிதாம்
என்று முனியுரைக்க ஏற்றவை குண்டமுதல்
நன்று முனியே நம்பேரில் குற்றமில்லை
முன்னுள்ள ஆகம முறைநூற் படியாலே
என்னூ லொழுங்கில் எரிக்கிறே னிப்பேயை
மாமுனியே நீசாட்சி மாயாண்டி நீசாட்சி
நாமுனியே சாட்சி நல்லவரே நீசாட்சி
எல்லோருஞ் சாட்சி என்பேரில் குற்றமில்லை
வல்லாத்தான் வைகுண்ட மாலவ ருஞ்சாட்சி
என்றுநா ராயணரும் எரிக்கலுற்றார் பேய்களையும்
பண்டு அந்தப்பேயைப் பார்மீதில் கொண்டாடும்
நருட்கள் மிகப்பார்த்து நாலைந்து தான்தாக்கிக்
கருக்கிவிட வென்று களிவைத் தலையாட்டி
மனுக்க ளறிய மனுநருளைத் தானாட்டித்
தனுக்கள் மிகவாங்கத் தானினைத்தா ரம்மானை
அப்போ நருள்பேரில் ஆடும்பே யேதுசொல்லும்
இப்போது சுவாமி எங்களொக்கத் தானெரித்துத்
தனியே யரசாள சாதியொன்று தானெடுத்துச்
இனியரசமான கருணாகர பொருளே.
சொல்லொன்றுக் குள்ளான சுவாமி வரங்கள்பெற்றுக்
கொல்லென் றெங்களையும் கொல்லத் துணிந்தீரே
என்றுபே யெல்லாம் எண்ணியெண்ணித் தானழுது
அன்று அழுது அவர்வரங்கள் வைக்கலுற்றார்
காந்த லிடியும் கனத்தவலுச் சக்கரமும்

சூழ்ந்து குத்தல்கண்டு சுருண்டு மிகப்பேய்கள்
ஐயோ சுவாமி அடியார்க்குத் தந்தவரம்
வையோ ரறிய வைக்கிறோ மென்றுரைத்தார்
உடனே வைகுண்டர் உற்றநா ராயணரும்
திடமுடனே பேயோடு உரைக்கிறார் சீமானும்
அணியில்லாப் பேயே அன்றுதந்த வரத்திலொரு
மணியிருக்கு தானால் மாறியென் னோடுரையும்
அப்போது பேய்கள் எல்லோருந் தானழுது
இப்போது நாழிகையும் இல்லைமணி நேரமதும்
உம்முடைய தர்மம் உண்டானா லெங்களையும்
தம்முடைய கருணை உண்டாற் பிழைப்போங்காண்
என்று பேயுரைக்க எம்பெருமா ளேதுரைப்பார்
அன்று நானுரைத்து ஐமூன்று மாதம்வரை
பார்த்து இருந்தேன் பசாசுகளே யுங்களுக்காய்க்
காத்து இருந்தேனே ஆண்டொன்றொரு கால்வரையும்
என்பேரில் குற்றமில்லை என்று சாட்சிவைத்து
உன்பேரில் குற்றமதால் ஒடுக்கிறே னுங்களையும்
என்று பேயோடு இப்போவரம் வையுமென்றார்
அன்றுபே யெல்லாம் அறமெலிந்து தான்வாடி
என்னமுறை சொல்லி இப்போவரம் வைக்கவென்று
வன்னப் பொருளே வகையாகச் சொல்லுமென்றார்
அந்தப் பொழுதில் அய்யாநா ராயணரும்
இந்தப் பொழுதில் இம்மணியிந் நேரமதில்
ஐயாவு மங்கே ஆகமத்தைத் தான்பார்த்து
கைவாய்த்து தென்று கழிவோ டுரைபகர்வார்
திட்டிச்ச அய்யாணை சேர்ந்து வரங்கள்வைத்து
விட்டுருந்தச் சாவுபிழை சங்கிலிகள் தானும்வைத்து
மலையேறி யொக்க மாண்டுபோ வோமெனவே
விலையாய்ப் பலகையிலே விரித்தடியுஞ் சத்தியமாய்
அய்யா வுரைத்த ஆணை தவறாமல்
மெய்யாகப் பேய்கள் விளம்பிவைத்து தம்மானை
அய்யாணை அய்யாணை திட்டிச்ச அய்யாணை
மெய்யாணை எங்கள் மிக்கவரங்கள் வைத்தோம்
தந்தபிழை சாவு சங்கிலிக ளானதுவும்
எந்தன் குலமுழுதும் இப்போ வரமும்வைத்து
அய்யாணை நாங்கள் அருமலைகள் தானேறி
மெய்யாக அக்கினியில் விழுந்துசெத்துப் போவோமெனச்

சொல்லிப் பேயெல்லாம் சுத்தவர மத்தனையும்
பல்லுயி ருமறியப் படித்துவரம் வைத்ததுவே
வைத்த உடனே வைகுண்டர் முறைப்படியே
மெய்த்தபுகழ் சான்றோர் மெய்வாயுங் கையாலும்
ஆகாத்த தெல்லாம் அழித்திடு வாரனவே
வாகாக முன்னூல் ஞாய வழிப்படியே
வாணாள் மறுகி வாதைவரம் வைத்தவுடன்
சாணா னொருவிரலால் சற்றேதொட வைத்தனரே
தொட்டிடவே பேயும் சுற்றுமனு நருளும்
பட்டு விழுந்தாற்போல் பாரறிய தான்விழுந்தார்
உடனே மனுவழியில் உடைய குலச்சனங்கள்
படபடெனத் தூக்கிப் பதங்கோரி விட்டிடவே
அசதி தீர்ந்தாற்போல் அந்த நருள்முழிக்கும்
செய்திதனை யெல்லாம் சீமை நருளறியும்
கண்டு கொண்டாடிக் காரணத்தின் ஞாயமென்று
மன்று பதினாலும் கண்டு மகிழ்ந்திருந்தார்
இப்படியே பேய்கள் எல்லாம் வரங்கள்வைத்து
அப்படியே பேய்கள் அருமலைபோய் மாண்டதுவே
மலைதனிலே வந்து மாண்டசெய்தி தானறிய
இலையி லாடிட்ட இடையர்மிகக் கண்டுளறி
அய்யோபேய் மலையில் அலறிக் கரிவதுதான்
மெய்யாகக் கண்டு மிகப்பதறு தெங்கள்மனம்
அழுதுமுறை யிட்டுப்பேய் அக்கினியில் சாடுவதும்
முழுது மலைகள் முழக்கிக் கிடுகிடென
ஆடு மிகப்பதறி அம்மலையில் மேயாமல்
சாடுதுகாண் தரையில் சாரங்கள் சீமானே
என்று இடையர் இயம்பக்கேட் டெம்பெருமாள்
அன்று நருளறிய அவர்போ தித்தார்சாட்சி
கேட்டு மனுநருட்கள் கெட்டிகெட்டி யிந்தமுறை
நாட்டுக் குடைய நாரா யணரிவர்தான்
மன்று தனையளந்த மாயத் திருநெடுமால்
என்று பலரும் இயல்பா யறிந்திருந்தார்

விருத்தம்

ஆகமப் படியே பேய்கள் அதினுட வரங்கள் வாங்கி
லோகங்கள் அறியக் காட்டி யுகபர சாட்சி நாட்டி
வேகத்தில் மந்திர தந்திர விசையெல்லா மடக்க வென்று

நாகத்தி லுண்டு வாழும் மலையரசனை வருத்த வென்றார்

விருத்தம்

வருத்தவே வேணு மென்று மகாபரன் மனதி லுன்ன
விருத்தமாய் மலையில் வாழும் மிருகங்கள் கோப முற்றுத்
துரத்தலைக் கண்டு மெத்தத் துயரமுற் றயர்ந்து மந்திர
வருத்தலைச் செய்து பார்த்து மலைந்தன னரசன் தானே

**விளக்கம்**:

வைகுண்டர் தவம் இருக்குகின்ற அந்த நேரத்தில் தன்னை நாடி வந்த மக்கள் அவர்களுடைய மனக்குறைகளை அய்யாவிடம் கூறினார்கள். அதன்படி மக்கள் பேய்கள் தங்களை பல துன்பங்களை செய்வதாக அய்யாவிடம் எடுத்துரைத்தார். அப்போது பேய்கள் பிறந்த கணக்கு வழக்குகளையும் அவை வரம் பெற்று உலகில் வந்த நாள் கணக்குகளை எல்லாம் பார்த்து பேய்களை நடுதீர்ப்பு ந செய்ய வேண்டும் என்று நினைத்தார். அதன்படி முன்னாள் பேய்கள் இந்த உலகில் வருகின்ற போது அந்த பேய்களிடமிருந்து சத்தியத்தை வாங்கி அனுப்பினார்கள்.

அதன்படி அதனுடைய கணக்குகளை எல்லாம் பார்க்க வேண்டும் என்று எண்ணி அருள்முனியாகிய நாரதமுனி வர வேண்டும் என்று மனதில் எண்ணினார் எம்பெருமான்.வைகுண்டர் பேய்களினுடைய கணக்கு வழக்குகளை பார்ப்பதற்காக அருள் முனிவர்கள் அங்கே வர வேண்டும் என்று உரைத்தார். உடனே மறை முதல் வேதன் வானவர்கள் ஆகிய எல்லோரும் வெகு விரைவாக அய்யா வைகுண்டர் முன்பாக வந்தார்கள். வந்தவர்கள் வைகுண்டரை வணங்கி நின்றார்கள். அப்போது அவர்களை பார்த்து அய்யா கூறினார் நீங்கள் பேய்க்கு முன்னால் கொடுத்த விதிதனைப் பார்த்து என்னிடம் கூறுங்கள் என்று கூறினார்.

பேய்களினுடைய விதிக்கணக்கை பாருங்கள் என்று கூறியவுடன் விதிகளைப் பார்த்து வேதனானவன் அங்கே கூறுகின்றார், எப்படி என்றால் துதிக்கொடும் எழுத்தும் எந்தன் சுருதியும் கேள்மோ அய்யா என்று பேய்களின் கணக்கை எடுத்துக் கூறினார்கள். ஆதிநாராயணர் இந்த கலி யுகத்தில் வைகுண்டமாகி வந்த அன்று

முதல் பேய் பிசாசுகள் எல்லாம் ஒழிந்து போய்விட்டது என்று பேய்களின் கணக்கை எடுத்து சொன்னார்கள்.

மேலும் பேய் பிசாசு கூளிக்கணம், மாயஜாலம், பொய், புரட்டு, பொறாமை, கபடு, கள்ளம், மனக் கருப்பு, வஞ்சனை, வாது, சூது, பிழை, பொல்லாப்பு ,ஆனது எல்லாம் வாயோடு வாயால் கட்டு தனம் தன்னாலே அழிந்து மீண்டும் எழ முடியாதவாறு மறுபிறப்பு இல்லாமல் அழிந்து போய்விடும். நாராயணர் வைகுண்டமாகி தெட்சணத்தில் எழுந்தருளிய அன்று முதலே இவை எல்லாம் அழிந்து விட்டதற்கு அடையாளம் ஆகும். பூரண வேத நூலாகிய புராணமும் ஆகமங்கள் எல்லாம் அதனுடைய சாரம் கெட்டுப் போச்சு. அதாவது ஞானம் கைவர பெற்றவர்களுக்கு நூல் அறிவு தேவை இல்லை.

நூலறிவினால் மட்டும் இறைவனை அறிய இயலாது. பிரம்மத்தை தன்னுள் உணர்ந்து கொள்ள தூய்மையான மனமே போதும். ஆகவே சதாசிவத்தினுடைய அனுக்கிரகத்தால் தெய்வமாகி வைகுண்டர் திருவருள் புரிந்து வந்திருக்கின்ற காரணத்தினால் தன்னுள் இறைவனை கண்டுணறுகின்ற பக்தர்களுக்கு எந்த வித நூல் அறிவும் தேவையில்லை. ஆகவே சாரமும் கெட்டுப் போச்சு எங்கும் சதாசிவமாக வைகுண்டத்தினுடைய சொரூபம் ஆட்சி செய்யும் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

கலிமாகியினால் வரக்கூடிய தீமைகளை எல்லாம் அழித்து இந்த உலகை ஒரு சொல்லுக்குள் ஆள்வதற்காக வேண்டி வைகுண்ட தவம் இருக்கின்றார். அவ்வாறு சுழி முனையில் தன்னுடைய எண்ணத்தை நிறுத்தி சூரிய தவம் இருக்கின்றார். வைகுண்டரே தெய்வமும் அவராகி, திருவுளமும் அவராக இருந்து கலியுகத்தில் தீமைகளை எல்லாம் அழித்து அக்கினிக்கு இரையாக்கி வைகுண்டர் தன்னுடைய இறை சக்தியால் மக்களை நல்விலைப்படுத்தி அவரை நாடி வருகின்ற மக்களிடம் இருக்கின்ற தீமைகளை எல்லாம் அழித்து தள்ளி மக்களுக்கு நல்ல ஞானத்தை அருளி அழிவில்லாத பதியாகிய தர்மயுகத்தை ஆள்வார் என்று ஆகமம் கூறுகிறது என்று எடுத்தியம்பினார்.

முப்பொருளும் மூன்று மூர்த்தியும் ஒரு மூர்த்தியாக வைகுண்டர் அவதாரம் எடுத்து வந்த நாள் முதலாக ஆகாத வகைகள் எல்லாம் அழிந்து போகும் என்று வேதன் கூறினார். உடனே இதை கேட்டு

வைகுண்டர் வானவரை சாட்சியாக வைத்து இதை கணக்கில் பதித்து வையுங்கள் என்று அங்கே கூறினார். மேலும் கணக்கில் பதித்த எம்பெருமான், எழுதிக் கொண்டு கருத்தில் அடக்கி வைத்து அவைகளை எல்லாம் இலக்களுக்கு அதிலே கொள்வோம்.

பேய்களின் கணக்கை கணக்கில் பதித்த எம்பெருமான், அவ்அசுர சக்திகளை எதிர்த்து போரிடாமல், சண்டை சச்சரவு இன்றி, நேர்மை ஒழுங்கு தவறாமல், சத்தியத்திற்கு உட்பட்டு, வேரோடு அழிக்க கருதியவராய் சுகசிவ வானோர் வேதன் ஒருவரும் போக வேண்டாம் என அனைத்து தேவர்களையும் சாட்சியாக பார்த்து நில்லுங்கள் என்று நிறுத்தி வைத்து பகை செய்த கழிவை எல்லாம் எரிக்க வேண்டும் என்று திருவுளம் கொண்டார். எனவே அவற்றை தன் அருகில் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார்.

சிவன்,வானலோகத்தார்கள், இந்திரன் தேவர்கள் முதல் எல்லோரையும் நீங்கள் எல்லோரும் இங்கே இருங்கள் யாரும் எங்கும் செல்ல வேண்டாம் என்று எல்லோரையும் அருகிலே நிறக வைத்தார் வைகுண்டர். உடனே உலகில் ஊர்ந்து திரிகின்ற பேய் பிசாசுகள் எல்லாவற்றையும் தன்னிடத்தில் வரும்படி அங்கு நினைக்கின்றார். அவர் நினைத்த மாத்திரத்திலே பேய் கணங்கள் அத்தனையும் சிந்தை மிக கலங்கி பேய்கள் எல்லாம் ஒருதலத்தில் வந்து கூடின.

பல மந்திர தந்திரங்களால் மக்களை மாறாட்டம் செய்கின்ற அத்தனைகளும் ஒன்றாக ஒரு இடத்தில் கூடி, அவைகள் எல்லாம் பேசுகின்றன ஐயோ நாம் இதற்கு முன்பு இவர் உரைத்ததெல்லாம் பொய் என்று நினைத்து விட்டோமே! இப்போது என்ன செய்வது என்று அங்கு பதறி நாம் எல்லாம் இப்போது சாகுவதற்கு விதியாச்சு. ஐயோ நாம் புத்தி கெட்டுப் போனோமே! நம் பெயர் குற்றம் அல்லாமல் நாராயண ர் பெயரில் குற்றம் இல்லை. நம்மிடம் தான் குற்றம் இருக்கிறது. காரணம் முன்னாள் நாரத மாமுனியை சாட்சியாக வைத்து பல வரங்களை நமக்கு கொடுத்தார்கள். அப்படி கொடுக்கின்ற போது என்றைக்கு நாராயணர் வைகுண்டமாகி நாட்டில் வருகின்றாரோ அன்றிலிருந்து பேய்களின் கணக்குகள் எல்லாம் முடிந்து விடும் என்றுக் கூறியிருந்தார்.

ஆனால் அவர் உரைத்திருந்த அந்த வாக்கை எல்லாம் ஏதோ என்று எண்ணி இருந்து விட்டோமே! ஏற்கனவே சொன்னது போல் நாம் இருக்காமல் விட்டு விட்டோமே! ஆகையால் இப்போது சாகவிதியாகிவிட்டதே! ஐயோ கெடுத்தோமே! நம் பேரில் தான் குற்றம் இருக்கிறது. அல்லாமல் அவர் பேரில் குற்றமில்லை. நாராயண மூர்த்தி கூறியவற்றை எல்லாம் பொய் என்று இருந்தோம். பெரியோர் உரைத்ததெல்லாம் நம்பேரில் குற்றமல்லால் நாராயணர் மேல் குற்றமில்லை. ஆகவே சாமி மேல் நாம் குற்றம் சொல்வதற்கு எந்தவித காரணமும் இல்லை.

எனவே நாம் ஒரு காரியத்தை செய்யலாம் நமக்கு முன்னால் நாரத மாமுனிவரை யாமியம் வைத்து வர வேண்டி தந்தார்கள். அவரிடத்தில் நாம் எல்லோரும் சென்று போய் உரைத்தால் அவர் சிவனிடத்தில் செய்தி கேட்டு வந்து நமக்கு கூறுவார். ஆகவே நாம் எல்லோரும் நாரத மாமனிடம் செல்லுவோம் என்று அதை நாரத மாமுனியை தேடி வந்தார்கள். கோவேங் கிரிதனிலே குடியிருக்கும் மாமுனிவர் அருகில் வந்து அபயம் முறையம் இட்டு நாரத மாமுனியிடம் பேய்கள் எல்லாம் சொல்லுகின்றன நாங்கள் எல்லோரும் இப்போது துன்பமுற்று துயறுற்று இருக்கின்றோம்.

எங்களுடைய துயரத்தை மாற்றுவதற்குரிய வழிகளை எல்லாம் நீங்கள் கேட்டு சொல்ல வேண்டும். உடனே நாரத மாமுனிவர், பேய்களாகிய அலகைகளிடம் ,ஏய் அலைகளே! நீங்கள் இப்போது இங்கே வந்து முறையம் இடுவதற்கு காரணம் என்ன என்றுக் கேட்டார். உடனே பேய்கள் தங்களுடைய துன்பங்களை எல்லாம் நாரத மாமுனியிடம் கூறினர். எப்படி என்றால் மக்கள் எல்லாம் ஒன்று போல சேர்ந்து இனி உங்களை எல்லாம் ஜெபிப்போம் என்றும், எங்களை எரிப்போம் என்றும் எங்களையும் தொடர்ந்து பிடிக்கிறார்கள்.

ஆகவே பதறி நாங்கள் இங்கே ஓடி வந்திருக்கின்றோம் என்று நாரத மாமுனிடம் எடுத்துக் கூறின.மேலும் நீங்கள் பெற்ற வரங்களை எல்லாம் வைத்துவிட்டு மாண்டு போங்கோ என்று துரைத்தனமாய் எங்களையும் தொடர்ந்து பிடிக்கிறார்கள். ஆகவே நாங்கள் பதறி இங்கு ஓடி வந்தோம். எங்களுடைய பாட்டை எல்லாம் உங்களோடு உரைக்கின்றோம். எங்களுடைய துன்பங்களை எல்லாம் போக்கி எங்களை இரட்சிப்பீர்கள் என்று நாரத மாமுனியோடு பணிந்து நின்றன பேய்கள். அப்போது

மாமுனிவர் அந்த அலகைகளிடம் , கலியழிப்பதற்கு மும்மூர்த்திகளும் ஒன்றாகி நாராயணரே வைகுண்டமாக அவதாரம் நிகழ்த்தி இருக்கின்ற காரணத்தினால், சிவன் முதலாய் மேல் பிறக்க வேண்டும் அல்லோ . ஆகையால் சக்தி சிவன் வரைக்கும் மீண்டும் பிறக்க வேண்டும்.

பொல்லாத பிசாசுகளே நீங்கள் எல்லோரும் புத்தி கெட்டு சொன்னீர்களே! வைகுண்ட மாமணியினுடைய நாமம் கேட்டதுண்டால் சிவபரன் முதலால் சிந்தை பதறனுமே! ஆகவே சிவனுக்கு இப்படி மேல் பிறப்பு இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் எப்படி வைகுண்டருடைய சொல்லை மீறி நடக்க முடியும். ஆகவே உங்களுடைய மூப்பானது இந்த உலகினில் இனிமேல் செல்லாது. அதுமட்டுமல்ல எங்களுடைய மூப்பும் இங்கே செல்லாது. ஆகவே இனிமேல் எல்லாம் அவர் மூப்புக்கு உள்ளே தான் அடங்கும்.

ஆகவே பொல்லாத பிசாசுகளே உங்களுக்கு அழிந்து போவதற்கு விதி இங்கே ஆகிறது. ஆனாலும் ஈசர் அமைப்பு கொடுத்திருக்கின்ற அந்த கணக்குகளின் படி தானே நடக்கும். இனி மேல் செய்வது என்பது இப்போது முடியாத காரியம் ஆகும். ஏழு யுக கணக்குகளும் அவரிடத்தில் தான் இருக்கிறது. ஆகையால் அந்த கணக்கை நாம் அவரிடத்தில் சென்று போய் பார்த்து அறிந்து கொள்ளலாம் என்று நாரத மாமுனியானவர் அலகைகளிடம் கூறினார்.

இவ்வாறு நாரத மாமுனிவர் அந்த பேய்களிடம் எங்கள் மூப்பு வரை செல்லாத போது உங்களால் இனி என்ன செய்ய முடியும்? எல்லா திருவருள் சக்திகளும் அவருக்குள் ஒடுங்கி போய்விட்டன. ஆனாலும் ஈசரிடம் சென்று உங்கள் கணக்குகளை பார்த்து ஏதாவது பயன் கிடைக்குமா? என்று பார்ப்போம் வாருங்கள் என்று அவற்றை அழைத்துக் கொண்டு அய்யா வைகுண்டரிடம் வந்து தொழுது நின்றார்கள். சுவாமி அவரைப் பார்த்து முன்னாகமப்படி பேய்களை எரிக்க நினைத்தேன். நீ இங்கு அழைத்து வந்தது நல்லது தான். இனி இவைகளை எல்லாம் இங்கிருந்து நகர்ந்து விடாமல் காத்துக் கொள். இவர்களின் கணக்கை இதோ சொல்லுகிறேன் கேளு என்று சொல்லி பேய்களின் கணக்கை எடுத்துரைத்தார்.

கலியன் பூமியில் பிறந்தது முதல் இப்பேய்களுக்கு வரங்கள் கொடுக்கப்பட்டன. கலியனின் கொடுமை உலகமெல்லாம் பறந்து தேச சிறப்பு எல்லாம் சீர் குலைந்து போய்விட்டது. எனவே ஈசர் கொடுத்த ஏது வரம் ஆனாலும் உபாயம் இட்டு வெல்ல மிகு பொருளாய் நிற்கும் உபாய நாராயணரே வைகுண்டமாய் தோன்றி பொல்லாதவரை அழித்து நரகில் விட்டு நல்லோரை எழுப்பி அவர்களுக்கு ஒளி உடல், ஞானக்கண், மெய் அறிவு, வாலைப்பருவம் எனும் நான்கு வகையான வரங்களைக் கொடுத்து ஒரு சொல்லுக்குள் உலகு ஆள்வதற்கு பூமியில் வந்தவுடன் பேய்களின் கணக்கு முடிந்துவிடும் என்று பேக்கணக்கை எடுத்துரைத்தார்.

இனி எள்ளளவு கூட அவைகளுக்கு இன்று இடமும் இல்லை இதோ பார் இனிமேல் ஒரு மணி நேரமாவது அவர்களுக்கு இருக்கின்றதா பார் என்று நாரத மாமுனியிடம் கேட்டார். இதனை கேட்ட நாரதர் நாட்டிற்குடைய நாராயணர் உரைத்தால் அதை எதிர்த்து செல்பவர் யார்? மூவரும்(சாம்ப,சதாசிவ சாமி) அதாவது சிவம் பிரம்மா விஷ்ணு என்று சொல்லக்கூடிய முத்தொழிலும் செய்பவர்கள் ஒடுங்கி வைகுண்டமாக இருக்கும் போது அவரிடம் கேட்பதற்கு இனி யார் இருக்கின்றார்கள்? அல்லாமலும் நீசன் அழிவாகி போகும் முன்னாக அவனோடு உள்ளதெல்லாம் அவனுக்கு முன்னே அழித்து விட வேண்டும் அல்லவா தானே முறை. நீசன் வலுவெல்லாம் நீர்முன்னே தான் அறுத்து ஓசை ஒன்றுக்கு உள்ளே உகம் கேட்க நிச்சயத்து இருந்தீர்.

ஆகவே நன்றி கெட்ட நீசன் நாள் வழியே நீர் அறுத்து நல்லோரை எழுப்பி இந்த உலகை ஒரு சொல்லுக்குள் ஆள்வதற்காக வல்லோராய் நீரும் வரம் பெற்று வந்திருக்கின்ற மாதவமே! இப்பேய்கள் எல்லாம் நீசகுலம் ஆனதினால் வானக் கனலில் ஞான அக்கினியில் மாளும் காலம் இதுவே என்று நாரத மாமுனிவர் வைகுண்டருடன் எடுத்துரைத்தார். உடனே வைகுண்டர், நாரதமாமுனியிடம் மாமுனியே, நம் பேரில் குற்றமில்லை. முன் ஆகம முறை நூல் தவறாமல், என்னூல் வேத சாஸ்திரம் ஒழுங்கில் இவற்றை எரிக்கிறேன் இப்பேய்களை இதற்கு நீ சாட்சி என்றுக் கூறினார்.

மேலும் மாயாண்டி (பற்றற்ற பரம்பன்) முதல் நல்லோர்கள் அனைவரும் சாட்சியாக பார்த்திருங்கள். வல்லாத்தான்

வைகுண்டம் மாலவரும் சாட்சி என்றுக் கூறி அப்பேய்களை எரிக்கலுற்றார். பேய்களை எரிக்கும் முன்னால் பேய்களை அழிக்கும் செய்தியை உலக மக்கள் அறிய வேண்டும் என்பதற்காக அப்பேய்களை வைத்து வழிபடும் மக்களில் சில மக்களைத் தேர்ந்தெடுத்து அப்பேய்களை அவர்களுடைய உடலில் தாக்கி ஆட வைத்தார். அப்படி ஆடிய பேய்கள் சுவாமியை பார்த்து, இப்போது சுவாமி எங்களொக்க தானெரித்துத் தனியே அரசாள சாதி யொன்று தானெடுத்து சொல்லொன்றுக் குள்ளாள சுவாமி வரங்களைப் பெற்றுக் கொல்லென்று எங்களையும் கொல்ல துணிந்தீரே" என்று எண்ணி அழுது வரங்களை வைத்தன.

அவ்வாறு பேய்கள் எல்லாம் அழுது வரங்களை வைத்த உடனே காந்தல் இடியும் கனத்த வழு சக்கரமும் அவற்றை சூழ்ந்து கொண்டு குத்த அவையெல்லாம் ஐயோ பொறுக்க முடியவில்லை என்று சுருண்டு விழுந்து அழுதன. ஐயோ சுவாமி அடியார்க்கு தந்த வரம் இந்த உலக மக்கள் அறியும் படியாக வைக்கிறோம் என்று உரைத்து மக்கள் அறியும் படி செய்தன. ஐயா வைகுண்டர் அவற்றைப் பார்த்து அணியில்லா பேய்களே அன்று தந்தவரத்தில் ஒரு மணித்துளி நேரம் உங்களுக்கு இருக்கிறது என்றால் என்னிடம் மாறி பேசுங்கள் என்று பேய்களிடம் சொன்னார்.

அப்போது அந்த பேய்கள் எல்லாம் சட்டப்படி எங்களுக்கு ஒரு நாழிகை பொழுது கூட இல்லை ஐயா உம்முடைய தர்மம் கருணை உண்டானால் நாங்கள் பிழைப்போம் என்று கூறின. அதற்கு சுவாமி அவற்றிடம் நான் உங்களுக்கு தயவு காட்டாமல் இல்லை நான் இப் பூமியில் வந்ததும் உங்களை எச்சரித்து பதினைந்து மாத காலம் வரை காத்திருந்தேன். ஆனால் நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளவில்லை. எனவே என் பெயரில் குற்றம் எள்ளளவும் இல்லை உங்கள் பேரில்தான் குற்றம். உடனே வரத்தை வையுங்கள் என்று கூறினார். உடனே அந்த பேய்கள் எல்லாம் அறம் மெலிந்து வாடி என்ன முறை சொல்லி வரம் வைக்க வேண்டும் என்று வேண்டி நின்றன.

அப்போது ஐயா வைகுண்டர் அவற்றிடம் இந்நாளில் இம்மணியில் "திட்டித்த அய்யா அணை சேர்ந்து வரங்கள் வைத்து விட்டிருந்த சாவுப் பிள்ளை சங்கிலியும் தானம் வைத்து மலையேறி ஒ*** மாண்டு போவோம் எனவே விலையாய் பலகையிலே விதைத்து

அடித்து சத்தியமாய் என்று சொல்லி மரங்களை வையுங்கள் என்று கூறினார்

"திட்டிச்ச அய்யானை சேர்ந்து வரங்கள் வைத்து விட்டிருந்த சாவுப் பிழை சங்கிலிகள் தானும் வைத்து மலையேறி ஒக்க மாண்டு போவோமெனவே விலையாய் பலகையிலே விரித்தடியும் சத்தியமாய்" என்று வைகுண்டர் பேரய்களிடம் உரைத்தார்.

அய்யா உரைத்தபடி அவைகள் அய்யானை அய்யானை திட்டிச்அய்யானை எங்கள் குலம் முழுவதும் இப்போ வரங்கள் வைத்து அரும்மலை மேல் தான ஏறி மெய்யாக அக்கினியில் விழுந்து செத்து போவோம் என்றுச் சொல்லி பெற்றவரம் அத்தனையும் பல்லுயுரும் அறிய அய்யா திருமுன் வைத்தன.முன் ஆகமப்படி வாழ்நாள் மருகி வாதைகள் வரம் வைத்த உடன் பேய் ஆடுகின்ற நருட்களை சான்றோன் ஒருவனால் தொட வைத்தார். அவ்விதம் தொட்டதும் அந்த நருட்களின் உடலை விட்டு பேய்கள் வெளியேற, அவர்கள் பட்ட மரம் போல் கீழே விழுந்தனர்.

உடனே இதனை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் ஓடி வந்து படபட என்றுத் தூக்கி பதம் தெளித்திட அசதி தீர்ந்ததைப் போல அவர்களெல்லாம் எழுந்தனர். மக்கள் எல்லாம் மனம் மகிழ்ந்து கொண்டாடினர். வரங்களை வைத்த பேய்கள் அப்படியே மலையேறி அக்கினியில் விழுந்து மாண்டன. இதனையும் மக்கள் அறியும் படியாக மலையிலே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இடையர்கள் அய்யா விடம் வந்து சொன்னார்கள். எப்படி என்றால் நாங்கள் மலையிலேயே மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுடைய ஆடு மாடுகள் எல்லாம் அலறி அடித்துக் கொண்டு புல் மேயாமல் ஓடிக்கொண்டிருந்தன.

அந்த வேளையில் ஏன் இவை இப்படி ஓடுகின்றன என்று அறிவதற்காக அங்கு நாங்கள் சென்று பார்த்தோம். அப்போது பேய்கள் எல்லாம் அழுது முறையிட்டு அக்கினியில் சாடி கரிந்து விழுந்து இறந்து கொண்டிருந்தன. வைகுண்டர் அவதார நிகழ்ந்து விட்ட காரணத்தினால் இனிமேல் நமக்கு இங்கு இருப்பதற்கு தருணம் இல்லை. ஆகவே எல்லோரும் இந்த அக்கினியிலே விழுந்து இறந்து விடுவோம் என்று சொல்லிக் கொண்டு பேய்கள் எல்லாம் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டன என்று அங்கே ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் வந்து

சாட்சியாக வைகுண்டரிடம் கூறினார்கள். இதை கேட்ட மக்கள் எல்லோரும் நாட்டுக்குடைய நாராயணர் இவர்தான் என்றுச் சொல்லி மகிழ்ந்து இருந்தார்கள்.இவ்வாறு பேய்கள் அழிந்த விதத்தை அறிந்து மக்கள் எல்லோரும் நாட்டுக்குடைய நாராயணர் இவர்தான் என்று இயல்பாக அறிந்திருந்தார்கள்.

இவ்விதம் பூவுலகமும் மேலுலகமும் சாட்சியாகப் பார்த்திருக்க முன் ஆகமத்தின் படியே பேய்களின் வரத்தை வாங்கிய வைகுண்டர் அவற்றை மந்திரவாதிகளின் விசையை அடக்க எண்ணியவராக நாகத்தை ஆண்டு வாழும் அதாவது மலையில் விளையும் விளைவுகளை உண்டு வாழுகின்ற மலை அரசர்களை தம்மிடம் வருவிக்க வேண்டும் என்று மனதிலே எண்ணுகின்றார்.

**வினாவிடை:**

1. வைகுண்டர் வருகை பற்றி ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?
வைகுண்டராசர் வருவார் இந்த பூமியிலே அவர் வந்த உடனே சாதி பதினெட்டு ஒரு தலத்திலேயே கூடி கோரி குடிக்கும் ஒரு கிணற்றில் உள்ள நீரை. இதனால் கர்ம வியாதி செவிடு கண் குருடு ஊமை எல்லாம் தர்மத்தால் தீர்ப்பார் சகல உயிர் ஆனதுக்கும் செல்வம் உண்டாகும் சீமானார் வந்தவுடன் அல்லல் மிக தீரும் அவரை அறிந்தவர்க்கு எளியோர் வழியோர் என்று இல்லாமல் எல்லோருக்கும் ஒரு போலே இந்த கர்ம வினைகளை தீர்த்து வைப்பார். ஆகவே சுத்தமாய் கண்டவர்களுக்கு தோசம் எல்லாம் நீங்கும். அவரை சேர்ந்த வர்களுக்கு செல்வம் உண்டாகும்.

2. வைகுண்ட நாதன் வருகையினால் ஏக வியாழன் யாருக்கு வந்தது?
தெய்வச் சான்றோர்களுக்கு

3. வைகுண்டர் ஒரு சொல்லுக்குள் சீமை ஐம்பத்து ஆறு தேசத்தையும் ஆள வந்திருக்கின்ற போது யாருக்கு முத்திரிச் செங்கோல் கொடுத்து சிறப்பிக்கின்றார்?
சான்றோர் மக்களுக்கு

4. நாராயணருக்கு நாள் பகையாய் வந்தவர்களுடைய நிலை யாது?
அவர்களுக்கு தீமை தொடர்கிறது என்பது ஆகும்.

5. வைகுண்ட அவதாரத்திற்கு பிற்பாடு முழிக்கப்பட்டது கண்டுகொள்ளும் என்று அய்யா கூறியிருப்பது எதைக் குறிக்கின்றது?
யார் ஆன்ம ஞானம் பெறுகிறார்களோ அவர்கள் இறைவனை கண்டுக் கொள்வார்கள் என்பதாகும்.

6. வானத்தில் இருக்கின்ற வெள்ளிகள் எல்லாம் எவ்வாறு உதிர்ந்து விடும் என்று கூறுகின்றார். ?
ஆலம் காய் போல்

7. அய்யா முந்தைய வழிபாட்டு முறையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று பேய்களுக்கு உபதேசம் செய்திருந்தார். இதை பேய்கள் ஏற்றுக் கொண்டனவா? இல்லை

8. மக்களுக்கு துன்பம் கொடுக்க மாட்டோம் என்று சொன்ன பேய்கள் வைகுண்டருடைய வார்த்தையை மீறி எத்தனை ஆண்டுகாலம் இந்த பூமியில் மக்களுக்கு துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தது?
ஒரு ஆண்டு முதல் ஒன்றரை ஆண்டு வரை

9. மக்களுக்கு துன்பம் கொடுத்த பேய்கள் மேலும் சிறப்பாக கொடை பூசைகளை எல்லாம் ஏற்று வாழ்ந்ததா?
இல்லை வைகுண்டர் அவற்றை எரித்துவிட்டார்

10. வைகுண்ட பேய்களை எரித்துவிட்டார் எனில் நாம் பேய்களுக்கு வழிபாடு செய்வது சரியா?
இல்லை கலியுகத்தில் அதை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

11. குலதெய்வ வழிபாடு என்று நாம் பேய்களுக்கு வழிபாடு செய்து கொண்டிருக்கின்றோமே, அதை நாம் செய்வது சரியா?
இல்லை குலதெய்வ வழிபாடு நாம் செய்யக்கூடாது.

12. ஏன் நாம் இப்போது குலதெய்வ தெய்வங்களுக்கு முந்தைய முறையில் வழிபாடு செய்யக்கூடாது?
வைகுண்ட அவதாரத்திற்கு பிற்பாடு வைகுண்டர் 1008 அண்டம் நிறைந்து வாழுகின்ற அத்தனை தெய்வ சக்திகளிடமிருந்து இறைவன் நீங்கள் முந்தை வழிபாட்டு முறை ஏற்றுக் கொள்ளக்

கூடாது என்று கட்டளையிட்டிருக்கின்ற காரணத்தினாலும், வைகுண்டருக்குள் அத்தனை தெய்வ சக்திகளும் ஒடுங்கிவிட்ட காரணத்தினாலும், கலி அழிகின்ற காலம் வரையிலும் நாம் இந்த முந்தைய வழிபாட்டு முறைகளை தெய்வங்களுக்கு செய்ய வேண்டியது இல்லை.

13. குலதெய்வங்களுக்கு நாம் வழிபாடு கொடுக்கவில்லை என்றால் அவை மக்களை துன்புறுத்துகின்றன என்று சொல்லப்படுகின்றதே இந்த நிகழ்வு உண்மையா?
இல்லை இது உண்மை இல்லை காரணம் வைகுண்டருக்குள் அத்தனை சக்திகளும் கட்டுப்பட்டு இருக்கின்ற போது தனியாக அவை பிறருக்கு தீமை கொடுக்க முடியாது.

14. குலதெய்வ வழிப தெய்வங்களுக்கு வழிபாடு கொடுக்கவில்லை என்றால் அங்கே மக்களுக்கு துன்பம் வருகின்றதே இதற்கு காரணம் என்ன தெய்வத்தினுடைய தொல்லையா இல்லை மக்களினுடைய மன மாய்கையா?
மக்களினுடைய மனமாய்கையே காரணம் சிறு தெய்வத்தினால் மக்களுக்கு துன்பம் கொடுக்குகின்ற அளவுக்கு சக்தி இல்லை இந்த கலியுகத்தில். கர்ம வினையினால் துன்பங்கள் தொடருகின்ற போது அந்த கர்ம வினையிலிருந்து விடுபடுவதற்கு வைகுண்டர் காட்டிய நெறியை கடைபிடித்து வாழ வேண்டுமே தவிர தெய்வங்களின் மீது பழிச் சொல்வது முறையல்ல.

15. ஆண்டாண்டு காலமாக முன்னோர்கள் செய்து வந்த குலதெய்வ வழிபாட்டை விட்டுவிடுவது சாத்தியமா?
சாத்தியமே. அய்யா வைகுண்டர் கூறிய நெறிப்படியில் வழிபாடு செய்வது சாத்தியமே. முந்தைய வழிபாட்டில் உள்ள பூஜை புனஸ்காரங்கள் உயிர் பலி இவை தேவையில்லை இவற்றை விடுத்து வைகுண்டர் காட்டிய எளிய வழிபாட்டு முறையை பின்பற்றுவது சாத்தியமே.

16. இதுவரையிலும் ஆடம்பர பூஜைகளை ஏற்றுக் கொண்ட தெய்வங்கள் இப்போது இந்த எளிய வழிபாட்டு முறையை ஏற்றுக் கொள்ளுமா இது சத்தியமா?
தெய்வங்கள் ஏற்றுக்கொள்ளும். ஏனெனில் வைகுண்டருடைய சொல்லுக்கு கட்டுப்பட்டு அவை இருக்கின்றன. நாங்கள்

ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வைகுண்டரிடம் சத்தியம் செய்து கொடுத்திருக்கின்றன அப்படி இருக்கின்ற போது அந்த தெய்வங்களை பின்பற்றி வாழுகின்ற மக்கள் ஏற்றுக் கொள்ளுகின்றார்களா? மக்கள் மனநிலை மாறுவதற்கு தயாராக இருந்தால் தெய்வங்களும் மக்களுக்கு துன்பம் கொடுக்கப் போவதில்லை தெய்வங்களும் மக்கள் கொடுக்கின்ற எளிய வழிபாட்டு முறையை ஏற்றுக் கொள்ளும். ஆகவே வைகுண்டர் காட்டிய எளிய வழிபாட்டு முறை சாத்தியமே.

17. மக்களுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த பேய்களை எரிப்பதற்கு முன்பாக அய்யா செய்தது என்ன?
பேய்களின் முன்னாள் கணக்குகளை கொண்டு வர கூறினார்.

18. பேய்களுடைய கணக்குகள் யாரிடம் இருந்தது?
வேத மாமுனிடம்

19. வேத மாமுனிவர் பேய்களுடைய கணக்குகளை எடுத்து வந்த உடனே அவரிடம் வைகுண்டர் இட்ட கட்டளை யாது?
பேய்களுடைய கணக்குகளை எடுத்துப் பார்த்து கூறுமாறு கூறினார்.

20. பேய்களை எரிப்பதற்கு முன்னதாக யார் யாரெல்லாம் வரவழைக்கப்பட்டார்கள்?
மறை முதல் வேதன், வானோர்கள் மற்றும் சங்கத்தார்கள்.

21. பேய்களினுடைய கணக்குகளை பார்த்த கூற வேண்டும் என்று கூறியவுடன் வேத மாமுனிவர் எவ்வாறு பெயர்களுடைய கணக்கை வைகுண்டரிடம் எடுத்து கூறினார்.?
வைகுண்டர் இந்த கலியுகத்தில் வந்த அன்றே பேய்கள் எல்லாம் இறந்து போக வேண்டும் என்பதை எடுத்துக் கூறினார்.

22. பேயோடு அழிந்து மறுபிறப்பு இல்லாமல் இருப்பது எவை எவை?
பேய், பிசாசு, கூளி, பொய், கலி நீசம், கபடு,கள்ளம், மன கறுப்பு தீயஎண்ணங்கள், பொய் புரட்டு, வஞ்சகம், பொல்லாப்பு, உகதீர்ப்பு இவை எல்லாம் வாயோடு வாயால் கெட்டு மறுபிறப்பு இல்லாமல் போகும்.

23. கலியுகம் அழிந்து விட்டதா இப்போது நாம் இருப்பது எந்த யுகம்?
நாரணர் வைகுண்டம் ஆகி நாட்டினில் வந்த அன்றே காரணம் எல்லாம் ஆச்சு கலியுகம் அழிந்து போச்சு பூரண வேத நூலும் புராணமுன்னாகங்கள் சாரமும் கெட்டுப்போச்சு சதாசிவம் வைகுண்டம் ஆச்சு. யார் வைகுண்டர் காட்டிய நெறியை பின்பற்றி வாழுகின்றார்களோ அவர் சொன்ன நூல் ஒழுக்கபடி வாழுகின்றார்களோ அவர்களுக்கு கலி அழிந்து விட்டது. தர்மயுகம் தோன்றி விடும். வைகுண்டர் சொன்ன நெறியை பின்பற்ற இயலாதவர்கள் கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

24. அழிவதை அழித்து போட்டு ஒரு சொல்லுக்குள் இந்த உலகை ஆள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

25. அழிவில்லாத தர்மபதியை ஆழ்வார் என்று ஆகமும் யாரை குறிப்பிடுகின்றது?
அய்யா வைகுண்டரை

26. சுழிவரை எழுத்தை ஊனி தெய்வம் மாதவரானவர் யார்?
அய்யா வைகுண்டர்

27. பேய்களினுடைய கணக்கை வேத மாமுனி சொல்லுகின்ற போது யாரை சாட்சியாக வைத்து தானவருடைய கணக்கில் பதித்து வைத்தார் அய்யா வைகுண்டர்?
வானவரை சாட்சியாக வைத்து

28. வைகுண்டர் பேய்களை எரிப்பதற்கு முன்னதாக யார் யாரெல்லாம் தன்னோடு இருக்க வேண்டும் என்று கூறினார்?
சிவபெருமான், வானவர்கள்,வாசலின், வேதன், இகாபரன் மற்றும் எல்லோரும்

29. வைகுண்டர் பேய்களை எரிக்க வேண்டும் என்று எண்ணியவுடன் நிகழ்ந்தது என்ன?
பேய்கள் எல்லாம் திடமே குளறி மனம் குளறி ஒரு இடத்தில் வந்து பிரமாணமாக கூடின.

30. “நம் பேரில் குற்றமல்லால் நாரணர் மேல் குற்றமில்லை

தம்பேரில் குற்றமல்லால் சாமி மேல் குற்றமில்லை” யார் யாரிடம் கூறியது?
பேய்கள் வைகுண்டரிடம்

31. வைகுண்டர் பேய்களை எரிக்க துணிந்த உடன் பேய்கள் செய்தது என்ன?
நாரத மாமுனியை தேடி ஓடின.

32. பேய்கள் ஏன் நாரத மாமுனியை தேடி ஓடின?
பேய்களுக்கு வரம் கொடுக்கும்போது நாரத மாமுனியை சாட்சியாக வைத்து கொடுத்தனர். ஆகவே நாரத மாமுனியை தேடி ஓடின.

33. வைகுண்ட பேய்களை எரிக்கத் துணிந்த உடன் பேய்கள் எந்த முனிவரிடம் சென்று அபயமிட்டன?
நாரத மாமுனிவரிடம்

34. கோவேங்கிரியில் குடியிருந்த மாமுனிவர் யார்?
நாரத மாமுனிவர்

35. நாரத மாமுனிவரிடம் சென்று பேய்கள் எவ்வாறு முறையிட்டனர்?
மன உருபோல் வையகத்தில் வைகுண்டர் வந்து எங்களை எல்லாம் எரிப்போம் என்றும் நீங்கள் எல்லாம் மாண்டு போங்கோ என்று துரத்தரமாய் எங்களை தொடர்ந்து பிடிக்கின்றார் ஆதலால் பயந்து உங்களிடம் ஓடிவந்தோம் எங்களை இரட்சிப்பீர் என்று முறையிட்டனர்.

36. பேய்கள் நாரத மாமுனியிடம் கூறியதை கேட்ட நாரதர் மாமுனிவர் பேய்களுக்கு உரைத்த பதில் யாது?
வைகுண்டர் நாட்டில் அவதரித்து விட்டார் என்றால் சிவன் முதல் சக்தி வரை எல்லோரும் மரித்து பிறக்கனுமே சீர்பரன் முதலாய் சிந்தை பதறனுமே உங்களுடைய மூப்பு இந்த உலகத்தில் செல்லாது எங்களுடைய மூப்பு வரை இல்லையென்று போகுது காண் எல்லாம் இனி அவர் மூப்பு மட்டுமே செல்லும். எல்லாம் அவர் மூப்புக்குள்ளே அடங்குதுகாண் என்றுக் கூறினார்.

37. பேய்களுடைய கணக்கு யாரிடத்தில் இருப்பதாக நாரத மாமுனிவர் பேய்களை அழைத்து சென்றார்?
இந்த உலகத்தில் உள்ள ஏழு யுக கணக்குகளும் பேய்களுடைய கணக்குகளும் வைகுண்டர் இடத்தில் இருப்பதாக பேய்களை அழைத்து சென்றார் நாரதமாமுனிவர்.

38. பேய்களை அழைத்துச் சென்ற நாரத மாமுனிவரிடம் வைகுண்டர் கூறிய பதில் யாது?
பேய்களை எரிப்பதற்காக நான் இப்போது மனதில் நினைத்திருக்கின்றேன். ஆகையால் நீ ஒரு பேய் கூட இந்த இடத்தை விட்டு சென்று விடாத வண்ணம் பாதுகாத்துக் கொள். மேலும் இந்த பேய்களுக்கு யாமியம் அன்னாளில் கொடுத்து இங்கு சாட்சியாக வைத்து இருந்தவன் நீ. இப்போது நீயும் இருப்பது நல்லதுவே ஆகவே வந்தது நல்லதாகும் என்றுக் கூறினார்.

39. பேய்களை அழைத்து வந்த நாரத மாமுனிக்கு வைகுண்டர் இட்ட கட்டளை யாது?
பேய்களினுடைய கணக்குகளை பார்த்து சொல்ல வேண்டும் என்று கூறினார்.

40. பேய்களுக்கு எப்போது வரை இந்த உலகில் இருப்பதற்கான விதி அருளப்பட்டது?
நாராயணர் வைகுண்டமாக இந்த நாட்டில் அவதாரம் எடுத்து வருகின்ற அந்த தருணம் வரை.

41. வைகுண்டர் நாரத மாமனிடம் பேய்களுக்கு எத்தனை மணி நேரமாவது இருந்தால் கூறு என்று கூறினார்?
ஒரு மணிநேரம்

42. பேய்கள் ஏன் அழிக்கப்பட வேண்டும் என்று வைகுண்டர் கூறினார்?.
கலியோடு வந்து சேர்ந்த அத்தனையும் அழிக்கப்பட வேண்டும். பேய்களும் கலியன் பெற்று வந்த வரத்திற்குள் அடங்கிவிட்ட காரணத்தினால் பேய்களும் அழிக்கப்பட வேண்டும் என்றுக் கூறினார்.

43. வைகுண்டருக்குள் ஒடுங்கி இருப்பவர்கள் யார் யார்?

மூவரும் (சிவன் பிரம்மா விஷ்ணு)

44. நல்லோரை எழுப்பி அவர்களுக்கு எத்தனை வரம் அருளப்படுவதாக கூறினார்?.
நான்கு வரம்

45. பேய்கள் எரித்த செய்தியை வைகுண்டர் யார் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துகின்றார்?
பேய் ஆட்டம் ஆடிய நருள்கள் மூலம்.

46. வைகுண்டர் பேய்களை எரிக்கத் துணிந்தவுடன் பேய் ஆட்டம் ஆடிய மக்கள் பேசிய மொழி என்ன?
ஒரு சொல் ஒன்றுக்கு உலகாள சுவாமி நீர்வரங்களை பெற்று வந்ததினால் கொல் என்று எங்களையும் கொல்ல துணிந்தீரே என்று பேய்கள் அழுது அழுது தங்களுடைய வரங்களை வைத்தனர்.

47. பேய்கள் வைத்த வரங்கள் எவை எவை?
காந்தல் அடியும் கனத்தவரு சக்கரமும் சூழ்ந்த குத்தல் கண்டு சுருண்டு மிகப்பேய்கள் அடியார்க்கு தந்த வரங்களை வைக்கிறோம் என்று வைத்தனர்.

48. பேய்கள் வரத்தை வைக்கின்ற போது பேய்களிடம் வைகுண்ட ஒரு மணி நேரமாவது உங்களுக்கு இருக்கிறதா என்று கேட்டதற்கு பேய்கள் கூறிய பதில் யாது?
இல்லை சுவாமி ஒரு நாழிகையும் கூட இல்லை என்றுக் கூறியது.

49. பேய்கள் வைகுண்டரிடம் இனி யாருடைய கருணை இருந்தால் நாங்கள் பிழைப்போம் என்று கூறியது?
வைகுண்டருடைய கருணை இருந்தால் பிழைப்போம் என்றுக் கூறியது.

50. பேய்கள் வைகுண்டரிடம் வைகுண்டருடைய கருணை வேண்டி நின்ற போது வைகுண்டர் பேய்களுக்குரிய பதில் யாது?
வைகுண்ட அவதாரம் எடுத்து வந்து ஐமூன்று மாதம் வரை நான் உங்களுக்கு புத்தி சொல்லி பார்த்தேன் நீங்கள் கேட்கவில்லை ஆகையால் உங்களை இப்போது அழிக்கிறேன் என்றுக் கூறினார்.

51. வைகுண்டர் பேய்களிடம் எத்தனை ஆண்டு காலம் பேய்களுடைய தவறுகளை பார்த்திருந்ததாக கூறினார்.?
ஒன்று ஒரு கால் [12+3 ]வரையிலும் ஐமூன்று [15] மாதங்கள் வரை.

52. பேய்கள் வைகுண்டரிடம் எவ்வாறு வரங்களை வைத்து மாண்டன? திட்டித்த அய்யா ஆணை சேர்த்து வரங்கள் வைத்து விட்டிருந்த சாவு பிழை சங்கிலிகள் தாமும் வைத்து மலையேறி ஒக்க மாண்டு போவோம் என்று விலையாக பலகையிலே விரித்து அடியும் சத்தியமாய் என்று அய்யா உரைத்த ஆணை தவறாமல் வரத்தை வைத்து மாண்டனர்.

53. பேய்கள் வரம் வைத்து மாண்ட உடனே யார் மூலம் பேயாட்டம் ஆடி கொண்டு இருந்தவர்களை எழுப்பி விடச் செய்தார்?
சான்றோர் ஒருவருடைய கையால் தொட வைத்து எழுந்து நிற்க செய்தார்.

54. பேயாட்டம் ஆடியவர்களை சான்றோர் ஒருவருடைய கையால் தொட்டவுடன் அவர்களுடைய பேயாட்டம் மாறிய நிகழ்ச்சியின் மூலம் அய்யா நமக்கு உணர்த்துவது யாது?
எப்படிப்பட்ட துன்ப துயரங்களுக்கு காரணமான கர்ம வினைகள் சூழ்ந்து இருப்பவர்களும் சான்றோர் கையால் திருநாமத்தை பெறுகின்ற போது அந்த வினைகள் எல்லாம் அகன்று விடும் என்பதாகும்.

55. பேயாட்டமாடியவர்களை சான்றோர் ஒருவருடைய கையால் தொட்டவுடன் நிகழ்ந்தது என்ன? பட்டு விழுந்தார் போல் இந்த உலகம் அறிய பேயாட்டமாடியவர்கள் படபட வென்று கீழே விழுந்தார்கள்.

56. பேய்கள் வரங்களை எல்லாம் வைகுண்டர் முன்பு வைத்துவிட்டு எங்கு போய் மாண்டன?
அருமலையில் சென்று மாண்டன.

57. பேய்கள் மலையில் சென்று மாண்ட செய்தியை யார் மூலம் அறிந்து கொண்டார்கள்?

ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்த இடையர்கள் மூலம் அறிந்து கொண்டார்கள்.

58. பேய்கள் இறந்த செய்தியை இடையர்கள் எவ்வாறு அறிந்து கொண்டார்கள்? ஆடுமாடுகளை மேய்ப்பதற்காக விட்டிருந்த இடையர்கள் அவர்களுடைய ஆடு மாடுகள் மேயாமல் பதறி ஓடுவதைக் கண்டு மலையில் என்ன நிகழ்கிறது என்று பார்க்கின்ற போது பேய்கள் அக்கினியில் விழுந்து சாகுவதை கண்டு அதன் மூலம் பேய்கள் அழிந்து போவதால் தான் ஆடு மாடுகள் பதறி ஓடுகின்றன என்பதை அறிந்து கொண்டார்கள்.

59. பேய்கள் இறந்த செய்தியை இடையர்கள் வைகுண்ட இடம் வந்து எவ்வாறு உரைத்தனர்?
இடையர்கள் வைகுண்டரிடம் வந்து சுவாமி நாங்கள் மலையிலேயே ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தோம். அப்போது எங்களுடைய ஆடு மாடுகள் புல் மேயாமல் பதறி ஓடுவதை கண்டோம். அப்போது அங்கு சென்று பார்த்தபோது பேய்கள் அக்கனியில் விழுந்து நாங்கள் எல்லா வரங்களையும் வைத்து இறந்து போகின்றோம் என்று சொல்லி அக்கினியில் விழுந்து குதித்து இறந்ததை எங்கள் கண்ணால் பார்த்தோம் என்று வைகுண்டரிடம் வந்து கூறினார்கள்.

60. வைகுண்டர் பேய்களை எரித்த செய்தியை யாரை சாட்சியாக வைத்து மக்களுக்கு அறியும்படிச் செய்தார்?
ஆடு மாடுகளை மேய்த்திருந்த இடையர்களை சாட்சியாக வைத்து மக்கள் அறியும்படிச் செய்தார்.

61. பேய்களை அழித்து விட்டு மந்திர தந்திரங்களை அழிப்பதற்காக அய்யா வைகுண்டர் செய்த சூட்சமம் எது?
மந்திரவாதிகளினுடைய மந்திரம் பலிக்காமல் போகும்படிச் செய்தார்.

மந்திரவாதிகளின் விசையடக்குதல்

நடை

மந்திர தந்திர மாமுனிவன் சாத்திரங்கள்
விந்தைசெய்யு மாய்மால விசையடக்க வேணுமென்று
நினைத்த வுடனே நெடுமலையில் தான்வாழும்
அனர்த்த மிடும்மிருகம் ஆனை புலிகடுவாய்
கடுகிக் கரடி கனத்தமந் திக்குரங்கும்
முடுகி யெழுந்து மூச்சுவிட் டேவிரைவாய்ச்
சீறி யெழுந்து சென்றுமலை யில்வாழும்
கூறித் தொழில்கடிய குன்றரசர் தங்களையும்
விரட்டத் தொடுத்ததுகாண் மிருக மிகக்கூடி
அதட்டுப் பொறுக்காமல் அந்த மலையரசர்
ஓமந் தனைவளர்த்து ஒருகோடி பூச்சொரிந்து
ஆமா அரியெனவே அட்சரங்கள் தானெழுதி
புவனைவலிச் சக்கரங்கள் பீட மதில்நிறுத்தி
நமனை யழைக்கும் நல்லவலுச் சக்கரமும்
சத்தி நிறுத்தி சதாகோடிப் பீடமிட்டு
சுற்றிவர வோமம் சுழலக் கனலெழுப்பி
வேண்டும் படைப்பு விதம்விதமாய்த் தான்படைத்துக்
கூண்டு மலையரசன் குறளிகளைத் தான்வருத்தச்
சேவித்தான் மூன்று நாளாக மந்திரங்கள்
கோபித்துப் பார்த்தான் குறளிகள் தன்பேரில்
சற்றும் பலிக்காமல் சடைத்துமந்தி ரத்தோனும்
கற்றத் தொழிலும் கருவுங் கலைகலைந்து
என்ன விதமோ என்று மிகக்குளறி
மன்னன் மலையரசன் மார்கள் மிகநடுங்கி
எங்கே யினிப்போவோம் என்று மனம்பதறி
சங்கை யழிந்து சருவில் மிகஇறங்கி
தட்டழிந்து வாடி தவித்துநின் றேதுரைப்பார்
பட்டபா டேதெனவே பண்பாகக் கேட்பதற்குக்

குறத்தி வருதல்

குறத்தியொன்று காண்கிலமே குறிகேட்டுப் பார்ப்பதற்கு
உரைத்து அவரிருக்க உடையவ னாரருளால்
குறத்தி யொருத்தி குறப்பெட்டி யுமிடுக்கி
விறைத்துரைத்து வந்தாள் விசாரமிடு வோர்கள்முன்னே
கண்டார் குறத்தியையும் கலிதீர்ந்தோ மென்றுசொல்லி
வண்டாடுஞ் சோலை வனத்தில்வா என்றழைத்து

அருகி லிருத்தி அவளைமிக ஆதரித்துச்
சரிவிலுள்ள மாங்கனிதேன் தகையாற வேகொடுத்து
பசிதீர்ந்து குறத்தி பகர்வா ளொருவசனம்
விசியா யெனதுடைய பசிவிசா ரந்தீர்த்தீர்.
உங்க ளுடதுயரம் ஓட வழிகேளீர்
தங்களுக்கு மெங்களுக்கும் சகலவுயி ரானதுக்கும்
நாயகமாய் வந்து நாட்டில் மிகஇருக்கார்
வாச மணக்குதுகாண் வையகங்க ளீரேழும்
பேரு வைகுண்டர் பெரிய திறவான்காண்
நேரா யிருப்பவர்க்கு நிச்சமாய்க் கைகொடுப்பார்
அவரைநீங் கள்கண்டு ஆனதுய ரமுரைத்தால்
தவிருந் துயரமெல்லாம் சுவாமியவர் தன்னருளால்
என்று குறத்தி ஈதுரைக்க நாகரசர்
நன்று குறத்தியுடன் நம்துயரஞ் சொன்னோமோ
சொல்லா திருந்திடினும் சொன்னாளே நம்துயரம்
எல்லாத் துயரமதும் இதினாலே தீருமென்று
சந்தோசங் கொண்டு சற்குறத்தி யையனுப்பி
வந்தார்கள் தெச்சணத்தில் வைகுண்டர் வாழ்பதியில்
கண்டுவை குண்டரையும் கரங்குவித் தேபணிந்து
பண்டுபட்ட பாட்டைப் பகர்ந்தா ரவருடனே
கேட்டு வைகுண்டர் கிருபையுட னேதுரைப்பார்
நாட்டுக் குடைய நாராயணர் பாலன்
பிறந்து வைகுண்டம் பெரிய யுகமாளச்
சிறந்து தவசு செய்யு முறைமையினால்
துக்கக் களையறுத்துச் சுத்தமரை யாளாக்கிப்
பக்கக் களையறுத்துப் பகைஞரொன் றில்லாமல்
ஒருசொல்லுக் குள்ளே யுகமழித் துகமெழுப்பி
இருசொல்லுக் குள்ளே இராச்சியத்தை யாளுதற்குப்
பிறந்துகொண் டிருக்கும் பெருமைக் கடையாளம்
இறந்ததுகாண் பேய்கள் இப்போது தந்திரமும்
போக நினைத்தேன் பெரியதெய்வ முந்தனைத்தான்
வேகந் தனிலே விடுத்ததுகா ணென்றன்முன்னே
நல்லது கைவாய்த்து நமக்குவிதி தானாச்சு
பொல்லாத தெல்லாம் போக விதியாச்சு.
உந்தன் துயரம் ஒக்கஇப்போ தீரவென்றால்
எந்தன் மொழிகேட்டு இடைவீரோ நீங்களெல்லாம்
அப்போது மலையில் வாழு மலையரசர்

இப்போது சுவாமி என்னநீர் சொல்வீரோ
அதுக்கெல்லாம் நாங்கள் அல்லவென்று சொல்லோங்காண்
பொதுக்கெனக் கேட்டுப் புகல்வார் வைகுண்டருமே
மாந்திர தந்திர மாமுனிவன் சாஸ்திரமும்
உபாந்திர வாகடமும் உபாயச் சமூலமதும்
மாயக் கருவும் மாரண வித்தையதும்
உபாயக் கருவும் உயர்ந்தகரு மோடிகளும்
தம்பனவுச் சாடனமும் சல்லியம் பேதனமும்
வம்புசெய்யு மாஞால மந்திர மட்டகர்மம்
எட்டு மடக்கி இதுமுதலாய் மந்திரமும்
கட்டுடனே யிப்போ கருசமூ லத்துடனே
ஒக்கவைத்தோ மென்று ஒருடக்கா யுடக்கி
மிக்க என்முன்னே மேதினியீ ரேழறிய
ஆணையிட்டு வையும் அருமலையில் வாழரசா
நாணமிட்டுப் போகுமுன்னே நம்முன்னே வையுமென்றார்
உடனே மலையரசர் ஒக்க மனதலைந்து
குடலே மருண்டு குறுக முழிமுழித்து
வம்பறுக்க வந்த மாயக்கூத் தனெனவே
தம்பெலங்க ளற்றுத் தலைசாய்ந் துடனயர்ந்து
மாட்டோமென்றோ மானால் மலைமிருகங் கேளாது
வீட்டைப் பிரித்தெறிந்த மிருகம் விலகாது
குடியிருப்பு நமக்குக் குன்றுமே லங்குமில்லை
படியீரே ழளந்த பரமனம்மை யிங்குவிடார்
அய்யாவுரைத்த ஆணை வழிப்படியே
மெய்யாக வைத்து வீடுமட்டும் போயிருப்போம்
அல்லாதே போனால் அம்மலையி லிருப்புமில்லை
எல்லா மறிந்து இனிப்போவ துமரிது
என்று மலையரசர் எல்லோருஞ் சம்மதித்து
அன்று வைப்போமென்று அடிபணிந்து தெண்டனிட்டு
ஐயாவே யெங்களுட ஆதிநா ராயணரே
கையார வைக்கக் கருவுகொண்டு வந்தோமில்லை
ஏடுகொண்டு வந்தோ மில்லையே யெம்பரனே
வீடுவரைப் போயெடுத்து விரைவாக வாறோம்நாம்
என்றுரைக்க மந்திரத்தோர் எம்பெருமா ளேதுரைப்பார்
நன்று அதுதூரம் நம்முடைய கைக்குள்ளொரு
சூட்ச முண்டு பிள்ளாய் சொல்லக்கேள் நீங்களெல்லாம்
மாச்சல் படவேண்டாம் மலையரசா நீங்களெல்லாம்

எல்லா விதத்தொழிலும் இந்திரமா ஞாலமுதல்
எல்லாம் வைத்தோமென்று ஆணையிட் டாற்போதும்
நல்லதுவே யென்று நாடி மலையரசர்
வல்ல விதத்தொழிலும் மந்திரமா ஞாலமுதல்
எல்லா மடக்கி இப்போது வைத்தோமென்றார்
அய்யாணை யிட்டு அவர்முன்னே வைத்தார்காண்
மெய்யாணை யிட்டப் பொழுதே மலையரசர்
எங்கள் பிழைப்பு இப்போதே போச்சுதையா
தங்கடங்க ளொன்று தானிருக்கு தையாவே
இதினால் பிழைப்பு என்றிருந்தோ மித்தனைநாள்
விதியால் குறைந்ததுகாண் வித்தை பிழைப்பெல்லாம்
மலையில் பயிரிட்டு வயிறு பிழைப்பதற்கு
உலைவில்லா நொம்பலமும் உலாவுமிரு கச்சிறையும்
இல்லாமலே விலக்கி இப்போ தரவேணும்
நல்லாப் பயிர்விளைந்து நாங்கள் பிழைக்கவேணும்
என்று இவர்கேட்க இதுதந்தோ மென்றுரைத்தார்
அன்று அவரனுப்பி அவர்மலைக் கேகுகையில்
வைத்த தொழிலை மலையரசா நீங்களெல்லாம்
செயித்த தறியாமல் திருப்பியே செய்ததுண்டால்
நரக மதுபிடித்து நாள்வழியே கொன்னுகொன்னு
துரோக மடைந்து தீநரகில் மாள்வீர்கள்
என்று சபித்தார் எம்பெருமா ளானவரும்
அன்று அவர்கேட்டு அப்படியே வந்ததென்றால்
சொன்ன நரகில் செத்திறந்து போவோமென
அன்னப் பெருமாள்முன் ஆணையிட் டுப்போனார்
போனா ருலகில் பிச்சைவேண் டிக்குடித்து
வானோ ரறிய மந்திரமா ஞாலமற்று
மந்திர வித்தை மாமுனிவன் சாஸ்திரமும்
தந்திரமும் போச்சுதென்று சகலோருங் கொண்டாடி
வைகுண்ட சுவாமி வாய்த்த கணக்கதிலே
மெய்கொண்ட வானோர் மிகஅறியத் தானெழுதி
மேலோக மான வைகுண்ட ராச்சியமும்
பூலோக முமறியப் பெரியோ னெழுதினரே

விருத்தம்

மாந்திரங் கழிவு சூன்யம் மாரணக் கருவு கோளும்

உபாந்திரக் கேடு தீதோ)டு (ஊறியப் பொய்பொல் லாங்கு
ஏந்திய நினைவு பாசம் இதுமுதல் வினைக ளெல்லாம்
சாந்தியி லெரித்து நீற்றித் தர்மத்தை வளர்க்க லுற்றார்

**விளக்கம்**:

வைகுண்டர் மலையரசர்களை தங்களிடம் வர வைக்க வேண்டும் என்று மனதில் திருவுளம் கொள்ளுகின்றார். காரணம் பேய்களை அழித்தாகி விட்டது. இனிமேல் கலிமாயச் செயலாக இருக்கும் மந்திர தந்திர மாமுனிவர் சாஸ்திரங்கள் விந்தை செய்யும் மாய்மாலம் ஆகியவற்றின் விசையடக்க வேண்டும் என்று எண்ணுகின்றார். நெடுமலையில் வாழுகின்ற மலையரசர்களை வருவிக்க வேண்டும் என்று மனதில் திருவுளம் கொண்ட மாத்திரத்திலே மலையிலே வாழும் கொடிய மிருகங்களான ஆணை, புலி ,கடுவாய், கரடி கனத்த மந்தி குரங்கு போன்ற மிருகங்கள் முடுகி எழுந்து மூச்சிவிட்டு விரைவாக சென்று சீறி எழுந்து மலையில் வாழுகின்ற மலையரசர்களின் குடிசைகளைப் பிய்த்து எறிந்தும், அவர்களுடைய தொழிலை நடத்த விடாமல் விரட்டி அந்த மிருகங்கள் தொல்லை கொடுத்தன.

மிருகங்களினுடைய தொல்லைகளை பொறுக்க முடியாத மலை அரசர்கள் எல்லோரும் அங்கு அவர்கள் வழக்கப்படி என்ன மந்திர தந்திரங்களால் மிருகங்களை அடக்கி ஆள்வார்களோ அந்த மந்திர தந்திரங்களை எல்லாம் பயன்படுத்தி அவைகளை அடக்கி ஆள முற்பட்டனர். மேலும் ஓமம் வளர்த்து ஒரு கோடி பூசாரிந்து அரி ஓம் நமா என அட்சரங்களை எல்லாம் எழுதி புவனவலிச் சக்கரங்கள் பீடமதில் நிறுத்தி நமனை அழைக்கின்ற நல்ல வலு சக்கரமும் சக்தி நிறுத்தி சதா கோடி பீடமிட்டு சுத்தி வர ஓமம் எல்லாம் சுழல கனல் எழுப்பி யாகங்களை எல்லாம் வளர்த்து, அவர்கள் கற்றிருந்த மந்திரங்களை எல்லாம் ஓதி குறளிகளை வருத்தி மிருகங்களின் விசையடக்கப் பார்த்து, விதவிதமான படையல்களை எல்லாம் செய்து அந்த துஷ்ட சக்திகளை எல்லாம் வரவழைத்து அதன் மூலம் இந்த மிருகங்களினுடைய சக்தியை அடக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள்.

ஆனால் அந்த மலையரசர்களினுடைய செயலை அங்கு செயல்படுத்த முடியாமல் போய்விடுகின்றது. மூன்று நாளாக

தொடர்ந்து மந்திரங்களை எல்லாம் செபித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் பலன் கிடைக்கவில்லை. மேலும் கோபித்து குறளிகளை எப்படியாவது வரவழைத்து தங்களுடைய துன்பங்களை போக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். ஆனால் எந்தவிதமான செயலிலும் அவர்களுக்கு நன்மை நடைபெறவில்லை. உடனே துன்பப்பட்டு நம்முடைய மந்திரங்கள் எல்லாம் சக்தி இழந்து போய்விட்டதே என்று தங்கள் மனதில் வேதனை பட்டு கற்ற தொழிலும் கருவும் கலைக்கலைந்து போய்விட்டது. என்ன செய்வது என்று அந்த மலையரசர்கள் எல்லாம் பதறி வேதனை பட்டு தவித்து நின்றார்கள். அப்படி தவித்து இனி எங்கே போவது என்று அவர்கள் மனதில் எண்ணுகின்றார்கள்.

மனம் வேதனைப் பட்டு மலையை விட்டு கீழே இறங்கி வந்து இனி எங்கே போவது என்று தெரியாமல் தவித்தனர். மேலும் எண்ணுகின்றார்கள் இப்போது நம்முடைய குறைகளை அறிவதற்கு இங்கு ஒரு குறத்தி வந்தால் நன்றாக இருக்குமே என்று மனதில் எண்ணுகின்றார்கள். மலையரசர்களுடைய எண்ணத்தின் படியே அவருடைய எண்ணத்தை உணர்ந்து எம்பெருமான் அங்கே ஒரு குறத்தியை வரும்படிச் செய்கின்றார். அந்த குறத்தியானவள் குறப்பெட்டியை எடுத்துக்கொண்டு அங்கே குறி சொல்வதற்காக வருகின்றார். அப்போது அவர்கள் மகிழ்ந்து அந்த குறத்தியை உபசரித்து அவளுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்கின்றார்கள்.

அவ்வாறு குறத்தி பார்த்த உடனே அவர்களுக்கு சந்தோஷம் எப்படி என்றால், நாம் இப்போது நம்முடைய வேதனைகளை எல்லாம் தீர்த்து விட்டோம் என்று சொல்லி அந்த சோலையிலே வனத்தில் அழைத்துச் சென்று அவர்களை அருகில் மிக இருத்தி ஆதரித்து அங்கு இருக்கின்ற மாங்கனி தேன் இவற்றையெல்லாம் பசி ஆற்றுவதற்காகவே கொடுத்து அந்த குறத்தியின் உடைய பசியை தீர்த்து அமர்ந்து இருக்கும் போது குறத்தி மனம் மகிழ்ந்து என்னை சிறப்பாக ஆதரித்து என் பசியைத் தீர்த்துக் கொடுத்தீர்கள். இப்போது உங்கள் குறை அகல வழியைக் கூறுகிறேன் என்றுக் குறிச்சொல்ல ஆரம்பித்தாள்.

எப்படி என்றால் தங்களுக்கும் எங்களுக்கும் சகல உயிர் ஆனதற்கும் நாயகமாய் ஒருவர் வந்திருக்கின்றார். வாசம்

மணக்குது தான் வையகம் எங்கும் அதாவது அவருடைய நாமம் உலகம் எங்கும் பரவிக் கொண்டிருக்கின்றது. வைகுண்டர் என்ற நாமத்தோடு அவர் இருந்து கொண்டிருக்கின்றார். அவரை நீங்கள் கண்டு உங்களுடைய துயரத்தை எல்லாம் சொன்னீர்களேயானால் உங்கள் துயரை மாற்றுவதற்குரிய வழிகளை எல்லாம் அவர் கூறுவார் என்று அந்த குறத்தியானவள் அந்த மலை அரசர்களிடம் கூறுகின்றாள்.

இதைக் கேட்ட உடனே மலையரசர்கள் நம்முடைய துயரத்தை நாம் சொல்லாமலே நம்முடைய துயரைப் போக்குவதற்கு அவள் வழிகாட்டினாளே ஆகவே நாம் இந்த தெட்சணத்தில் இருக்கின்ற வைகுண்டரிடம் செல்வோம் என்று சொல்லி அங்கே வந்து கரம் குவித்து பணிந்து வேண்டி நின்றார்கள்.

வைகுண்டரிடம் வந்த மலையரசர்களாகிய மந்திரவாதிகள் தங்கள் பட்ட பாட்டை எல்லாம் சுவாமியிடம் கூறி வருந்தினர். அப்போது வைகுண்டர் அவர்களிடம் நாட்டிற்கு உடைய நாராயண பாலன் வைகுண்டமாய் தோன்றி அசுர சக்திகளை எல்லாம் அழித்து சுத்தமரை தேர்ந்தெடுத்து ஒரு சொல்லுக்குள்ளே யுகம் அழித்து இரு சொல்லுக்குள் இந்த உலகத்தை தீமைகள் ஒன்றில்லாமல் பெரியயுகம் ஆழ நினைத்து தவசி இருக்கின்ற காரணத்தினால் பேய்களை எல்லாம் இப்போது அழித்தாகிவிட்டது.

இப்போது மந்திர தந்திரங்களையும் போக நினைத்தேன். ஆனால் பெரிய தெய்வமாகிய பர பிரம்மம் உங்களை என் முன்னால் கொண்டு வந்து விட்டு இருக்கின்றது. நல்லது தான். பொல்லாதது எல்லாம் போவதற்கு விதி ஆகிவிட்டது. கலியனோடு தோன்றி வந்த அத்தனை தீமைகளையும் அழிப்பதற்கு நேரம் நெருங்கி இருக்கிறது. நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பீர்களேயானால் உங்கள் துயரம் தீரும் என்றார். உடனே அவர்களெல்லாம் சுவாமி என்ன நீர் சொல்வீரோ அவற்றை எல்லாம் நாங்கள் செய்கிறோம். அதற்கெல்லாம் நாங்கள் அல்லவென்று சொல்ல மாட்டோம் என்று பணிந்து நின்றார்கள்.

வைகுண்டர் அவர்களிடம் மந்திரம், தந்திரம், உபாந்திர வாகனம், உபாய சமூலம், மாயக்கரு, மாரண வித்தைகள், உயர்ந்த கருமோடிகள், தம்பன உச்சாடனம், சல்லியம், பேதனம், வம்பு செய்யும் மாஞாலம் , மாந்திர அட்டகர்மம் இது முதல்

ஆனதெல்லாம் கரு சமூலத்துடன் ஒக்க அடைக்கி என் முன்னே மேதினியோர் ஈரேழு அறிய ஆணையிட்டு வையுங்கள் என்றார்.

உடனே அவர்கள் எல்லாம் மனதலைந்து, மருண்டு, குறுமுளி முழித்து வேதனைப்பட்டு இவர் வம்பறுக்க வந்த மாயக்கூத்தன் இவர்தான். இவர் சொல்லுகிறதை மறுத்தால் மலை மிருகம் நம்மை அங்கு வாழ விடாது. நம்முடைய குடியிருப்பு அலைந்து போய் விடும். இவரும் இங்கிருந்து நம்மை போகவிடார் என்று எண்ணி அய்யா உரைத்த ஆணையின்படி மெய்யாகவே எல்லாம் வைப்போம் என்று அடிபணிந்து தெண்டனிட்டு கூறினார்கள். மேலும் அவர்கள் இப்போது இங்கு வைப்பதற்கு கருவும் கொண்டு வரவில்லை. ஏடு முதலானவற்றை நாங்கள் கொண்டு வரவில்லை அய்யா, எனவே வீடு வரை சென்று எடுத்து விரைவாக வருகிறோம் என்று கூறினார்கள்.

உடனே வைகுண்டர் அதற்கு நீங்கள் வீடுவரை சென்று எடுத்து வர வேண்டாம். நீங்கள் வீடுவரை செல்ல வேண்டாம் என் கைக்குள்ளே ஒரு சூட்சமம் இருக்கிறது. எல்லாவித தொழிலும் இந்திர மாயாசாலம் முதல் எல்லாம் அடக்கி இப்போது வைத்தோம் என்று ஆணையிட்டால் போதும் என்றார். உடனே மலையரசர்கள் எல்லோரும் அய்யா ஆணை என்று மெய்யாணை இட்டு வைகுண்டரின் முன்பு வைத்தார்கள். வைத்தவர்கள் வைகுண்ட சுவாமியிடம் எங்கள் பிழைப்பு இப்போதே போச்சுதயா இத்தனை நாளும் நாங்கள் இதனால் பிழைப்பு என்று எங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தோம்.

இந்த வித்தை பிழைப்பு எல்லாம் விதியினால் குறைந்து போய்விட்டது. இனி எங்களை உணவில்லா நொம்பலத்திலிருந்தும், மிருகசிறையிலிருந்தும் விடுவித்து மலையில் பயிரிட்டு வயிறு பிழைக்க வரம் தர வேண்டும் என விண்ணப்பித்தனர். உடனே வைகுண்டர் இது தந்தோம் நீங்கள் மலையிலே பயிரிட்டு அதனால் வருகின்ற வருமானத்தின் மூலம் உங்களுடைய வாழ்க்கை பிழைப்பை நடத்திக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு வரம் அருளினார். மேலும் வைகுண்ட சுவாமி அவர்களிடமிருந்து ஒரு எச்சரிக்கை வாசகத்தை கூறி அனுப்பினார்.

எப்படி என்றால் மலையரசர்களிடம் நீங்கள் இப்போது இங்கே ஆணையிட்டு வைத்திருக்கின்றீர்கள் எந்தவிதமான மந்திர தந்திர வைத்திய வாகடங்கள் எல்லாம் இனி நாங்கள் செய்ய மாட்டோம். அதை மீறி நீங்கள் திருப்பி அதை செய்தது உண்டானால் உங்களுக்கு கடும் நரகமது பிடித்து நாள்வழியே கொன்னு கொன்னு துரோகம் அடைந்து தீநரகில் சென்று வாழ்வீர்கள் அதாவது தினம் தினம் துன்பங்களை அனுபவித்து நரகில் செல்வீர்கள் என்று ஒரு சாபத்தையும் வைகுண்டர் மலையரசர்களுக்கு கொடுத்தார்.

மேலும் நீங்கள் இதைக் கேட்டு அப்படியே நாங்கள் செய்தால் தாங்கள் சொன்னது போல் நரகில் செத்திறந்து போவோம் என்று ஆணையிட்டு செல்லுங்கள் என்று கூறினார். அதன்படி அவர்களும் ஆணையிட்டு அங்கிருந்து சென்றார்கள். அவர்கள் போனவுடன் மேலும் கூறுகின்றார் நீங்கள் செல்கின்ற இடம் எல்லாம் உலகில் பிச்சை வேண்டி குடித்து வாழ்ந்து வாருங்கள் என்று கூறி விடைக்கொடுத்தார். அவர்களை அனுப்பி விட்டு இந்த உலகம் அறியும் படியாக மந்திர தந்திர மாய் ஞாலம் வித்தை மாமுனிவன் சாஸ்திரமும் தந்திரமும் போச்சுதென்று சகலோரும் கொண்டாடி பூலோகம், மேலோகமும் அறியும் படியாக வைகுண்ட இராச்சியத்தில் வைகுண்டசாமி கணக்கில் வானோர்கள் எழுதி வைத்தார்கள்.

மந்திர தந்திர வைத்திய வாகடங்கள் முதலானகேடுகளையும் பொய்ப் பொல்லாங்குகளையும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும் மலங்களையும் மூ வினைகளையும் ஞான அக்கினியில் எரித்து நீற்றி தர்மத்தை வளர்த்தார். வைகுண்ட வாசனான நல்ல நாராயணரே நாகமணி வைகுண்ட ராய் செல்ல திருவுள மாய் சீமைக்கு உறுதியுமாய் மனித அவதாரம் எடுத்து பனிதவழும் பாலருட வம்சத்தில் தெட்சணம் எழுந்தருளி வாதை பேய்களையும் குறளி கரு வைத்தியம் போன்ற ஆகாதவைகளை எல்லாம் ஞானக்கினியாள் எரித்து அழித்து நல்லவர்களை தேர்ந்தெடுத்து தர்மபதியில் சேர்த்து இன்னும் சாகாமல் பேரானந்த பெருநிலையில் இருந்து வாழ்வதற்கான தருமத்தை கூறலுற்றார்.

**வினாவிடை:**

1. மந்திர தந்திரங்களோடு எவற்றை அழிக்க வேண்டும் என்று நினைத்தார்.?
   மந்திர தந்திரம் மாமுனிவன், சாஸ்திரம் விந்தை செய்யும் மாய்மாலம் ஆகியவற்றினுடைய விசையை அடக்க வேண்டும் என்று எண்ணினார்.

2. மலையரசர்களுடைய மந்திரம் எவ்வாறு பலிக்காமல் போனது?
   மலையரசர்கள் தன்னுடைய மந்திர தந்திரத்தினால் விலங்குகளை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தனர். ஆனால் விலங்குகள் இப்போது அவர்களுடைய மந்திரங்களுக்கு கட்டுப்படாமல் அந்த மலை அரசர்களை எதிர்த்து அவர்களுக்கு அழிவுகளை உருவாக்கியது. அவர்கள் வாழ்ந்து வந்த குடிசைகளை எல்லாம் பிரித்து எறிந்தது. இதனால் அவர்களுடைய மந்திர தந்திரங்கள் பலிக்காமல் போய் பதறி இருந்தார்கள் மந்திரவாதிகள்.

3. மந்திரவாதிகள் தங்களுடைய மந்திரங்களை செயல்படுத்துவதற்காக எத்தனை கோடி பூ சொரிந்து ஓமம் வளர்த்தார் கள். ?
   ஒரு கோடி

4. மந்திரவாதிகள் வளர்த்த ஓமத்தில் எந்த அச்சரத்தை எழுதி எறிந்தார்கள்?
   ஆமா அரி என்ற அச்சரத்தை எழுதி ஓம குண்டத்தில் எறிந்தார்கள்.

5. மந்திரவாதிகள் யார் யாரை அழைப்பதற்காக உரிய மந்திரங்களை கூறி ஓமம் வளர்த்தார்கள்?
   புவனவலி சக்கரங்கள் பீடமதில் நிறுத்தி நமனை அழைக்கும் நல்லவலு சக்கரமும் சக்தி நிறுத்தி சதா கோடி பீடமிட்டு சுத்தி வர ஓமம் சுழல கனலெழுப்பி வேண்டும் பல படைப்புகள் விதவிதமாக படைத்து குறளிகளை தான் வருத்துவதற்குரிய மந்திரங்களையும் ஜெபித்தார்கள்.

6. மலையரசர்கள் தங்கள் நினைத்ததை வருத்தும் படியாக மந்திரங்களை கூறி எத்தனை நாட்களாக இருந்து ஓமம் வளர்த்தார்கள்?
   மூன்று நாட்களாக

7. மலையரசர்கள் மனம் பதறி நிற்பதற்குரிய காரணம் என்ன?
மலை அரசர்கள் கற்ற தொழிலும் கருவும் கரு கலைந்து போன காரணத்தினால் மனம் பதறி இருந்தார்கள்.

8. மந்திரவாதிகளினுடைய மந்திரம் பலிக்காமல் போனதினால் மந்திரவாதிகள் தட்டழிந்து வாடி தவித்து நின்று என்ன நினைத்தார்கள்?
குறத்தி ஒன்று வந்தால் குறி கேட்கலாமே என்று நினைத்தார்கள்.

9. தனிநாடி வந்த குறத்திக்கு மந்திரவாதிகள் எவ்வாறு உபசரணம் செய்தார்கள்?
குறத்தியை கண்ட உடன் மகிழ்ந்து அந்த வனத்திலே அழைத்துச் சென்று மாங்கனிகள் தேன் போன்றவற்றை தகையாறக் கொடுத்து பசி தீர்த்து இருந்தார்கள்.

10. மந்திரவாதிகள் குறத்தியுனுடைய பசியை தீர்த்து இருந்தவுடன் குறத்தி கூறிய மறுமொழி யாது?
என்னுடைய பசியை தீர்த்து என்னை உபசரித்தீர்கள் நான் உங்களுடைய துயரம் ஒடுவதற்கு வழி சொல்லுகின்றேன். தங்களுக்கும் எங்களுக்கும் சகல உயிரானதற்கு நாயகமாய் வந்து நாட்டில் மிக இருக்கின்றார் வைகுண்டம் என்று வந்திருக்கின்றார். அவரிடம் சென்று நம் துயரம் சொன்னமே ஆனால் எல்லாருடைய துயரமும் தீரும் என்று சொல்லி குறத்தியானவள் மந்திரவாதிகளிடம் கூறினார்.

11. குறத்தியானவள் கூறிய குறியை கேட்ட மந்திரவாதிகளினுடைய நிலை என்ன?
நாம் நம்முடைய துயரத்தை சொல்வதற்கு முன்பாக நம்முடைய துயரத்தை எல்லாம் சொல்லிவிட்டாளே ஆகவே அவள் கூறியதைப் போன்று தெட்சணத்தில் இருக்கின்ற வைகுண்டரிடம் நாம் சென்று முறையிட்டு நம்முடைய துயரங்களை போக்குவதற்கு வழி தேடுவோம் என்றுக் கூறினார்கள்.

12. மந்திரவாதிகள் வைகுண்டரை நாடி வந்து தங்களுடைய குறைகளை கூறியவுடன் மந்திரவாதிகளிடம் வைகுண்டர் கூறிய மறுமொழி யாது? நாட்டிற்கு உடைய நாராயணர் பாலன்

வைகுண்டம் பிறந்து இந்த துக்க களையறுத்து சுத்தமரை ஆளாக்கி பக்க களை அறுத்து பகைவர் ஒன்று இல்லாமல் ஒரு சொல்லுக்குள்ளாக இந்த ராஜ்யத்தை ஒரு குடைக்குள் ஆள பிறந்திருக்கின்ற காரணத்தினால் பேய்களும் தந்திர மந்திரங்களும், கலியோடு கூடிய அத்தனையும் அழிக்க வேண்டும். அதற்கு நல்ல விதியாகி இருக்கின்றது ஆகவே பொல்லாததெல்லாம் போவதற்கு விதியாகிவிட்டது உங்களுக்கும் இப்போது அந்த மந்திர தந்திரங்கள் பலிக்காமல் போயிருக்கின்றது அவையெல்லாம் அளித்து விட வேண்டும் என்று கூறினார்.

13. வைகுண்டர் மலையரசர்களுக்கு இட்ட கட்டளை யாது?
வைகுண்டர் மலை அரசர்களிடம் மந்திர தந்திர மாமுனிவர் சாஸ்திரம், உபாந்திர வாகனமும் உபாய சமூலமும் மாயக்கருவும் மரண வித்தையதும் உபாயக்கருவும் உயர்ந்த கருமோடிகளும் தம்பனமும் உச்சாடனமும் சல்லியம் பேதனமும் வம்பு செய்யும் மாஞால மந்திர அட்ட கருமம் எட்டு மடக்கி இது முதலாம் மந்திரம் கட்டுடனே இப்போது சர்வ சமூலத்துடனே ஒக்க வைத்தோம் என்று இங்கு ஆணையிட்டு வையுங்கள் என்று கூறினார்.

14. மந்திர தந்திரங்களை எல்லாம் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வைகுண்டம் மந்திரவாதிகளிடம் கூறியவுடன் மந்திரவாதிகள் உடைய மனநிலை எவ்வாறு இருந்தது?

இப்போது வைகுண்டர் கூறியதை கேட்காவிட்டால் நம்மால் பிழைக்க முடியாது. காரணம் நம்முடைய இல்லங்களுக்கு சென்றாலும் மலை மிருகம் அங்கே நம்மை வாழ விடாது ஆகவே வைகுண்டர் உரைத்தபடி எல்லாவற்றையும் இங்கே ஒப்படைத்து விட்டு செல்லுவோம் இல்லாதே போனால் அங்கு சென்று நாம் வாழ்வதற்கு இயலாது என்று மனதில் எண்ணினார்கள்.

15. மந்திர தந்திரங்களை எல்லாம் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறிய வைகுண்டரிடம் மந்திரவாதிகள் கூறிய மொழி யாது?
மந்திரவாதிகள் வைகுண்டரிடம் அய்யாவே நாங்கள் ஏடு கொண்டு வந்தோம் இல்லை கையாரவைக்க கருவும் கொண்டு

வந்தோம் இல்லை ஆகவே வீடு வரை போய் எடுத்து வருகிறோம் என்று கூறினார்கள்.

16. வீட்டிற்கு சென்று மந்திரங்களை தந்திரங்களுக்குரிய ஏடுகளை எடுத்து வருகின்றோம் என்று கூறிய மந்திரவாதிகளுக்கு அய்யா வைகுண்டர் கூறிய பதில் யாது? நீங்கள் வீடுகளுக்கு சென்று அவற்றை எடுத்து வர வேண்டாம் இப்போது எல்லா தொழிலும், இந்திர மாய்ஞாலமுதல் எல்லா ம் இப்போது அடக்கி இப்போது வைத்தோம் என்று ஆணையிட்டால் போதும் என்றார்.

17. மந்திர தந்திரங்களை எல்லாம் வைகுண்டரிடம் ஒப்படைத்துவிட்ட மந்திரவாதிகளுக்கு அடுத்து வாழ்வதற்கு அய்யா கூறிய வழி யாது?

    மலைகளிலே பயிரிட்டு அதனால் வருகின்ற வருமானத்தின் மூலம் வாழ்வாதாரத்தை தேடி கொள்ளுங்கள் என்று கூறி மலையரசர்களுக்கு விடை கொடுத்தார்.

18. மந்திரவாதிகளுக்கு அய்யா இட்ட நிபந்தனை யாது?
    நான் கூறியதை மீறி நீங்கள் மீண்டும் மந்தர தந்திரங்களை வைத்து பிறருக்கு தொல்லை கொடுத்தீர்களேயானால் உங்களை அழித்து நரகில் தள்ளி விடுவேன் என்றுக் கூறினார்.

19. அய்யா வைகுண்டர் மந்திர தந்திரங்களை அழித்த பிறகு மக்களுக்கு எவ்வாறு தர்மங்களை கூறினார்?
    குண்டணி பேய், பொய்யும் குறளி கரு வைத்தியமும் ஆகாது என அழித்து வாகாக தர்மமதாய் வாழுங்கோ என்றார். அதாவது தீமையை எல்லாம் அழித்துவிட்டு நீங்கள் தர்ம சிந்தனையோடு வாழுங்கள் என்று சொல்லி தர்ம உரைத்தார்.

    அய்யா தர்மம் கூறல்

    நடை

    நல்லநா ராயணரும் நாமமணி வைகுண்டராய்ச்
    செல்லத் திருவுளமாய்ச் சீமைக் குறுதியுமாய்
    மனிதவதா ரமெடுத்து வைகுண்ட வாசவனும்

பனிதவழும் பத்தினியாள் பாலருட வங்கிசத்தில்
தனுவையடக்கி தவசு இருந்துகொண்டு
ஒன்றாக்கி வாழ உலகமதிலிருந்து
உண்டாகி வளர்ந்து உலக மறிவதற்கு
குண்டணிப்பேய் பொய்யும் குறளிக்கரு வைத்தியமும்
ஆகா தெனஎரித்து அப்பிறப் புமறுத்து
வாகாகத் தர்மபதி வாழுங்கோ மானிடரே
என்றுசொல்லித் தர்மம் எம்பெரு மாள்நினைத்து
மன்றுபதி னாலறிய வாய்த்ததர்மங் கூறினரே
இன்றுமுத லெல்லோரும் இகபரா தஞ்சமென்று
ஒன்றுபோ லெல்லோரும் ஒருபுத்தி யாயிருங்கோ
காணிக்கை யிடாதுங்கோ காவடி தூக்காதுங்கோ
மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ
வீணுக்குத் தேடுமுதல் விறுதாவில் போடாதுங்கோ
நாணியிருக்காதுங்கோ நன்றிவுள்ள சான்றோரே
வைகுண்டருக் கேபதறி வாழுவ தல்லாமல்
பொய்கொண்ட மற்றோர்க்குப் புத்தியயர்ந் தஞ்சாதுங்கோ
அவனவன் தேடுமுதல் அவனவன்வைத் தாண்டிடுங்கோ
எவனெவனுக் கும்பதறி இனிமலைய வேண்டாமே
என்று வைகுண்டர் இராச்சியத்தி லுள்ளோர்க்குக்
கன்றுக்குமா தாஇரங்கிக் கற்பித்தது போலுரைத்தார்
எல்லோருங் கேட்டு எங்கள்வினை தீர்ந்துதென்று
நல்லோர்கள் முன்னே நவின்றிருந்த சொற்படியே
வருவார் வைகுண்டர் வந்தா லிருப்பவர்க்குத்
தருவார் கெதிகள் சாகாத வாழ்வுகளும்
என்றுசொல்லி முன்னோர் எங்கள்கா லமதிலே
நன்று திருமொழியை நாங்களுமே தான்கேட்க
எங்கள் கலிதீர்ந்து எம்பரனே யென்றுசொல்லி
சங்கை யுடனேபல சாதியெல் லாமறிந்தார்
நருளறிய தர்மமிதை நாட்டியே யென்பெருமாள்
துரித முடனே தொல்புவியில் வாழுகின்ற
பட்சி பறவைகட்கும் பலசீவ செந்துகட்கும்
அச்சு அரிமுதற்கும் ஆனமிரு கங்களுக்கும்
ஊர்வனங் களானதுக்கும் உதித்தபுற் பூண்டுகட்கும்
கார்சேட னாறுகட்கும் கரடுகல் லானதுக்கும்
உத்தரவாய்த் தர்மம் உரைக்கிறா ரன்போரே
சித்திரமாய்கேட்டு சிறந்திருக்கும் அன்போரே

மிருகமொடு மிருகம் மிகமகிழ்ந்து வாழ்ந்திருங்கோ
மறுக்கலச்சலிட்டு மாளாமல் வாழ்ந்திருங்கோ
உங்களுக்குப் புற்பூண்டு உண்டு மதைப்புசித்துச்
சங்கையுட னோர்தலத்தில் தண்ணீர் குடித்திருங்கோ
வாந்திருங்கோ நீங்கள் வைகுண்ட ருண்டெனவே
தாழ்ந்திருங்கோ வென்று தங்கள் கிளைபோலே
மிருக இனத்துக்கு இதுவுரைத்துப் பட்சிகட்கு
உறுதி யுடனே உரைத்தார்வை குண்டருமே
பட்சியெல்லா இனமும் பண்பா யொருஇனம்போல்
கட்சி யுடனே களிகூர்ந்து வாழ்ந்திருங்கோ
சிறிது பெரிது என்றுமிகச் சீறாமல்
உறுதி பெரிது உடையோனே தஞ்சமென்று
கூடிக் குலாவி குணமாய் மகிழ்ந்திருங்கோ
நாடி யுரைத்தார் நல்லபட்சி தங்களுக்கு
புல்பூ டானதுக்கும் பொறுதி மிகவுரைத்துக்
கல்வாரி தனக்கும் கனத்தசே டன்தனக்கும்
தங்கள் தங்களுக்கு தாழ்மை மிகவுரைத்து
மங்கள மாக மனமகிழ்ந்து வைந்தருமே
நாட்டுக்கு நம்முடைய நல்லதர்மத் தின்படியே
கூட்டுக்கு ஏற்றக் குருவுபதே சம்போலே
எய்யாமல் நாதன் எல்லோருந் தானறிய
செய்தர் மஞாயச் செய்திகே ளும்நடுவே

விருத்தம்

அன்னீதத் தாலே லோகம் அவனி யீரேழும் வாடி
குன்னியே கலியில் மூழ்கிக் குறுகியே யலைவர் கண்டு
கன்னிகள் மதலை யானக் கற்பகக் குலங்கள் தன்னில்
மன்னிய மனுப்போல் தோன்றி மன்னுகத் துதித்தார் தானே

விருத்தம்

உதித்தாயிரத் தெட்டாமாண்டில் உவரிசெந் தூரில்பெற்றுக்
குதித்தாண் டருள்மாசியில் தெச்சணா குருநாட்டினில்
பதித்தாமரை யூரினில் பள்ளிதான் கொண்டநாள்
விதித்தாமிதைத் கருத்தாய் அருளுரைத்தா ரறவுரையே

விருத்தம்

பொய்யில்லை பசாசு இல்லை பில்லியின் வினைக ளில்லை
நொய்யில்லை நோவு மில்லை நொம்பலத் துன்ப மில்லை
தொய்யில்லை யிறைக ளில்லை சுருட்டுமா ஞால மில்லை
மையில்லை உலகத் தோரே வாழுமோர் நினைவா யென்றார்

விருத்தம்

இத்தனை யெல்லா மில்லை என்றறி நாதன் சொல்லப்
புத்தியி லறிந்து மண்ணோர் புதுமையென் றன்பாய் கண்டு
முத்தியி லிவரைக் கண்டு முயன்றவர் பேறு பெற்றார்
பத்தியில் லாதா ரெல்லாம் பாழெனச் சொல்லி நின்றார்

விருத்தம்

இப்படி மனுட ரெல்லாம் இவர்மொழி தர்மங் கண்டு
ஒப்புடன் கூடி வந்து ஒருவனே தஞ்ச மென்று
செப்பிடத் தொலையா தையா சீர்பதம் பதமே யென்று
நற்புடன் மனுட ரெல்லாம் நாடியே மகிழ்ந் திருந்தார்

கலியரசன் வைகுண்டரைப் பிடிக்க வருதல்

விருத்தம்

நாடியே யுலகி லுள்ள நருடகளோர் தலத்தில் வந்து
கூடியே நிற்கும் போது குறோணிதன் கொடியால் வந்த
சாடிக ளதினால் நீசன் சாகிற தறியா மீறி
பாடிய வைந்தர் தன்னைப் படையேவிப் பிடிக்க வந்தான்

விருத்தம்

வந்தவன் சுசீந்திரந் தன்னில் வளைந்து கூடார மிட்டு
மந்திரி மாரை நோக்கி வகையெனப் புகல்வா னீசன்
இந்தமா நிலத்தி லென்னோ) டு (எதிரிதா னாரோ சொல்வீர்
விந்தையா யவரைச் சென்று விருதிட்டு வருக என்றான்

**விளக்கம்**:

அய்யா வைகுண்டர் தன்னை நாடி வந்த மக்களிடம் ஆகாததெல்லாம் அழிக்கப்பட்டு விட்ட காரணத்தினால் நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம் என்று தன்னை நாடி வந்த மக்களிடம் தர்மத்தை போதித்தார். மேலும் ஈரேழு உலகங்களும் அறியும் படியாக தர்மபதியில் வாழ்வதற்குரிய வழிவகைகளை எல்லாம் எடுத்துக் கூறினார். எவ்வாறு என்றால் இன்று முதல் நீங்கள் எல்லோரும் இகாபரா தஞ்சம் என்று வாழ்ந்து வாருங்கள். காரணம் பேய் பிசாசுகள் மந்திரம் கழிவு சூனியம் அத்தனையும் அங்கே அழிக்கப்பட்ட விட்டது. ஆகவே இன்று முதல் எல்லோரும் இறைவனே தஞ்சம் என்று வாழ்ந்து வாருங்கள்.

இறைவனே தஞ்சம் என்று சரணடைந்தவருக்கு அகப்பகைகளோ அல்லது பேய் பிசாசுகளினுடைய தொல்லைகளோ மந்திர தந்திரங்களோ உங்களை வந்து அணுகாது. எந்தவித துன்பங்களும் உங்களை அணுகாது. ஆகவே இறைவனை தஞ்சம் என்று ஒன்று போல ஒரு புத்தியாக வாழ்ந்து வாருங்கள். இதுவரையிலும் இருந்த புற வழிபாட்டு முறைகளை எல்லாம் தவிர்த்திருங்கள். முந்தைய வழிபாட்டு முறைகளை எல்லாம் விட்டுவிட்டு வைகுண்டமே பரம்பொருள் இந்த கலியழிக்க வந்த கடவுள் என்று ஒரு புத்தியாக இருந்து இறைவனை வழிபட்டு வாருங்கள்.

காணிக்கை இடாதுங்கோ, காவடி தூக்காதுங்கோ, மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ இறைவனின் பெயரை சொல்லி காணிக்கை போடுவதோ இறைவனுக்கு காவடி தூக்குகிறோம் என்று காவடி தூக்குவதோ செய்ய வேண்டாம். வைகுண்டரை உன் மனதிலே தன்னுடைய உள்ளில் அறிந்து கொள்ள வேண்டும். எல்லா உயிர்களிலும் உயிருக்கு உயிராக வைகுண்டம் இருந்து கொண்டிருக்கின்றார். வைகுண்டத்தை தன்னுள் உணர்ந்து கொள்ள புற வெளிப்பாடுகள் தேவை இல்லை. வீணுக்கு தேடும் முதல் விறுதாவில் போடாதீங்கோ! இறைவனின் பெயரை சொல்லி காணிக்கை இடுவது காவடி தூக்குவது, ஆடம்பரமாக நடத்தும் திருவிழாக்கள், ஆராட்டு, தேரோட்டம் இவை எல்லாம் தேவை இல்லை. இதற்காக நீங்கள் உழைத்து சேர்க்கும் செல்வங்களைச் செலவிட வேண்டாம்.

வைகுண்டருக்கு பதறி வாழ்வது அல்லாமல் பொய் கொண்ட மற்றவர்க்கு புத்தி அயர்ந்து அஞ்சாதிங்கோ. கலியுகத்தில் பொய் புரட்டு பித்தலாட்டம் அதிகமாக இருக்கும். அவர்களுக்கு பயந்து நீங்கள் யாரும் அஞ்ச வேண்டாம். வைகுண்ட பரம்பொருள் நம்மோடு இருக்கிறார். அவர் ஒருவரே தஞ்சம் என்ற உண்மை என்பதை அறிந்து நீங்கள் வாழ்ந்து வாருங்கள். அவரவர் தேடுகின்ற செல்வங்களை எல்லாம் அவரவர்களே வைத்து ஆண்டிடுங்கோ. அதை யாருக்கும் நீங்கள் கொடுக்க வேண்டாம். மேலும் நீங்கள் யாருக்கும் பதறி அலைய வேண்டாம். வைகுண்டா என்று மனதில் ஏற்று வாழ்ந்திருங்கோ என்று இந்த உலகில் உள்ள மக்களுக்கு எப்படி கன்றுக்கு மாதா இரங்கி புத்தி உரைப்பாளோ அதுபோல வைகுண்டர் நாட்டு மக்களுக்கு நல்ல சிந்தனைகளைப் போதித்தார்.

எல்லாம் கேட்டு எங்கள் வினை தீர்ந்தது என்று நல்லவர்கள் எல்லோரும் அய்யாவே தஞ்சம் என்று வாழ்ந்து வந்தார்கள். அப்போது அய்யாவினுடைய புகழ் எல்லா திசைகளிலும் பரவ ஆரம்பித்தது. மேலும் மேலும் மக்கள் கூட்டம் அய்யாவை நாடி வந்த வண்ணம் இருந்து. வைகுண்டர் எல்லோருக்கும் சாகாத வாழ்வும் தருவார் என்று சொல்லி மக்கள் அய்யாவை நாடி வந்தார்கள். அய்யாவை நாடி வந்தவர்களுடைய துயர துன்பங்கள் எல்லாம் நீங்கிவிட்டதை அறிந்து எல்லா சாதி மக்களும் வைகுண்டரே தஞ்சம் என்று அய்யாவை நாடி வந்தார்கள். இவ்வாறு மக்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே இருந்தது.

இவ்வாறு மக்களுக்கு தர்மத்தை போதித்த வைகுண்டர் அடுத்ததாக ஊர்வனங்களுக்கும், பட்சி பறவைகட்கும், மிருகங்களுக்கும், பல ஜீவ செந்துகளுக்கும், புற்பூண்டுகளுக்கும், கடல்,ஆறு,மலை,கல் என இறைவனால் படைக்கப்பட்ட அத்தனைக்கும் தர்மத்தை போதித்தார்.

மிருகங்களுக்கு இந்த புவியில் வாழுகின்ற மிருகங்களுக்கு அய்யா தர்மத்தை போதிக்கின்றார். எப்படி என்றால் நீங்கள் ஒவ்வொரு மிருகங்களும் மிருகத்தோட மிருகம் மிக மகிழ்ந்து ஒற்றுமையாக வாழ்ந்து வர வேண்டும். யாருக்கும் அலைச்சல் செய்யாமல் வாழ்ந்து வர வேண்டும். உங்களுக்கு என்று உருவாக்கப்பட்ட புல் பூண்டுகளை அதை புசித்து சங்கையுடன் ஒரு தலத்தில் தண்ணீர்

குடித்து வாழ்ந்து வாருங்கள். வைகுண்டா என்று நீங்கள் தாழ்ந்திருக்க வேண்டும்.

நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று போல யாருக்கும் எந்த வித துன்பங்களும் நேராக வண்ணம் நீங்கள் வாழ்ந்து வரவேண்டும் என்று மிருகங்களுக்கு அய்யா தர்மத்தை உரைத்தார். அடுத்ததாக பட்சி பறவைகளுக்கெல்லாம் தருமத்தை உரைத்தார். எவ்வாறு என்றால் நீங்கள் எல்லோரும் பண்பாக ஒரு இனம் போல் கட்சியுடனே கூடி ஒற்றுமையாக வாழ்ந்து வர வேண்டும். பெரிது சிறிது என்று வேற்றுமை பாராட்டாமல் உறுதி உடனே உடையவனாகிய வைகுண்டமே தஞ்சம் என்று நீங்கள் வாழ்ந்து வரவேண்டும்.

மனதிலே உறுதியோடு கூடி குலாவி குணமாக மகிழ்ந்து இருக்க வேண்டும் என்று பட்சி பறவைகளுக்கு அய்யா தர்மத்தை போதித்தார். அடுத்ததாக புல் பூண்டுகளுக்கு அய்யா பொறுமையை உரைத்தார். நீங்கள் பொறுமையாக வாழ்ந்து வாருங்கள் என்று பொறுமையை உரைத்தார். மேலும் கல்வாரி தனக்கும் கனத்த சேடன் தனக்கும் அவரவர்களுக்குரிய தர்மத்தை தாழ்மையுடன் போதித்தார். இவ்வாறு எல்லா ஜீவராசிகளும் மங்களமாக மனம் மகிழ்ந்து வாழ வேண்டும் என்று எண்பத்து நான்கு லட்சம் பேதா பேத உயிரினங்களும் வைகுண்டர் தர்மத்தை போதித்தார்.

கலி என்னும் மாய இருளுக்குள் அகப்பட்டு ஈரேழு லோகங்களும் கலியில் மூழ்கி மக்கள் அங்கும் இங்கும் அலைந்து துன்பப்பட்டு கொண்டிருக்கிறார் கள். அவ்வாறு அலைந்து கொண்டு இருக்கும் சப்தமாதர்களின் வழியில் வந்த சான்றோர் மக்களை பாதுகாத்து அவர்களுக்கு தர்ம யுக வாழ்வு அருளுவதற்காக திருச்செந்தூர் திருப்பாற்கடலில் அவதரித்த வைகுண்டர் தெட்சணா பூமியில் மனுபோல் தோன்றி வளர்ந்து ஞான உபதேசத்தை எல்லோருக்கும் அருளினார்.

ஆயிரத்து எட்டாம் ஆண்டு மாசியில் திருச்செந்தூர் திருப்பாற்கடலில் அவதாரம் எடுத்து தெட்சணாபுரி குருநாட்டில் பதிதாமரையூரில் வந்திருந்து தவம் நிறைவேற்றி மக்களுக்கு நல்லருள் உரைத்து கலியுகத்தில் வாழ்வதற்குரிய அறத்தைப் போதித்தார். கலி அழிக்க வந்த அய்யா வைகுண்டர் காட்டிய

வாழ்வியலாகிய முப்பத்து இரண்டு அறத்தைப் பின்பற்றி வாழுகின்ற மக்களுக்கு பொய்யில்லை பசாசு இல்லை பில்லியின் வினைகள் இல்லை அதாவது பில்லி சூனியத்தினால் வரக்கக்கூடிய வினைகள் வந்து அண்டாது.

மேலும் அதனால் வருகின்ற தேய்வு என்பது இல்லை. வாழ்க்கையில் எந்த விதமான தொய்வும் ஏற்படாது. பேய்பாசாசுகளுக்கு அவை கேட்கும் கொடைகளைக் கொடுத்து அதனால் வருகின்ற தீமைகள் என்பது கிடையாது. மேலும் மந்திர தந்திரத்தினால் வரும் எந்த விதமான துன்பங்களும் இல்லை. ஆகவே உலக மக்களே நீங்கள் வைகுண்டரே தஞ்சம் என்று ஒரு நினைவோடு வாழ்ந்து வாருங்கள் என்று கூறினார்.

அய்யா வைகுண்டர் சான்றோர் மக்களிடம் அய்யா சொன்ன முறைப்படி வாழுகின்ற மக்களுக்கு மேற்கூறிய துன்பங்கள் எதுவும் இல்லை என்று சொல்லுகின்றார். இதை புத்தியில் அறிந்து கொண்டவர்கள் வைகுண்டர் நமக்கு முக்தி அடைவதற்குரிய வழியை காட்ட வந்திருக்கின்றார். ஆகவே நமக்கு அருளியுள்ள நேர்மையாக வாழ்வை வாழ வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு வாழ்பவர்கள் இறைவனை கண்டு கொள்வார்கள். ஆனால் இதை அறிந்து கொள்ளாதவர்களும் பக்தி இல்லாமல் இது ஏதோ மனிதன் உரைக்கும் மொழி என்று எண்ணுகின்றவர்கள் அழிந்து நரகத்தில் செல்வார்கள் என்பதை எடுத்து சொல்லுகின்றார்.

அய்யா வைகுண்டர் கூறிய தர்மத்தை ஏற்றுக்கொண்டு அவர் வழியில் வாழ வேண்டும் என்று நினைக்கின்ற மக்கள் எல்லோரும் அவரை சூழ்ந்து கொண்டு வைகுண்டரே தஞ்சம் என்று வாழ்ந்து வந்தார்கள். அப்படி வாழ்ந்து வருகின்ற அந்த மக்களின் சிறப்பை எடுத்துக் கூற முடியாத வண்ணம் மேன்மை பொருந்தி வாழ்ந்து வந்தனர். மேலும் மக்கள் எல்லோரும் அய்யாவின் சீர் பதம் சேருவதே தங்கள் வாழ்வின் நோக்கம் என்று உணர்ந்து மக்கள் எல்லோரும் அய்யாவை நாடி மகிழ்ந்த வண்ணம் வந்து கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு உலக மக்கள் எல்லோரும் அய்யாவின் பாதம் பணிந்து தெட்சணா பூமியில் வந்து அய்யாவை நாடி ஒரு தலத்தில் கூடி இருக்கும் போது குறோணியின் பிதிரில் வந்த நீசன் தனக்கு அழிவு

நெருங்கி வருவதை உணராமல் அய்யா வைகுண்டரை படையைத் திரட்டி கொண்டு பிடிக்க வந்தான். தெட்சணத்திலிருந்து வைகுண்டர் நாட்டு மக்களுக்கு நல்ல அருள் புரிந்து கொண்டிருக்கின்ற அந்த வேளையில் அய்யாவை நாடி மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த ஸ்வாதி மன்னனானவன் நாட்டின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக சுசீந்திரத்தில் வந்து அமர்ந்து இருந்தான். அப்போது மந்திரிமாரை அழைத்து இப்போது நம்முடைய நாட்டின் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை கேட்டான். மேலும் நமக்கு எதிரி யாராவது இருக்கிறார்களா என்று சொல்லுங்கள். அவ்வாறு எதிரிகள் யாராவது இருந்தால் அவர்களை இங்கே அழைத்து வாருங்கள் என்றுக் கட்டளை இட்டான்.

**வினாவிடை:**

1. ஐயா வைகுண்ட மன்று பதினாலறிய அதாவது ஈரேழு 14 லோகமும் அறியும்படியாக கூறிய தர்மம் எது ?
   இன்று முதல் எல்லோரும் இக பரா தஞ்சம் என்று ஒன்று போல் எல்லோரும் ஒரு புத்தியாயிருங்கோ என்று கூறினார். மேலும் காணிக்கை இடாதுங்கோ காவடி தூக்காதீங்கோ மாணிக்க வைகுண்டம் வல்லாத்தான் கண்டிருங்கோ
   வீணுக்கு தேடும் முதல் விருதாவில் போடாதுங்கோ வைகுண்டருகே பதறி
   வாழ்வதல்லாமல் பொய் கொண்ட மற்றோர்க்கு புத்தி அயர்ந்து அஞ்சாதுங்கோ
   அவன் அவன் தேடும் முதல் அவனவன் வைத்தாண்டிடுங்கோ எவனவனுக்கும் பதறி இனி அலைய வேண்டாமே என்று வைகுண்ட ராஜ்யத்தில் உள்ளவருக்கு வாய்த்த தர்மம் கூறினார்.

2. “ இன்று முதல் எல்லாரும் இகாபர தஞ்சம் என்று ஒன்று போல் எல்லோரும் ஒரு புத்தியாய் இருங்கோ” இதில் ஒரு புத்தியாய் இருங்கோ என்று கூறியது எதை உணர்த்துகிறது?
   ஒரு தெய்வ வழிப்பாட்டை உணர்த்துகிறது.

3. “வீணுக்கு தேடும் முதல் விருதாவில் போடாதீங்க” என்று வைகுண்டர் கூறி இருப்பதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்ன?
நாம் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கின்ற பணத்தை தேவையில்லாமல் முந்தைய வழிபாடாகிய பூஜை, புனஸ்காரம்,காணிக்க கைக்கூலி போன்ற வற்றிர்க்கும், மாய்கையால் சூழ்ந்துள்ள ஆரம்பர செலவுகளுக்கும் செலவிடக்கூடாது என்றுக் கூறியுள்ளார்.

4. இறைவனுக்கு நாம் செய்கின்ற பூஜையை கூடாது என்று தடுப்பதனுடைய நோக்கம் என்ன நாம் ஏன் பூஜை புனஸ்காரங்கள் வழிபாடுகள் செய்யக்கூடாது?
நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கலியுகம். இந்த கலியை அழிக்க வந்தவர் தான் அய்யா வைகுண்டர். ஒவ்வொரு யுகத்திலும் அசுரர்களை அழிப்பதற்காக அந்த அசுரர்கள் பெற்ற வரத்தின் படி இறைவனும் தன்னுடைய அவதாரத்தை உலகுக்கு வெளிப்படுத்தினார். அவ்வாறு வெளிப்படுத்திய முந்தைய அவதாரத்தை மக்கள் சிலையாக வடித்து வழிபாடாக பூஜை புனஸ்காரங்கள் செய்து வருகின்றார்கள். ஆனால் வைகுண்டர் அவதாரம் என்பது மக்களின் மனதில் இருக்கின்ற கலியாகிய மாய எண்ணங்களை அகற்றுவதற்காக எடுத்திருக்கின்ற அவதாரமாகும். இந்த கலியுகத்தில் முந்தைய அவதாரங்களில் நாம் செய்வதை போன்று பூஜை புனஸ்காரங்கள் செய்வதினாலோ ஆடம்பர திருவிழாக்கள் எடுப்பதினாலோ இந்த கலியை அழிக்க முடியாது. மக்களுடைய உள்ளத்தில் இருக்கின்ற கலி அழிக்கப்பட வேண்டும் என்றால் மக்கள் உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும். அதாவது கலி மாய எண்ணங்களை விட்டு விட வேண்டும். ஆகவே இதற்கு பூஜை , புனஸ்காரம் முறை கள் தேவை இல்லை .

5. வைகுண்டர் மனு அவதாரம் எடுத்து யாருடைய வம்சத்தில் வந்து அவதரித்தார்? பனி தவழும் பத்தினியாளான சப்த மாதர்களுடைய பாலகர்கள் ஆன சான்றோர் மக்களுடைய வம்சத்தில் வந்து அவதரித்தார்.

6. அய்யா சான்றோர் மக்களிடம் எவ்வெவ்வற்றை அழித்து நீங்கள் தர்மபுவி வாழ்க்கையை வாழுங்கோ என்றுக் கூறினார்?

குண்டணி, பேய், பொய், குளறி கரு வைத்தியமும் (மந்திர தந்திரங்களை பயன்படுத்தி மக்களுக்கு செய்யப்படும் தீமையை எல்லாம் அகற்றி) தர்மபுவி வாழ்க்கையை வாழுங்கோ என்றுக் கூறினார்.

7. காணிக்கை இடாதீங்கோ காவடி தூக்காதீங்கோ மாணிக்க வைகுண்டம் வல்லா தான் கண்டிடுங்கோ என்று அய்யா கூறியிருப்பதிலிருந்து வைகுண்டரை நாம் எப்படி கண்டு கொள்ள முடியும்?
   புறவழி பாட்டில் இருந்து விலகி அகத்துக்குள் உள்முகமாக நாம் இறைவனை தேடுகின்ற போது வைகுண்டரை கண்டு கொள்ள முடியும்.

8. அய்யா வைகுண்டர் யாருக்கு பதறி வாழ வேண்டும் என்று மக்களிடம் கூறினார்?. ஐயா வைகுண்டருக்கு

9. அய்யா யார் யாருக்கு பயப்படக் கூடாது அதாவது அஞ்ச கூடாது என்று கூறுகின்றார்?
   பொய் கொண்ட பொய்த்தனமாக வாழுகின்றவர்களுக்கு புத்தி அயர்ந்து கூட அஞ்ச கூடாது என்றுக் கூறுகின்றார்.

10. அவரவர் தேடுகின்ற முதல்களை அவரவர் வைத்து ஆண்டிடுங்கோ எவரவருக்கும் இனி பதறி அலைய வேண்டாம் என்று கூறியிருப்பதன் மூலம் அய்யா நமக்கு உணர்த்திய செய்தி யாது?
    ஒருவர் பிறருக்கு நன்மை செய்தால் நன்மை விளையும். தீமை செய்தால் தீமையாகவும் விளைகின்றது. எனவே நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும் என்பதையும், இந்த பிறவியில் ஒருவருக்கு நேர்மையான வழியில் எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அந்த சம்பாத்தியத்தை அவர்களே வைத்து ஆள வேண்டும். அதில் திருப்தி அடைய வேண்டும். பிறருடைய பொருளுக்கு ஆசைப்படக்கூடாது. பேராசை கூடாது சுயநலம் கூடாது நம்மிடம் இருப்பது போதும் என்ற தன்னிறைவை பெற வேண்டும் என்பதை இங்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்.

11. வைகுண்டர் மக்களுக்கு எடுத்துரைத்த புத்திமதிகள் ஆனது எதனோடு உவமையாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?

கன்றுக்கு மாதா இரங்கி கற்பித்ததை போல், அதாவது தாய் இரங்கி பிள்ளைக்கு கற்பித்தது போல் உவமையாக கூறப்படுகின்றது.

12. யார் யாருக்கு வைகுண்டர் உடைய வருகையிலே கர்மவினைகள் தீந்து தருமபுரி ராஜ்ஜியம் அருளப்படுவதாக முந்தைய காலத்தில் ஆகமத்தில் கூறப்பட்டிருந்தது?
நல்லோர்களுக்கு

13. வைகுண்டர் இந்த உலகில் அவதரிப்பார் அவர் அவதரித்த உடனே யாருக்கு நல்ல வாழ்வு தருவார் சாகாத கெதிகளும் தருவார் என்று ஆகமங்களில் கூறப்பட்டு இருக்கின்றது?
மனதூய்மையுடன் வாழுகின்ற நல்லவர்களுக்கு.

14. வைகுண்டர் வந்து சாகாத வாழ்வு தருவார் என்று கூறிய திருமொழியை கேட்டு கலி தீர்ந்தவர்கள் யார் யார்?
சாதி பதினெட்டை சார்ந்த மக்களும்.

15. அய்யா வைகுண்டர் மக்களுக்கு தர்மம் கூறிய பிற்பாடு யார் யாருக்கு தர்மங்களை கூறினார்.?
பட்சி பறவைகளுக்கும் பல ஜீவஜந்துகளுக்கும் அச்சு அரி முதற்கும் ஆன மிருகங்களுக்கும் ஊர்வலங்களும், உதித்த புற்பூண்டுகளுக்கும், கார்சேடனாறுகளுக்கும் , கரடுகல் ஆனதுக்கும் தர்மம் உரைத்தார்.

16. அய்யா மிருகங்களுக்கு கூறிய தர்மம் யாது?
நீங்கள் எல்லோரும் ஒன்று போல் மிருகத்தோடு மிருகம் மிக மகிழ்ந்து வாழ்ந்திருங்கள். அதை விட்டுவிட்டு யாருக்கும் அலைச்சல் செய்யாமலும் , மறுகலச்சலிட்டு மாளாமலும் வாழ்ந்து வாருங்கள். புல் பூண்டுகளை உண்டு அதை புசித்து சங்கையுடன் ஒரு தலத்திலே தண்ணீர் குடித்து வாழுங்கள் மேலும் எல்லோரும் ஒற்றுமையாக வைகுண்டர் உண்டெனவே வாழ வேண்டும் என்று கூறினார்.

17. பட்சி பறவைகளுக்கு அய்யா உரைத்த தர்மம் யாது?
பட்சி பறவைகள் எல்லோரும் நீங்கள் பண்பாய் ஒரு இனம் போல் கட்சி உடனே கழி கூர்ந்து வாழ்ந்திருங்கோ என்றும், சிறிது பெரிது

என்று மிகச் சேராமல் உறுதி பெரிது உடையவனே தஞ்சம் என்று கூடி குலாவில் குணமாய் மகிழ்ந்திருங்கோ என்று படிச்சி பறவைகளுக்கு அய்யா தர்மம் உரைத்தார்.

18. கல்வாரிக்கும் கனத்த சேடனுக்கும் அய்யா உரைத்த தர்மம் யாது? தங்கள் தங்களுக்குள் தாழ்மை மிக உரைத்து மங்களமாக மகிழ்ந்து இருங்கோ என்று வைகுண்டர் தர்மமுரைத்தார்.

19. வைகுண்டர் இந்த உலகம் எல்லாம் அறியும் படியாக உரைத்த தர்மம் யாது? பொய்யில்லை பிசாசு இல்லை பில்லியின் வினைகள் இல்லை நெய்யில்லை நோவுமில்லை நொம்பல துன்பமில்லை தொய் இல்லை இறைகள் இல்லை சுருட்டுமா ஞாலம் இல்லை மை இல்லை உலகத்தோரே வாழுங்கோ ஒரே நினைவாய் என்றார்.

20. அய்யா உரைத்த தர்மத்தை ஏற்று பேறு பெற்றவர்கள் யார்? புத்தியில் அறிந்து தங்களுடைய வாழ்க்கையில் மெய்ப்பித்து வாழ்ந்து காட்டியவர்கள் பேறு பெற்றார்கள்.

21. கலியுகத்தில் பக்தி இல்லாமல் வாழ்கின்ற பேர்களுடைய நிலை என்ன? அவர்களுடைய வாழ்வில் எந்த நலமும் பெற முடியாமல் அழிந்து போவார்கள். நரகத்தை அடைவார்கள். அவர்களின் வாழ்வே வீண்தான் என்றுக் கூறினார்.

22. வைகுண்டர் உலக மக்களை அழைத்து மக்களிடம் எவை எவை இல்லை நீங்கள் ஒரே நினைவோடு அய்யா வைகுண்டம் உண்டு என்று வாழுங்கள் என்று கூறினார்?
பொய்யில்லை பிசாசு இல்லை பில்லியன் வினைகள் இல்லை நெய் இல்லை நோவும் இல்லை நொம் பல துன்பமில்லை தொய்யி ல்லை இறைகள் இல்லை சுருட்டுமா ஞானமில்லை மை இல்லை என்றுக் கூறினார்.

23. தர்ம யுக வாழ்விற்கு யார் யார் பேறு பெற்றவர்கள் என்று அய்யா கூறுகின்றார்?
முக்தி நிலையை அடைய வேண்டும் என்று முயன்றவர்கள் பேறு பெற்றவர்கள் .

நடை

நாடுங் குறோணி நாதவழி யாய்பிறந்து
மூட மடைந்த முழுநீச மாபாவி
இருந்த நகர்விட்டு எழுந்திருந்து தானேகி
வருந்தப் படையோடு வந்தான் சுசீந்திரத்தில்
ஆனைத் திரள்கோடி அதிகப் பரிகோடி
சேனைத்திரள் கோடி சென்றார் சுசீந்திரத்தில்
சேவுகக் காரர் திலுக்கர் துலுக்கருடன்
ராவுத்தர் கோடி ராட்சதர்கள் முக்கோடி
சரடன் கரடன் சவுனி கெவுனியுடன்
முரட னுடனே மூர்க்கர் முழுமூடர்
படைக ளலங்கரித்துப் பார வெடிதீர்த்துக்
குடைக ளலங்கரித்துக் கொடிகள் மிகப்பிடித்து
வாள்கா ரர்கோடி வல்லயக்கா ரர்கோடி
தோள்கா ரர்கோடி சுரண்டிக்கா ரர்கோடி
அம்புக்கா ரர்கோடி ஆயுதக்கா ரர்கோடி
வம்புக்கா ரர்கோடி வந்தா ரவன்கூட
வெடிக்கா ரர்கோடி வேல்கா ரர்கோடி
அடிக்கா ரர்கோடி வந்தா ரவன்கோடி
இத்தனை யார பாரத் துடன்நீசன்
தத்தியுடன் நடந்து தமுக்கு மிகஅடித்து
வந்து கூடாரம் இட்டான் சுசீந்திரத்தில்
தந்துதந் தாகத் தங்கள் மிகக்கூடி
கொந்துகொந் தாகக் கொடும்படைகள் கூடிவர
மந்திரி மாரோடு வந்திருந் தேதுசொல்வான்
கேளாய்நீ மந்திரியே கிருபையுட னோர்வசனம்
வாளாற் பெரிய மன்னர்களந் நாள்முதலாய்
நமக்கா யிருந்ததுகாண் நம்முடைய நாளையிலே
துடுக்கான வெள்ளை நசுறாணி யவன்தனக்காய்
ஆச்சுதே நாடு அவனுக்கே யாகிடினும்
பேச்சுநா மல்லால் பின்னொருவர் காணாதே
ஆனதாற் பூமியிலே ஆரொருவ ரானாலும்
மானமற வேநமக்கு மாற்றானாய்க் கண்டதுண்டால்
ஆய்ந்து விசாரித்து அறிவித்துச் சொல்லுமென்றான்
தேர்ந்துநின்று மந்திரியும் தீநீசக் குலமதினால்
பொல்லாத சூத்திரப் பிசாசுக் குலமதினால்
கல்லாதான் கூடிக் கண்டுதேர்ந் தேதுரைப்பான்

வேறொரு வரையும் மேதினியில் நாம்காணோம்
வாறோர் ஞாயமாற்றம் வையகத்தில் காணுதிப்போ
நமக்கு இறையிறுத்து நாடூழியங் கள்செய்யும்
குமுக்கா யினம்பெருத்த கூண்டசா ணாரினத்தில்
வைகுண்ட மாக வந்து பிறந்தோமென்று
மெய்கொண்ட பூமியெல்லாம் வேறொருவ ராளாமல்
நான்தான் முடிசூடி நாடுகெட்டி ஆள்வேனெனத்
தான்தா னுரைபகர்ந்து சாதிபல தும்வருத்தி
ஒருதலத்தி லூட்டுவித்தான் உற்றநீ ரானதையும்
அருகிருக்குஞ் சாணார்க்கு அதிகவிதி தோணுதுகாண்
ஆகாத்தப் பொல்லாரை அழித்துப்போடு வேனென்றும்
சாகா வரங்கள் சாணாருக் கீவேனென்றும்
சொல்லி யிருக்கிறான் சுவாமிவை குண்டமென்று
தொல்லுலகி லிந்தச் சொற்கேட்டு ராசாவே
என்றவன் மந்திரிகள் இத்தனையுஞ் சொன்னவுடன்
ஒன்றுமுரை யாடாது உட்கார்ந் தயர்ந்துரைப்பான்
ஏதுகாண் மாயம் இதுஞாயம் வந்ததென்ன
வாதுக் கொருவர் வருவாரைக் காணோமென்று
நினைத்ததற்கோ இந்த நேருசொல் வந்ததுகாண்
மனதயர்ந்து பார்த்து மந்திரியைத் தானோக்கி
ஏதுகாண் மந்திரியே எல்லாரிலு மெளியச்
சாதியிலே வுள்ளவன்தான் சாற்றுவனோ இந்தமொழி
ஏதோவொரு சூட்சம் இருக்குதுகா ணிம்மொழியில்
வாதொன்றறியும் வம்பொன்று தான்பேசும்
ஆராய்ந்து பார்ப்போம் எல்லோருங் கூடிருந்து
பாராய்நீ மந்திரியே பாரிலொரு சாஸ்திரியை
என்றந்தப் பேர்கள் எல்லோரும் சம்மதித்து
அன்றந்த சாஸ்திரியை அவன்வருத்திக் கேட்கலுற்றான்
சாஸ்திரியே யிந்தத் தர்மராட்சி யந்தனிலே
வேற்றொருவ ரென்றனக்கு வீறிட்ட துண்டோகாண்
எதிரியுண்டோ பாரு என்னுடையச் சோதிரியே
கருதி மிகப்பார்த்து கடியச்சோ திரிபுகல்வான்
தர்ம முடிவேந்தே சாற்றக்கே ளுமரசே
கர்மக் கலிதோசம் கமண்டலங்க ளேழ்வரையும்
சுற்றிப் பரந்ததுகாண் தோசத்தால் பூமியெல்லாம்
கர்த்தனரி கிருஷ்ணர் கடியகோ பம்வெகுண்டு
பூமியிலே வந்து பிறந்திந்தத் தோசமதை

சாமிதர்மத் தாலே தோச மதையழித்து
நற்பூ மியாக்கி நாடெங்கு மோர்குடைக்குள்
சொல்லொன்றுக் குள்ளான சுவாமிமகா விட்டிணுவும்
மனுவாய்ப் பிறந்து வைகுண்ட மென்றுசொல்லித்
தனுவை யடக்கித் தவசு மிகஇருந்து
நல்லோரை யெல்லாம் நாடி மிகஎடுத்து
வல்லோராய்ச் சாகாமல் வரங்கள் மிகக்கொடுத்து
மாளாவரங்கள் மக்களுக்கே தான்கொடுத்து
ஆள வருவார் அவர்வருகும் நாளிதுதான்
என்றுமிகச் சோதிரியும் இந்தக் குறியுரைக்க
நன்று நன்றென்று இராசன் மிகமகிழ்ந்து
சொல்லக்கேள் சோதிரியே சொன்னதெல் லாஞ்சரிதான்
எல்லையுண்டோ அவர் வந்திருக்கு மினங்களென்ன
சொல்லி விரிநீ சுத்தமுள்ளச் சோதிரியே
நல்லியல்பு பெற்ற நற்குறியோ னுரைப்பான்
இன்னவகைச் சாதியிலே இவர்வரு வாரெனவே
சொன்னக் குறியே சூதாய்த் தியங்குதுகாண்
தருமங்கொண்டு சுவாமி தரணியில் வந்ததினால்
பொறுமைக்குல மாயிருக்கும் பெரியவழி யாயிருக்கும்
நம்மாலே சொல்லி நவிலக்கூ டாதிதுவே
சும்மாஎனை நீங்கள் சோலிபண்ண வேண்டாமே
என்றந்தச் சோதிரியும் இணங்கி வணங்கிநின்றான்
மன்று தனையாளும் மன்னன்மறுத் தேபுகல்வான்
அப்படித்தா னானால் ஆதிமகா விட்டிணுவும்
இப்படியே வந்து இவர்பிறக்க வேணுமென்றால்
போற்றி நம்பூரி பிராமணசூத் திரக்குலத்தில்
ஏற்றிப் பிறக்க இயல்வில்லா மலிந்தப்
பிறர்தீண்டாச் சாணார் குலத்தி லவதரித்துப்
பிறக்க வருவாரோ பெரியநா ராயணரும்
சும்மாயிருந் தச்சாணான் சுவாமி சமைந்ததெல்லாம்
பம்மாத்தாய்க் காணுதுகாண் பிராக்கிரம மந்திரியே
இப்போ தொருநொடியில் இந்தச்சா ணான்தனையும்
மெய்ப்பாகக் கொண்டு விடவேணு மென்றன்முன்னே
என்றுமந் திரிமாரை ஏவுந் தறுவாயில்
அன்று அருகிருந்த ஆவிடையர் தம்வழியில்
ஒருவ னெழுந்து உற்றரசனை நோக்கிக்

கருதனம்போல் புத்தி கற்பித்தா னம்மானை

**விளக்கம்**:

நாடும் குறோணி நாத வழியாய் பிறந்த கலிநீச எண்ணம் கொண்டு மன இருள் கொண்ட முழு நீச பாவியானவன் அனந்தபுரத்தை விட்டு எழுந்தருளி படைகளைக் கூட்டி வந்து சுசீந்திரத்தில் வந்தமர்ந்தான். அவன் கூட்டி வந்த படைகள் எவை எவை என்றால் ஆனைத் திரள் கோடி, அதிக பரிகோடி, சேனை திரள்கோடி, சேவுக காரர் கோடி, திலுக்கர் துலுக்கருடன் சாவுத்தர் கோடி, ராட்சதர்கள் முக்கோடி, சரடன், கரடன், சவுனி, கெவுளியுடன், முரடனுடனே, மூர்க்கர், முழு மூடர் படைகள் அலங்கரித்து பாரவெடி தீர்த்து, கொடைகள் அலங்கரித்து குடைகள் மிகப் பிடித்து, வாள்காரர்கோடி,வல்லயக்கார் கோடி, தோள் காரர்கோடி, சுரண்டி காரர் கோடி, ஆயுதக்காரர் கோடி, வம்புக்காரர் கோடி, வெடிக்காரர் கோடி, வேல்காரர் கோடி, அடிக்காரர் கோடி இத்தனை ஆர பாரத்துடனே நீசன் தத்தியுடன் நடந்து மக்கள் அறியும் படியாக பறையடித்துக் கொண்டு வந்து படைகளை திரட்டிக்கொண்டு கூடாரம் அமைத்து சுசீந்திரத்தில் வந்து அமர்ந்தான்.

இவ்வாறு படைகளை எல்லாம் கூட்டி வந்து மந்திரிமாரை அழைத்து சொல்லுகின்றான் இப்போது நாட்டின் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை எனக்கு எடுத்து சொல்லுங்கள். காரணம் காலமாக காலமாக பரம்பரை பரம்பரையாக நம்முடைய மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் இது நமக்கு உரிய பகுதியாக இருக்கிறது. இவ்வாறு நம்முடைய ஆட்சி நடந்து கொண்டிருக்க, இப்போது வெள்ளைய நசுராணியான வெள்ளையர்கள் நாட்டை பிடித்துக் கொண்டாலும் ஆட்சிக்கு பொறுப்பானது நம்மிடம் தான் இருக்கிறது. ஆகையால் நம்முடைய பேச்சுக்கு மறு பேச்சி இங்கு இல்லை.

யார் ஒருவர் இருந்தாலும் நம்முடைய பேச்சுக்கு கட்டுப்பட்டு தான் இருக்க வேண்டும். ஆகவே வேறு ஏதாவது மாற்றமாக தெரிகிறதா? இங்கு யாராவது நமக்கு எதிரிகளாக இருக்கின்றார்களா? அப்படி யாராவது இருந்தால் அதை விசாரித்து அறிவித்து எனக்கு சொல்லுங்கள் என்று மந்திரிக்கு கட்டளை இட்டான். அப்போது ஒரு

பொல்லாத சூத்திர பிசாசு குலத்தில் வந்த அந்த மந்திரியானவன் மன்னனோடு கூறுகின்றான், மன்னா! நமக்கு இங்கு யாரும் எதிரியாக இருப்பது போல் தெரியவில்லை. ஆனால் ஒரு நியாயமாற்றம் வையகத்தில் காணுகிறது.

நமக்கு இறை இறுத்து நாள் தோறும் ஊழியங்கள் செய்து கொண்டிருக்கின்ற சாணார் இனத்தில் வைகுண்டமாக வந்து பிறந்தோம் என்று இந்த உலகை எல்லாம் ஒரு குடைக்குள் ஆள்வேன் என்றும் வையம் சூழ்ந்த பூமி எல்லாம் வேறு யாராலும் ஆழ முடியாது நான்தான் பட்டம் சூட்டி ஆளுவேன் என்று தானுரைத்து மக்களை அவன் பக்கம் இழுத்துக் கொண்டே இருக்கிறான். பதினெட்டு சாதி மக்களையு ஒரு தலத்திலே வருவித்து தண்ணீர் மண்ணால் அவர்களுக்கு நோய் பிணி நொம்பல்களை எல்லாம் தீர்த்து பொல்லாதவர்களை எல்லாம் அழித்து நரகில் தள்ளு வதற்காக வேண்டி சாகா வரங்கள் பெற்று வந்திருக்கின்றேன்.

சான்றோர் மக்களுக்கு நல்ல வரங்கள் அருளி என்றும் சாகாமல் இருப்பதற்கான மெய்யறிவைப் போதித்து நல் வரங்களை அருளுவதற்காக வந்திருக்கின்றேன் என்று சொல்லி இருக்கின்றார். அது மட்டும் அல்ல சாணார்களுக்கு அதிக விதி தோன்றுகிறது போல் இருக்கிறது. இப்போது அவர்கள் எல்லோரும் அவரை சூழ்ந்து கொண்டு அவர் கூறுகின்ற அறிவுரைகளைக் கேட்டு , இப்போது வாழ்க்கையில் மேன்மை அடைந்து கொண்டிருப்பதாக தோன்றுகின்றது. அது மட்டுமல்ல அவர்கள் நமக்கு அடிமையாக நம் சொல்லுக்கு கட்டுப்பட்டு இருந்தவர்கள் இப்பொழுது எதிர் கருத்து கூறுகின்ற அளவுக்கு தைரியம் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்.

ஆகையால் அவர் சொல்வது உண்மையானால் உங்களுடைய ஆட்சிக்கு கேடு வருவதற்கு காலம் நெருங்குகிறது என்பது தெரிகின்றது. ஏனென்றால் மக்கள் எல்லோரும் அவர்களுடைய பக்கம் சாய்ந்து அவரை நாடி சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் இப்பொழுது அவருடைய பேச்சுக்குத்தான் இங்கே வல்லமை இருப்பதாக தோன்றுகின்றது என்றுக் கூறினான். அவரை எல்லோரும் வைகுண்டர் என்று கூறுகின்றார்கள் எல்லா இடங்களிலும் அவருடைய பெயரானது பரவிக்கொண்டிருக்கிறது என்று மந்திரியிடம் மந்திரி மன்னனிடம் கூறினார். இதை கேட்ட

மன்னன் மனதையர்ந்து வாதுக்கு ஒருவர் வருவாரைக் காணோம் என்று நினைத்ததற்கோ இந்த நேர்ச்சொல் வந்தது. இதில் ஏதோ ஒரு சூட்சமம் இருக்கின்றது.

இங்கு எதிரியா யாராவது இருக்கின்றார்கள் என்று நினைத்ததற்காக இப்படி வந்துவிட்டதோ? நன்றாக சிந்தித்து தெளிய வேண்டும். ஏனெனில் எல்லாரிலும் எளிய சாதியில் உள்ள ஒருவன் இப்படி பேசுவானா? ஆராய்ந்து நாம் பார்க்க வேண்டும். எனவே சாஸ்திரங்கள் கற்ற பழந் நூல் முறைகளை அறிந்து உணர்ந்த ஒருவரை அழைக்க வேண்டும் என்று நம்முடைய சாஸ்திரியை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான். அப்போது சாஸ்பத்திரி மன்னன் முன்பில் அழைத்து வரப்பட்டான்.

சாஸ்திரியே! இந்த தர்ம ராஜ்யத்தில் நமக்கு எதிரிகள் உண்டானால் சாஸ்திரம் பார்த்து சொல்லுங்கள் என்றான் மன்னன். சாஸ்திரி மன்னனிடம் தர்ம முடி வேந்தே கர்மக்கலித் தோஷம் ஏழு லோகங்களிலும் பரந்து விட்ட காரணத்தினால், கர்த்தர் ஹரி கிருஷ்ணர் கடும் கோபம் கொண்டு பூமியிலே வந்து பிறந்து இந்த தோஷத்தை எல்லாம் தர்மத்தால் ஈடழித்து இந்த பூமியை நல்ல பூமியாக்கி இந்த உலகை ஒரு குடைக்குள் சொல் ஒன்றுக்குள் ஆள வரும் நாள் அடுத்து விட்டது.

எனவே மகாவிஷ்ணு மனுபோல் தோன்றி தனுவை அடக்கி தவமிருந்து நல்லோரை தேர்ந்தெடுத்து சாகா வரம் அருளி வல்லோர்களாக்கி ஆளவரும் நாள் எது என்று சாஸ்திரம் சொல்லுகின்றது என்றான். மன்னன் அப்படியே அவர் வருவதானால் எந்த சாதியில் வருவார்? பார்த்து சொல்ல வேண்டும் என்று சாஸ்திரியிடம் கூறினார்.

அந்த சாஸ்திரியை நல்ல இயல்புடையவன். ஆகையால் என்ன வகை சாதியிலே அவர் வருவார் என்று என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. தர்மம் கொண்டு சுவாமி தாரணியில் வருவதினால் அவர் வரும் குலம் பொறுமையுடைய பெரிய குலமாய் இருக்கும். அது குறிப்பிட்டு சொல்லக்கூடாது. இதற்கு மேல் எனக்கு எதுவும் தெளியவில்லை. ஆகையினால் என்னை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று வணங்கி நின்றான்.

மன்னன் அதனை மறுத்து அப்படியே அவர் வந்து பிறப்பதாலும் போத்தி நம்பூதிரி பிராமண சூத்திர குலத்தில் பிறக்காமல் இந்த பிறர் தீண்ட சாணார் குலத்தில் வந்து பிறப்பாரோ ?பெரிய நாராயணரும். ஒருபோதும் அப்படி வரமாட்டார். சும்மா இந்த சாணான் தன்னை சுவாமி என்று சொல்லி வேஷம் போட்டுக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றான். பராக்கிரமமும் உள்ள என் மந்திரியை இப்போ ஒரு நொடியில் அவனை என் முன்னே கொண்டு வருவாயாக என்று ஆணை பிறப்பித்தான். உடனே அந்த சபையில் இருந்தவாறு அத்தனையும் கவனித்துக் கொண்டிருந்த இடையர் குலத்தில் தோன்றிய ஒருவன் எழுந்திருந்து சுவாமி அருளால் மன்னனுக்கு நல்ல உபதேசம் சொல்லலுற்றார்.

கலி நீச மன்னன் அய்யாவை பிடித்து வாருங்கள் என்று சொன்னவுடனே பூவண்டர் என்பவர் கலிநீச மன்னனுக்கு புத்தி சொல்லுகின்றார். எப்படி என்றால் இதற்கு முந்தைய யுகங்களில் இறைவனுடைய அவதாரத்தை சுட்டிக்காட்டி முன்னாள் விபரங்களை எல்லா அறிந்து கொள்ள வில்லையா? அதர்மம் தலை தூக்கும் போது அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக இறைவனுடைய அவதாரம் நிகழ்ந்த நிகழ்வுகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகின்றார்.

**வினாவிடை:**

1. தர்மயுகத்திற்கு செல்லும் தகுதியை இழந்தவர்களாக யார் அய்யா குறிப்பிடுகின்றார்?
   பக்தி இல்லாதவர்களை

2. யாருடைய கொடியால் வந்தவன் அய்யாவை பிடிப்பதற்காக சுவாமிதோப்பை நோக்கி வந்தான்?
   குரோணியினுடைய கொடியில் பிறந்தவன்.

3. சுசீந்திரத்தில் வந்து கூடாரமிட்டு அமர்ந்தவன் யார்?
   கலிநீச மன்னன்

4. சுசீந்திரத்தில் வந்து அமர்ந்து கொண்டு மந்திரிமாரை நோக்கி மன்னன் கூறியது யாது?

இந்த மாநிலத்தில் என்னோடு எதிரி யாராவது இருக்கிறார்களா என்று கேட்டான்.

5. கலிநீச மன்னன் திரட்டி வந்த படைகள் எவை எவை?
ஆணை திறல் கோடி அதிக பரி கோடி சேனைத்திரள் கோடி சேவுக காரர் கோடி திலுக்கர் துலுக்கருடன் ராவுத்தர் கோடி ராட்சதர்கள் முக்கோடி சரடன் கருடன் சவுனி கவுனியுடன் முரடன் உடனே மூர்க்கர் முழு மூடர் படைகள் அலங்கரித்து பாரவெடி தீர்த்து கொடிகள் அலங்கரித்து குடைகள் மிகப் பிடித்து வாள்காரர் கோடி வெள்ளையக்காரர் கோடி தோல் காரர் கோடி சுரண்டிக்கார கோடி அம்பு காரர் கோடி ஆயுதக்காரன் கோடி வம்புக்காரர் கோடி வெடிகாரர்கோடி வேல்க்காரர் கொடி அடிக்காரர் கோடி இத்தனை விதமான படைகளை திரட்டி கொண்டு வந்தான்.

6. கலிநீச மன்னன் மந்திரிமார்களை அழைத்து இப்போது நாடு யாருடைய கீழ் இருக்கிறது என்று கூறினான்?
வெள்ளை நசராணியின் கீழ் இருப்பதாக கூறினார்.

7. வெள்ளை நசுராணியின் கீழ் நாடு இருந்தாலும் யாருடைய சொல்லுக்கு கட்டுப்பட்டு நாட்டை ஆட்சி செய்வதாக கூறினார்.?
கலிநீசன் தன்னுடைய சொல்லுக்குள் கட்டுப்பட்டு வெண்ணீசன் நாட்டை ஆட்சி செய்வதாக கூறினார்.

8. தமக்கு எதிரி யாராவது உண்டா என்று கேட்ட கலிநீசனிடம் மந்திரிக்கூறிய பதில் யாது?
மன்னா நாட்டில் யாரும் மாற்றானாக நமக்கு இல்லை. ஆனால் நமக்கு ஊழியங்கள் செய்து வருகின்ற சாணாரினத்தில் வைகுண்டமாக வந்து பிறந்தோம் என்று இந்த உலகை ஒரு குடைக்குள் நான்தான் முடிசூட்டி ஆளுவேன் என்று ஒருவர் வந்திருக்கின்றார் மக்கள் எல்லோரும் அவரை நாடி செல்லுகின்றார்கள். ஆகவே அவருக்கு அதிக விதி தோன்றுவதுதாக கூறினான்.

9. கலிலநீச மன்னனிடம் மந்திரியானவன் அய்யா வைகுண்டரை பற்றி கூறிய செய்தி யாது?
மன்னா வைகுண்டம் என்று ஒருவர் சாணரினத்தில் தோன்றியிருகின்றார். அவர் ஒரு தலத்தில் எல்லா மக்களையும்

அழைத்து வைத்து அவர்களுக்கு தண்ணீர் மண்ணால் நோய்பிணிகளை தீர்க்கின்றார்.ஆகாத பொல்லாததை அழித்து போடுவேன் என்றும் கூறுகிறார். சாணார்களுக்கு அதிக விதி தோணுது மன்னா அவர்களுக்கு சாகா வரங்கள் சாணாருக்கு ஈவேன் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் மக்கள் எல்லோரும் அவரை நாடி செல்லுகின்றார்கள் என்றுக் கூறினான்.

10. மந்திரி கலிநீச மன்னன் கூறிய பதிலைக் கேட்டவுடன் மன்னன் யாரை அழைத்து தனக்கு எதிராக யாராவது இருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்க்க எண்ணினான்?
    சாஸ்திரியை அழைத்துக் கேட்டான்.

11. கலிநீச மன்னனுக்கு சோதிடர் கூறிய செய்தி யாது?
    எதிரி உண்டா என்று கேட்ட கலிநீச மன்னனிடம் மன்னா கர்ம கலி தோஷம் கமண்டலம் எழுவரையும் சுற்றி பரந்து விட்ட காரணத்தினால் பூமி எல்லாம் அநியாயம் அதிகரித்துவிட்டது. ஆகவே கர்த்தர் ஹரி கிருஷ்ணர் கடிய கோபம் கொண்டு பூமியிலே பிறந்து இந்த தோஷத்தை எல்லாம் அழித்து நற்பூமி ஆக்கி நாடெங்கும் ஒரு குடைக்குள் ஒரு சொல்லுக்குள் ஆள்வதற்காக வைகுண்டமாக பிறந்து தனுவை அடக்கி தவமிருந்து நல்லோரை நாடி எடுத்து என்றும் சாகா வரங்கள் அருளுவதற்காக இங்கே வந்திருக்கின்றார் என்று சோதிடர் எடுத்துக் கூறினார்.

12. சோதிடர் கலிநீசமன்னனிடம் கூறிய செய்தியை கேட்டு கலிநீசன் சோதிடரிடம் உரைத்த மறுமொழி யாது?
    சோதிரிசியே சுவாமி பிறக்க வேண்டும் என்றால் பொறுமை குலமாகிய பெரிய வழிகளில் அல்லவா பிறப்பார் இவ்வாறு எளிய சாணாகுலத்தில் பிறப்பாரா என்று கேட்டான்.

13. மன்னன் சோதிடரிடம் எந்த குலத்தில் மட்டும் சுவாமி பிறப்பதாக கூறினார்?
    போற்றி நம்பூதிரி பிராமண குலத்தில் மட்டும் சுவாமி பிறப்பதாகக் கூறினார்.

14. சான்றோர் குல மக்களை கலிநீசன் எவ்வாறு இழிவாக பேசினான்?

பிறர் தீண்டா சாண் (சாணார்) குலத்தவர்கள் என்று இழிவாக பேசினான்.

கலியரசனுக்குப் பூவண்டர் உபதேசம்

விருத்தம்

கேட்டீரோ முன்னா ளுள்ளக் கெறுவித வளங்க ளெல்லாம்
தாட்டிமை யாகச் சொல்வேன் தமியனும் வணங்கி நின்று
பூட்டியே மனதில் வைத்துப் புத்தியென் றெண்ணி நீரும்
நாட்டினில் நன்மை செய்து நலமுட னரசு செய்யும்

விருத்தம்

மாயனோ உபாயத் தாலே மனுவது போலே யாகி
ஆயனக் குலமுந் தோன்றி அவனியி லிருப்பன் கண்டீர்
மாயத்தை யறியா நீரும் மாளவே போக வேண்டாம்
ஞாயமா யுரைத்தே னையா நம்முட அரசுக் கேகும்

விருத்தம்

எளிமையாங் குலங்க ளென்று எண்ணுற மனுவே யல்ல
பழியென ஆதி நாதன் பார்க்கவே மாட்டா ரையா
அழிவது யுகத்துக் காச்சு ஆனதால் வருவார் திட்டம்
வழியிது இல்லை யையா மாறியே போவோம் வாரும்

விருத்தம்

தசரதன் மகவாய் மாயோன் சீமையில் வந்து தோன்றி
புசமுடப் பிறப்போர் கூடப் பிறந்ததுங் கேட்டி லீரோ
வசையுடன் மனுத்தா னென்று வாதிட்ட அரக்கன் தன்னை
விசையுட னறுத்த செய்தி விளம்பியுங் கேட்டி லீரோ

விருத்தம்

தெய்வகி வயிற்றி லுற்று ஸ்ரீகிருஷ்ணன் எனவே தோன்றி
வைவசு தேவன் பெற்ற மனுவென வளங்கள் நாட்டி

நெய்யிடை வழியிற் சேர்ந்து நெருட்டிமா ஞாலஞ் செய்து
செய்வதுங் கஞ்சன் தன்னைச் செயித்ததுங் கேட்டி லீரோ

விருத்தம்

ஐவர்க்குத் தூத னாகி அங்குமிங் கோடிச் சென்று
மைக்குழல் சிலர்கள் தம்மை மணங்களு மிகவே செய்து
மெய்ப்புடன் கிளைக ளோடு மேவியே குழாங்கள் செய்து
செய்துரி யோதனனைக் கொன்றச் செய்தியுங் கேட்டி லீரோ

விருத்தம்

இப்படி மாயன் தானும் இருமூன்று யுகங்கள் தன்னில்
ஒப்புடன் மனுப்போல் தோன்றி உவமைகள் பலதுஞ் செய்து
அப்படி யுகங்கள் தன்னால் அழிந்திடா வரங்கள் பெற்ற
செப்பிடக் கூடா மாயன் செய்தியுங் கேட்டி லீரோ

விருத்தம்

சாணெனக் குலத்தில் மாயன் சார்வரோஎன் றெண்ண
வேண்டாம்
பாணனாய்த் தோன்றி நிற்பார் பறையனாய்த் தோன்றி நிற்பார்
தூணெனத் தோன்றி நிற்பார் தோலனாய்த் தோன்றி நிற்பார்
ஆணெனத் தோன்றி நிற்பார் அவருரு கேட்டி லீரோ

விருத்தம்

குசவனின் குலத்தில் வந்தார் குறவனின் குலத்தில் வந்தார்
மசவெனக் குலத்தில் வந்தார் மாடெனக் குலத்தில் வந்தார்
விசுவெனக் குலத்தில் வந்தார் வேடனின் குலத்தில் வந்தார்
அசுவெனக் குலத்தில் வந்தார் அவருரு கேட்டி லீரோ

விருத்தம்

எவ்விடந் தானாய் மேவி இருப்பவர்க் கெந்தச் சாதி
அவ்விட மாகா தென்று அவர்தள்ள மாட்டா ரையா
செவ்விட மாபோன் சூட்சம் செப்பிடத் தொலையா தையா

இவ்விடம் விட்டு நாமள் ஏகுவோம் நம்மூ ரென்றான்

விருத்தம்

என்றவன் சொன்ன போ இராசனு மிகவே கேட்டுப்
பொன்றுற விதங்கள் சற்றும் புத்தியி லறியா வண்ணம்
மன்றலத் தோர்க்கு மேற்கா வார்த்தையை யுரைத்தா யென்று
கொன்றவன் தன்னைப் போடும் கோபமா யுரைத்தா னீசன்

விருத்தம்

வேதமாங் கலைகள் தேர்ந்த மேற்குல மதிலே மாயன்
சீதமாய்ப் பிறவா வண்ணம் சிறுகுலம் புக்கு வானோ
ஆதர வில்லா வார்த்தை ஆர்க்குமே யேற்கா போடா
பாதகா எனக்குப் புத்திப் பகரவே வந்தாய் மோடா

விருத்தம்

நித்தமும் முன்னால் லட்சம் நேடிய பொன்க ளிட்டுச்
சத்திரச் சாலை தோறும் தர்மமு மளித்து நாமள்
சித்திரத் திருநாள் நித்தம் செய்கிற குலத்தைத் தள்ளி
நித்தியம் வேலை செய்யும் இழிகுலம் புக்கு வானோ

விருத்தம்

பிரமனை யொப்பாஞ் சாதிப் பிராமணக் குலத்தைத் தள்ளிச்
சிராமனு மற்றோர் தன்னில் சேர்வது திடனோ இல்லை
வராகமா யுதித்த மாயன் மனுவெனப் பிறக்க மாட்டான்
இதாரடா இந்த வார்த்தை என்முன்னே சொல்லி நின்றாய்

விருத்தம்

காரண மான மாயன் கலியுகம் வருகென் றெண்ணி
நாரணன் பயந்து வோடி நல்மலை யேறி மானாய்
வாரண நாத னம்பால் வல்வேட னெய்து செத்தான்
தாரணி வாறே னென்று தவலோகஞ் சேர்ந்தான் மாயன்

விருத்தம்

அப்படிக் கொத்த மாயன் அவனியில் மனுப்போல் வாரான்
இப்படி யிவன்தான் சொன்ன இகழ்ச்சியை எங்கே கண்டோம்
கப்பிடிச் சாணான் கையில் கைக்கூலி வேண்டிக் கொண்டு
இப்படி மழுப்ப வந்தாய் ஏதடா செய்தி யென்றான்

விருத்தம்

மழுப்பில்லைக் கேளுங் கேளும் மாண்டுநான் போனா லென்ன
வழுப்பில்லை யுனக்குத் தூண்டல் வளருதே யவரி டத்தில்
கழுத்திலே யுனது கையால் கத்தியை வாங்கி வைப்பாய்
முழுத்தில்லை யானா லென்சொல் மேல்வீசை யரிந்து தாறேன்

விருத்தம்

ஆனையும் படையு முன்றன் அரண்மனைக் கோவில் காலும்
சேனையுங் குடையும் வியாழச் செல்வமுஞ் சிறப்போ
டெல்லாம்
ஏனமு மிகவே தோற்று எரிந்துநீ கரிந்து சாவாய்
நானிதைச் சொல்ல வில்லை நாரண ருரைத்தா ரென்றான்

விருத்தம்

என்றிவன் சொன்ன போது ஏங்கியே வுளறிப் பின்னும்
பொன்னுற வகையி னாலே புத்தியி லறியா வண்ணம்
கொண்டிவன் தன்னைப் போடுங் கொடுவிலங் கதிலே சிங்கத்
தண்டிகை யெடுத்து வாரும் சாணெனச் சாமி பார்க்க

விருத்தம்

பார்க்கவே போவோ மென்று பார்முடி வேந்தன் சொல்லத்
தார்க்கெனப் பாவி நீசச் சறடனு மேதோ சொல்வான்
ஆர்க்கிது ஏற்குஞ் சாணான் அவனிடம் போவ தென்ன
கார்க்கதி கௌட சாஸ்திரி கடியனை யனுப்பு மென்றான்

விருத்தம்

அனுப்புமென் றுரைத்த போது அரசனு மேதோ சொல்வான்
துனுப்புடன் சாணான் தன்னைச் சூழ்ந்துநூற் கயிற்றாற் கட்டிக்
கனிப்புட னமது முன்னே கட்டுடன் கொண்டு வாரும்
வனிப்புடன் போவா யென்று வரிசையுங் கொடுத்தா னீசன்

விருத்தம்

கொடுத்திடும் வரிசை தன்னைக் குவித்தவன் வேண்டிக்
கொண்டு
கடுத்தமாய்க் கௌவுட சாஸ்திரி கடும்படைக் கோல மிட்டுத்
தடுத்திடும் வீரர் தம்மைத் தானிங்கே வாரு மென்று
நடுத்தர மதிலே நின்று நல்லணி வகுக்க லுற்றான்

விருத்தம்

பரிநடைக் காரர் தம்மைப் பக்கமு முன்னே விட்டான்
கரிநடைக் காரர் தம்மைக் காவலாய் முன்னே விட்டான்
சரிபரி யேறிக் கௌவுட சாஸ்திரி முன்னே நின்று
வரிபடைக் கவசம் போர்த்து வந்தனன் படைக்கு முன்னே

விருத்தம்

அம்பெடுத் தெய்வே னென்று அவனொரு அணிகள் சாட
கம்பெடுத் தடிப்பே னென்று காலசன் மிகவே சாட
கொம்பெடுத் துதைப்பே னென்று குஞ்சரத் தலைவ ரோட
பும்படக் கொல்வே னென்று போயினன் கௌவுடன் தானே

விளக்கம்:

நான் இப்போது சொல்லுகின்ற விஷயத்தை நீங்கள் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். அப்படி மனதில் நினைத்துக் கொண்டு இது ஒரு புத்திமதி என்று நீங்கள் எடுத்துக் கொண்டீர்களேயானால் உங்களுடைய ஆட்சிக்கு எந்தவித ஆபத்தும் இல்லை நீங்கள் நன்மையுடன் அரசு செய்ய இயலும் என்றுக் கூறினார். மாயனுடைய உபாயத்தை யாராலும் அறிய முடியாது. யுகா

யுகங்கள் தோறும் அவருடைய அவதாரம் நிகழ்ந்திருப்பதை நாம் அறிந்த செய்தியாகும்.

இப்போது அவர் மனிதர் போல் இங்கே வந்திருக்கின்றார் என்றால் அவருடைய சூட்சமத்தை நாம் யாராலும் அறிந்து கொள்ள முடியாது. அவர் எந்த குலம் என்று பார்த்து அவதாரம் எடுப்பது இல்லை. அவர் எங்கும் நிறைந்து ஏகமாயமாய் இருக்கின்றவர் அப்படி இருக்கின்றவர். மாயன் உடைய உபாயத்தை அறியாமல் நீர் அவரை ஏளனமாக நினைத்து மாள போக வேண்டாம். நான் இதை உங்களுக்கு நியாயமாக உரைக்கின்றேன். இதையே நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களேயானால் நம்முடைய அரசுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை என்று பூவண்டர் எடுத்துக் கூறினார்.

மேலும் எளிமையாம் குலங்கள் என்று ஆதிநாதன் பார்க்கவே மாட்டார். ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இறைவனுக்கு கிடையாது. அவர் சான்றோர் மக்களை காக்க வேண்டும் என்று எண்ணி தன்னுடைய அவதாரத்தை நிகழ்த்தி உள்ளார். கலியுகம் அழிகின்ற தருணம் நெருங்கி விட்டக் காரணத்தால் அவர் இங்கு வருவது திட்டம் ஆகும். சான்றோர் குல மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு துன்பப்படுத்தக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களை தற்காத்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக இங்கே அவர் வந்திருக்கின்றார். ஆகவே நாம் அவரை பிடித்து துன்ப்படுத்தி சோதிக்க வேண்டும் என்பது சரியான செயலாக இருக்காது. ஆகவே இதை விட்டுவிட்டு வேறு வழியே நாம் பார்ப்போம் என்று புத்திமதி உரைத்தார்.

மேலும் தசரதனுக்கு மகவாக தோன்றி இந்த நாட்டை ஆண்ட செய்தி உமக்கு தெரியாதா? மேலும் எளிய குலங்களான குகனோடு சேர்ந்து கொண்டு அவரையும் தன்னுடைய தம்பியாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்து செய்து உமக்கு தெரியாதா? சாதாரண மனிதனாக இருக்கும் இராமனால் என்னைக் கொல்ல முடியுமா என்று வாதிட்ட அந்த ராவணனை வதம் செய்து அவனுடைய பத்து தலையையும் அறுத்த செய்தி உங்களுக்கு தெரியும். ஒரு சாதாரண மனிதர் போல தானே இராம அவதாரம் நிகழ்ந்திருந்தது.

இதை நீங்கள் அறியவில்லையா அது மட்டுமா? தெய்வீக வயிற்றில் விட்டு ஸ்ரீ கிருஷ்ணர் எனவே தோன்றி அந்த கம்சனை வதம் செய்தது தெரியாதா? அங்கும் அவர் ஒரு சாதாரண மனிதனாங தானே வசுதேவருக்கு பிள்ளையாக பிறந்து ஆயர் குலத்தில் வளர்ந்து வந்த செய்தி தெரியாதா? மேலும் ஆயர் குலத்தில் உள்ள மக்களுடைய வீடுகளில் எல்லாம் சென்று வெண்ணை திருடி தின்று ஒரு சாதாரண மனிதனைப் போல பல மாயஜாரங்களை எல்லாம் செய்து அவரை அழிக்க வேண்டும் என்று ஏவிய அசுரர்களை எல்லாம் அழித்து அந்த கமிஷனைக் கொன்ற செய்தி உங்களுக்கு தெரியாதா? இவையெல்லாம் இதற்கு முன்பு இறைவன் நிகழ்த்தியது தானே!.

மேலும் பஞ்ச பாண்டவர்களுக்கு தூதராக இருந்து ஒரு சாதாரண மனிதனைப் போல அங்கும் இங்கும் அலைந்து ஓடி மைகுழல் சிலரை சாதாரண ஒரு மனிதனைப் போன்று சில பெண்களை மாலையிட்டு மக்கள் கிளையோடு வாழ்க்கை வாழ்ந்து உறவு முறைகளாக இருந்து பஞ்சபாண்டவர்களுக்கு தூது சென்று அங்கும் எங்கும் ஓடி அலைந்து ஆணவக்காரனாக இருந்த அந்த துரியோதனனை வென்றது தெரியாதா? சாதாரண மனிதன் போல் இருந்து தானே தர்மத்தின் பக்கம் நின்று தர்மத்தை செயிக்க வைத்து அதர்மத்தை அழித்த செய்தி தெரியாதா? இப்படி மாயன் தானும் நடந்து முடிந்த யுகங்கள் ஆறு அதிலும் ஒரு சாதாரண மனிதர் போலதானே தோன்றி ஊவமைகள் பல செய்து பல திருவிளையாடல்களை புரிந்துள்ளார்.

ஒவ்வொரு யுகத்திலும் மாளா வரங்கள் பல கோடி பெற்றோம் என்று ஆணவத்தோடு வாதாடி எதிர்த்து நின்ற அசுரர்களை எல்லாம் கொன்ற செய்தி உமக்கு தெரியாதா? இப்படி செப்பிடக்கூடாத மாயனின் திருவிளையாடல்களை எல்லாம் நீர் கேட்டது இல்லையா? என்றான் பூவண்டன். மாயாதி சூட்சன் குலம் கோத்திரம் இல்லாதவன். அவன் இந்த எளிய சாணான் குலத்தில் வருவானோ என்று நீர் என்ன வேண்டாம். அவன் ஒரு நாளும் குலம் பார்த்து பக்தர்களே ஒதுக்கியது இல்லை. திருப்பாணாழ்வாரை தாழ்ந்த குலத்தவன் என்றும் தீண்ட தகாதவன் என்று அவமதித்த லோக சாரங்க முனிப்பட்டரை, பாணரைத் தன் தோளிலே சுமந்து தன் சன்னதிக்கு கொண்டு வர செய்து பாணருக்கு திருவடிப் பேறு

அருளி, அவரை அன்று முதல் எல்லோரும் முனி வாகனர் என்று போற்றச் செய்தார் அரங்கநாதன்.

பாணபத்திரனுக்கு அருள் பாலிக்க விறகு வெட்டியாய் தோன்றி யாழ் மீட்டி பாடினார் சோமசுந்தர பெருமாள். பறையர் குலத்தில் தோன்றியவனாகிய நந்தனாரை தில்லை வாழ் அந்தணர் மூவாயிரம் கை கூப்பி தொழச்செய்தான் தில்லைக்கூத்தன். நீ போற்றும் நாராயணர் இந்த தூணிலும் இருக்கிறானா என்று கேட்ட பிரகலாதனிடம் இரணியனை அந்த தூணில் நின்று நரசிம்மமாய் தோன்றி சங்காரம் செய்தான். தோலன் என்றுச் சொல்லக்கூடிய அழகனாய் தோன்றி மீனாட்சி சுந்தரேசர் திரு கல்யாணத்தை முடித்து வைத்தார். ஆண் பரம புருஷன். நான் பரமாத்மாவாகவே இருந்து ஜீவாத்மாவாகிய உங்களுக்கு அருள் பாலிக்கிறேன் என்றுக் கூறி கோபியர்களுக்கு பர பக்தி அருளினார். அவருடைய லீலைகளை யார் அறிவார்? என்றார் பூவண்டன்.

குயவர் குலத்தில் தோன்றிய திருநீலகண்ட நாயனருக்கும் அவர் தர்மபத்தினிக்கும் திருவோட்டுடன் வந்து திருவிளையாடல் புரிந்து என்றும் இளமை குன்றாத பேரின்பம் அருளினார். குறவனின் குலத்தில் வளர்ந்த வள்ளியை முருகனாக சென்று ஏற்று வள்ளி மணாளன் ஆனார். மசம் என்ற நாரை பறவையானது தான் கடும் பசியால் துன்புற்றப் போதிலும் திருக்குளத்து மீன்களை உண்ணாது கடுமையான விரதம் காத்த நாரைக்கு முத்தி அருளினார். கரி குருவிக்கு உபதேசம் செய்த அருளினார். காளை மாடாகிய நந்தீஸ்வரன் ஆனார். ஆதிமூலமே என்று அபயமிட்ட கஜேந்திரன் என்ற யானைக்கு முக்தி அருளினார் .

பூமா தேவியை துன்புறுத்திய இரணியாட்சனை வராகமாய் தோன்றி கொன்றொழித்தார். பன்றிக் குட்டிகளுக்கு தாயாகி பால் கொடுத்தார். விஸ்வகர்மாவின் குலத்தில் வந்தார். அர்ஜுனனுக்கு அருள் பாலிக்க வேடனாய் வந்தார். வேடுவர் குலத்தில் மலையரசன் மகளாய் தோன்றிய உமா தேவியை ஏற்று வேடனின் மருமகன் ஆனார். வேடன் திண்ணனாருக்கு அருள் பாலித்து அவருக்கு கண்ணப்ப நாயனார் என்னும் பெருமையைத் தந்தார். அசுவம் என்னும் குதிரை முகத்துடன் ஸ்ரீஹரிஸ்வரமூர்த்தியாகி கலைவாணிக்கு 64 கலைகளையும் போதித்தார். பிரகஸ்பதி ஞான உபதேசம் செய்தருளினார்.

மாணிக்க வாசக பெருமானுக்கு அருள் பாலிக்க நரியை பரிகையாக்கி குதிரை பாகனாகி அருள் பாலித்தார். இவ்வாறு எந்த உயிர்களையும் கூட ஒதுக்கியது இல்லை. இப்படி எல்லாம் பல லீலைகளை செய்தவர் மாயாதி சூட்சனாகிய நாராயணரே! இவை எல்லாம் உமக்கு தெரியாதா? என்றுப் புத்தி போதித்தார் பூவண்டர். இவ்வாறு அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் இறைவன் . அவன் மனிதன், மிருகங்கள், பட்சி பறவைகள், வேறு உயிர்கள், மரம் செடி, கொடிகள், சூரிய, சந்திரன், நிலம், நீர் என அனைத்துக்கும் அதிபதியாக இருக்கும் அவனுக்கு சாதி ஏது ?மதம் எது? அவ்விடம் இவ்விடம் என்று எந்த பேதமும் இல்லை. பரம் இல்லாத இடம் எங்குள்ளது.

அறம் நிறைந்தவர்களுக்கு பரப்பிரம்மம் பற்றி அறிந்துக் கொள்ள முடியும். அறம் இல்லாதவர்களுக்கு பரப்பிரம்மம் பற்றி அறிந்துக் கொள்ள முடியாது. இறைவனின் சூட்சம் என்பது யாராலும் அறிந்து கொள்ள முடியாது . அவர் மாயைக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். இறைவனின் சூட்சம ரகசியத்தை உணர்ந்து கொள்ள யாராலும் முடியாது. அந்த மாயாதி சூட்சனின் செப்படி வித்தையை யாராலும் அளவிட்டு சொல்ல இயலாது . மாயைக்கு அதிபதியே அந்த பரம்பொருள். மாயை வசப்பட்ட ஜீவன் மாயையின் கவர்ச்சி நீங்காத வரையில் யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே இவ்விதம் சொல்லிய பூவண்டர் மன்னனிடம், மன்னா நாம் இவ்விடம் விட்டு நம்மிடம் ஏககுவோம் என்றுக் கூறினார்.

பூவண்டர் கலிநீச மன்னனுக்கு எத்தனையோ புத்திமதிகளை சொல்லிப் பார்த்தார். ஆனால் கேடு வருகின்ற போது எதுவும் காதில் ஏறாது என்பது போல தனக்கு கேடு வருவதை உணராதவனாய் மிகுந்த கோபத்துடன் இவன் சபைக்கு ஏற்காத வார்த்தைகளை எல்லாம் சொல்லுகின்றான், என்னிடம் இவ்வளவு தைரியத்தோடு பேசுவதற்கு இவனுக்கு யார் உரிமை கொடுத்தது? ஆகவே இவனைப் பிடித்து உடனடியாக சிறையில் அடையுங்கள் என்று ஆணையிட்டான்.

மேலும் நான்கு வேதங்களையும் அறுப்பத்து நான்கு கலைகளையும் கற்றுத் தேர்ந்த மேல்குலத்தில் பிறக்காமல் அந்த மாயம் சிறுகுலம் புக்குவாரோ? உன்னுடைய வார்த்தையை யாரால் ஒத்துக் கொள்ள முடியும். பாதகா! மூடா! நீ எனக்கு புத்தி சொல்ல வந்தாயா என்று கோபத்துடன் மன்னன் பூவண்டரை

எதிர்த்து பேசினான். இதில் நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும். நூல் அறிவால் இறைவனை ஒருபோதும் அறிய இயலாது. இறைவனை அறிய வேண்டும் என்றால் நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், 64 கலைகள் ஆகிய அனைத்து கற்றாலும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உணர்வு இல்லாதவரை இறைவனை அறிய இயலாது.

நூல் அறிவை வைத்து அறிவுடையார் என்றோ மேற்குலோத்தோர் என்றோ சான்றோர்கள் என்றோ ஒத்துக்கொள்ள முடியாது. இப்படிப்பட்டவர்களை தான் கல்லாத புல்லர்கள் என்றும் நீச குலத்தவர்கள் என்றும் அகிலம் குறிப்பிடுகிறது. எல்லாம் ஒன்றே என்று அறிய வேண்டும். பிரித்து பார்ப்பது என்பதுதான் கலிமாயை ஆகும். ஆகவே மனம் மாசுகளிலிருந்து விடுபட்டு சாதி சமய வேற்றுமைகளை விட்டு எல்லாம் ஒன்றே என்று யார் உணர்ந்து இருக்கின்றார்களோ அவர்களை மேல்குலத்தவர்கள் ஆவார்கள்.

மேலும் கலிநீச மன்னன் நித்தம் பல லட்சம் பொற்காசுகளை செலவு செய்து நாம் சாலைகள் தோறும் தர்மம் மடம் வைத்து தர்மம் செய்து வருகிறோம். மிக மிக சிறப்பாக திருநாள்களை எல்லாம் நடத்துகிறோம். அப்படிப்பட்ட நம்முடைய குலத்தை ஒதுக்கிவிட்டு நித்தியம் வேலை செய்யும் இந்த இழிகுலத்தில் மாயன் வருவானோ என்று கொக்கரித்தான் கலி நீச மன்னன். தினந்தோறும் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வரும் மக்களை இழிவானவர்கள் என்றே தான் கலி நீச மன்னன் எண்ணினான்.

அன்றைய நாளில் உழைப்பையும் உழைப்பாளிகளையும் மதிக்காமல் அவமதித்த பாவத்தின் பலனை இந்த உலகம் அனுபவிக்கிறது என்பது அனுபவம் உண்மை. உழைத்து சாப்பிடுபவர்களை ஏளனமாக பாவிக்கின்ற போக்கு கலிநீச மன்னர்களின் உடைய தன்மை என்பதை இங்கே எடுத்துரைக்கின்றது. பிரமனுக்கு ஒப்பாய் உள்ள பிராமண குலத்தை தள்ளி ஸ்ரீராமர் மற்றொரு குலத்தில் வருவாரா? யாருடா நீ என் முன்னே நின்று இந்த வார்த்தைகளை பேசுகின்றாய்? வராகமாய் உதித்த மாயன் ஒரு மனிதனாக வரமாட்டார்.

காரணமான மாயன் நாராயணர் கலியுகம் வருவது கண்டு பதறி ஓடி ஒரு வேடன் கையால் அம்புப்பட்டு செத்து இனிமேல் இத்தரணியில் வரேன் என்று தவலோகம் சேர்ந்துவிட்டார்.

அப்பபடிப்பட்ட மாயம் எப்படி இங்கே ஒரு மனிதனாக வருவார். ஆகவே இந்த வார்த்தைகளை எல்லாம் நீ என்னிடம் பேசாதே அப்படி ஓடியவர் அவனியில் மனுபோல் வரவே மாட்டார். இப்படி இவன் சொன்ன இகழ்ச்சிகளை எங்குமே நான் கேட்டதில்லை. கருப்பு கட்டிக்கு சாணான் கையில் கைக்கூலி வாங்கிக்கொண்டு அவனுக்காக பரிந்து பேசுகிறாயா? நீ என்னிடம் என்ன மழுப்புகிறாய்.

நீ எதடா செய்தி சொல்ல இங்கு வந்தாய் என்றான் கலி நீச மன்னன். இதனை கேட்ட பூவண்டர், மழுப்பில்லை கேளுங் கேளும் நான் மாண்டு போனாலும் பரவாயில்லை. ஆனால் உனக்கு தூண்டில் அவரிடம் தான் வளருகிறது ஆனால் உனக்கு அழிவுக்கான காலம் நெருங்கிவிட்டது. அவரிடத்தில் நீயாகவே உன் கழுத்துக்கு கத்தியை வாங்கி வைக்கிறாய். இதுதான் உண்மை. இது உண்மை இல்லை என்றால் என்னுடைய மீசையை அரிந்து நான் தருகிறேன் என்று சவால் விட்டார்.

உன்னுடைய ஆணைப்படை, குதிரை படை,தேர் படை, காலாட் படை, அரண்மனை வாழ்வு, செல்வம், செல்வாக்கு ஆகிய அத்தனையும் தோற்று எரிந்து நீ கரிந்து சாவாய். இது என்னுடைய வார்த்தை அல்ல நாராயணரே என் நாவிலிருந்து சொல்லுகிறார் என்றார். உண்மை நான் எனது என்ற அறியாமையை கடந்து எல்லாம் அவன் செயல் என்னால் ஆவது ஒன்றும் இல்லை என்னும் மெய்யறிவியுடையோரின் நாவிலிருந்து அந்த நாதனே நின்று பேசுகிறார் என்பதே உண்மை. நான் சொல்லும் வார்த்தை எல்லாம் அந்த நாதன் வார்த்தையே அன்று என் வார்த்தை இல்லை என்பது இறைவனை உணர்ந்தவர்களுடைய சொல்லாகும்.

இந்த கடும் சொற்களை கேட்ட மன்னன் சற்று தயங்கினான் எனினும் அவனுக்கு போராத காலம் வந்துவிட்ட காரணத்தினால் புத்தி வேலை செய்யவில்லை. உடனே இவனை கொண்டு போய் விலங்கு மாட்டி சிறையில் அடைத்துவிட்டு சிங்க தண்டிகையை அதாவது அரசனுக்குரிய பல்லக்கை எடுத்து வாருங்கள் அந்த சாணானை சென்றுப் பிடித்து வருவோம் என்றான் கலி நீச மன்னன். உடனே பக்கத்தில் நின்ற பாவி நீச சறடன் சொல்லுவான், ஆர்க்கு இது ஏற்கும். தாங்கள் அவரிடம் செல்வதா? தகாது! தகாது ! கௌடசாஸ்திரியான அந்த கடியன அனுப்பி அவனை இங்கு

இழுத்து வர சொல்லுங்கள் என்றான். இது அந்த காலத்தில் இருந்த சாதி வெறியை வெளிப்படுத்துவதாக உள்ளது.

உடனே மன்னவனும் சாதிவெறிபிடித்து வெறுப்படைத்தவனாய் நீங்கள் சென்று அந்த சாணானைப் பிடித்து நூல் கயிற்றால் கட்டி அந்த கட்டுடனே என் முன்னே கொண்டு விடுங்கள் என்று கொக்கரைத்தான். மன்னனின் இந்த உத்தரவை கேட்டதும் கௌவுட சாஸ்திரி படைக்கோலமிட்டுத் தடுத்திடும் வீரர்களை தனக்கு பாதுகாப்பாக தன்னைச் சூழநிறுத்தி தான் நடுவில் நின்று படைகளை அணிவகுத்தான். குதிரை படைகளை தன் பக்கங்களிலும் முன்னுமாக விட்டான்.

அதற்கு முன்னால் யானைப்படைகளை நிறுத்தினான். காலால் படைகளைச் சூழ நிறுத்திப் போர்க்க கவசம் அணிந்து படை நடத்தி வந்தான். அம்பு எடுத்து அடிப்பேன் என்று ஒரு கூட்டம் வீரர்கள் ஓடி வந்தனர்.கம்பெடுத்து அடிப்பேன் என்று ஒரு கூட்டம் சாடி வந்தனர். கொம்பெடுத்து உதைப்பேன் என்று குஞ்சரத் தலைவர்கள் கொக்கரித்து நின்றனர். இவ்வாறு புண்படவே கொல்வோம் என்று அனைவரும் ஆரவாரத்துடன் தெட்சணம் நோக்கி புறப்பட்டு வந்தனர்.

**வினாவிடை:**

1. அய்யா வைகுண்டரை பிடிப்பதற்காக படைவீரர்களை ஏவுகின்ற போது மன்னனுக்கு புத்தி சொன்னவர் யார்?
   ஆயிடை வழியில் வந்த பூவண்டர் என்பவர் புத்திச் சொன்னான். சொன்னார்.

2. ஆயிடையர் மன்னனுக்கு உரைத்த புத்திமதி யாது ?
   மன்னா இறைவன் எளிய குலத்தில் பிறப்பான் என்று எண்ண வேண்டாம். இதற்கு முன்பு ஆயினர் குலமும் தோன்றியவர் அங்கு இருந்தது தெரியும் அல்லவா? எளிமையாம் குலங்கள் என்று எண்ண வேண்டாம். அதர்மம் தலை தூக்கும் போது அதர்மத்தை அழிப்பதற்காக அந்தந்த இடத்திற்கு ஏற்றவாறு அவர் அவதாரம் எடுப்பது நிச்சயம். இதற்கு முன்பு தசரதனுக்கு மகவாக தோன்றி ராவணனை சங்காரம் செய்த செய்தி உமக்கு தெரியாதா? தெய்வகி வயிற்றில் தோன்றி ஸ்ரீ கிருஷ்ணர் எனவே பிறந்து கம்சனை வதம் செய்தது தெரியாதா? ஐவருக்கும் தூதனாக

அங்கும் இங்கும் ஓடி அங்கே மைகுழல்மார்களை மணம் செய்து துரியோதனை வதம் செய்தது தெரியாதா? இப்படி இதற்கு முன்பு இரு மூன்று யுகங்களிலும் மாயன் மனுபோல் தோன்றி உவமைகள் பல செய்துள்ளார் ஆகவே தாங்கள் இப்படி சொல்ல வேண்டாம் என்று புத்தி உரைத்தார்.

3. இறைவன் தான் எவ்வாறு தோன்றி நிற்பதாக ஆயிடையன் மன்னனுக்கு கூறினான்?
பாணனாய் பறையனாய் தூணாக தோலனாக ஆணாக தோன்றி நிற்பார் என்று கூறினார்.

4. இறைவன் எந்தெந்த குலத்தில் வந்ததாக ஆயிடையன் மன்னனுக்கு கூறினார்?. குசவனின் குலத்தில் வந்தார் குறவரின் குலத்தில் வந்தார் மசவென குலத்தில் வந்தார் மாடனெ குலத்தில் வந்தார் விசுவன குலத்தில் வந்தார் வேடனின் குலத்தில் வந்தார் அசுவண குலத்தில் வந்தார் அவர் உரு கேட்டிலிரோ என்று புத்தி உரைத்தான்.

5. ஆயிடையன் கூறிய பதிலைக் கேட்டு மன்னன் கோபம் கொண்டு கூறியது யாது?
வேதமாம் கலைகள் தேர்ந்த மேல் குலத்தை விட்டுவிட்டு சீதமாய் பிறவா வண்ண சிறு குலம் புக்குவாரோ என்னிடம் என்ன வார்த்தை நீ பேசுகின்றாய் என்று கோபமாக உரைத்தான்.

6. கலிநீசன் ஆயிடையனிடம் தான் தினந்தோறும் எத்தனை பொன் பணம் செலவு செய்து தர்ம சாலைகள் அமைத்து தர்மம் செய்வதாக கூறினார்.?
லட்சம்

7. கலிநீச மன்னன் ஆயிடையனிடம் எந்த குலத்தை விட்டுவிட்டு இந்த சிறுகுலம் புக்குவாரோ என்று கேள்வி கேட்டான்?
வேதமும் கலைகள் தேர்ந்த மேல் குலத்தை விட்டு விட்டு சிறுகுலம் புக்குவாரோ என்றுக் கேட்டான்.

8. ஆய் இடையனிடம் கலிநீச மன்னன் எதாக உதித்த மாய மனுவாக பிறக்க மாட்டார் என்று கூறினார்?
வராகனாய் உதித்த மாயன்

9. கலிநீசன் ஆயிடையனிடம் மனுவாக பிறக்க மாட்டார் என்பதற்கு கூறிய காரணம் யாது?
காரணமான மாயன் கலியுகம் வருகிறது என்று எண்ணி நாராயணன் பயந்து ஓடி நல்மலை ஏறி மானாய் வாரண நாதன் அம்பால் வல்வேடன் எய்து செத்து தரணியில் வாறேன் என்று தவலோகம் சேர்ந்தார். ஆகவே மாயனாகவே அவர் மீண்டும் இங்கே மனுவாய் பிறக்க மாட்டார் என்றுக் கூறினார்.

10. இறைவன் மனிதனாக பிறப்பதற்கு காரணம் இல்லை என்று கலிநீச மன்னன் மறுத்துரைத்ததற்கு காரணம் என்ன ?
துவாபர யுகத்தை நிறைவு செய்துவிட்டு அவர் தன்னுடைய அவதாரத்தை நிறைவு செய்து விட்டு ஆகவே தவலோகம் சேர்ந்து விட்டார். எனவே இவர் மனுபோல் திருப்பி அவதாரம் எடுக்க மாட்டார் என்று கூறினான்.

11. கலிநீச மன்னனுக்கு புத்தி சொன்ன ஆயிடையனிடம் யாரிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டு என்னிடம் மழுப்ப வந்தாய் என்று கேட்டான் கலிநீசமன்னன்?
கர்ப்பிடி சாணானிடம்

12. கலி நீச மன்னனுக்கு அழிவு யாரிடம் இருக்கிறது என்று ஆயிடையன் கூறினான்?
அய்யா வைகுண்டரிடம் இருக்கிறது என்றுக் கூறினார்.

13. “வழுப்பில்லை உனக்குத் தூண்டல் வளருது அவரிடமே கண்டாய்,” இதில் தூண்டல் என்பது எதைக் குறிக்கிறது?
கலிநீசமன்னுக்கு வரும் அழிவைக் குறிக்கிறது.

**14.** “**கழுத்திலே உனது கையால் கத்தியை வாங்கி வைப்பாய் முழுத் தில்லையானால் எந்தன் மேல் மீசை அரிந்து தாரேன்**” யார் யாரிடம் கூறியது?
ஆயிடையன் கலிநீச மன்னனிடம் கூறியது.

15. கலி நீசமன்னனிடம் ஆயிடையன் நீ எதை எல்லாம் தோற்றுப் போவதாக நாராயணர் கூறியதாக உரைத்தார்?.

ஆனையும் படையும் அரண்மனை கோவில் காலும் சேனையும் குடையும் வியாழச் செல்வம் சிறப்பு எல்லாம் ஏனமே தோற்று எரிந்து கரிந்து சாவாய் என்று நாராயணர் கூறியதாக கூறினார்.

16. ஆயிடையன் உரைத்த புத்திமதியை கேட்டு கலிநீச மன்னன் செய்த செயல் யாது?
ஆயிடயனை சிறையில் அடைத்து போடுமாறு கட்டளையிட்டான்.

நடை

இந்தநே ரந்தனிலே ஏகியந்தச் சாணானை
குந்தமது கொண்டிடித்துக் குண்டிக் கயிறிறுக்கி
இங்கேகொண்டு வாறேன் என்று கெளடனுமே
துங்க விருதுபெற்றுச் சூழப் படைவகுத்து
ஆயுத மம்பு அணியீட்டி தான்பிடித்து
வாயுதக் கணைகள் வகைவகை யாயெடுத்துப்
பரியை விதானமிட்டுப் பாய்ந்துக் கெளடனுமே
கரியைக்சூ ழநிறுத்தி கனபடைகள் பின்னிறுத்தி
நீசன் விடைவேண்டி நீணில முமறிய
பாசக் கயிறுடனே பாவியந் தக்கெளடன்
வாற விதமதையும் வைந்தப் பொருளறிந்து
காரணிக்க மொன்று கருத்தில் மிகநினைத்து
இப்போ பதறி எழுந்திருந்து வோடவென்று
அப்போது மாயன் அறிந்தேகும் வேளையிலே
நன்மையாய்ச் சொல்லி நாடுவது மெச்சாதி
தின்மையாய்ச் சொல்லிச் சிரிப்பதுவு மெச்சாதி
என்றுநாம் பார்ப்போம் என்று மனதிலுற்றுப்
பண்டுதாம் பிறந்த பாற்கட லைநோக்கி

விளக்கம்:

சுவாமி இவ்வாறு விதவிதமான படைகளையும் விதவிதமான ஆயுதங்களையும் திரட்டிக்கொண்டு சுவாமியை கொன்றுவிட வேண்டும் என்று எண்ணத்தோடு பாச கயிறு கொண்டு அந்த நீச பாவியானவன் அணிவகுத்து வருவதை அறிந்த அய்யா தான் அந்த நீசனின் படைக்குப் பயந்து ஓடுவதைப் போல் ஒரு பாவனை செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணினார்.

அவ்வாறு படைகளை கண்டு பயந்து ஓடுவதே போன்று ஒரு பாவனை செய்ய வேண்டும் என்று எண்ணிய எம்பெருமான் அருகில் நிற்கும் மக்களை அதற்கு முன்பாக சோதிக்க வேண்டும் என்று எண்ணினார். அதன் படி ஒரு சிறிய திருவிளையாடலை காட்டினார். வைகுண்டர் அவதாரம் எடுத்து இந்த மண்ணகம் வந்து சுமார் ஐந்து வருட காலமாக அவரை சார்ந்து பல நன்மைகளைப் பெற்று மகிழ்ந்த மக்களில் யாரெல்லாம் அந்த நன்மைகளை நினைத்து நன்றியுடன் நிற்கின்றார்கள் என்பதையும் யாரெல்லாம் நன்றி மறந்தவர்களாக கேலி பேசி சிரிக்கிறார்கள் என்பதையும் உலகத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் என்று பண்டு தான் பிறந்த பாற்கடலை நோக்கி ஓட துணிந்தார் ஒரு வேஷம் போட்டு.

அதாவது ஆடை அணியாமல் அரைக்கயிறு இல்லாமல் நாடை கெணியாமல் நடந்தார் திருப்பாற்கடலை நோக்கி. இந்த காட்சியை கண்ட தேவர்கள் எல்லாம் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். நல்ல மக்களெல்லாம் நாராயணா என்று போற்றினார். செல்ல மக்களெல்லாம் சிவசிவா என்று சிவ தோத்திரத்துடன் அவரை பின்தொடர்ந்தனர். நன்றி கெட்ட நீச குலத்தவர் எல்லாம் படை வருகிறது என்று பதறி இவன் ஓடுகிறான் என்றும், சுவாமி என்றால் இப்படி ஒரு மக்களுக்கு பயந்து ஓடுவானா இவன் ஒரு கள்ள ஸ்வாமி இவரை நம்பி நாம் ஏமாந்து விட்டோமே என்று நெடுந்தூரம் அங்கே வசை பாடினார்கள். "**ஆடை அணியாமல் அரைக்கயிறும் இல்லாமல் நாடைக் கெணியாமல் நடந்தார் கடல் நோக்கி**" இங்கு கூறப்பட்டுள்ள ஆடை அணிகள் அரைக்கயிறு ஆகியவையெல்லாம் பந்தத்தில் சின்னங்கள் .

எனவே சுவாமி திருவிளையாடலால் அவை பற்றற்ற பரமன் என்பதும் கோத்திரம் குடும்பம் எனும் தளைகள் இல்லாதவர் என்பதும், புலன் அறிவிற்கு அப்பாற்பட்டவர் என்பதையும் இதன் மூலம் உணர்த்தப்படுகிறது. எங்கும் நிறைந்து ஏகப்பரம் பொருளாய் அவர் உண்மையிலேயே ஆடை இல்லாதவர் திசைகளை எல்லாம் ஆடைகளாக கொண்ட அகண்ட வியாபகம் உடையவர். அதுவே அவரின் இயல்பு நிலை. இங்கு மனுநிறம் காட்டியமையால் அவ் வடிவத்தில் நில்லாதீர்கள் என்பதையும் இத்திருவிளையாடல் உணர்த்துகிறது.

**வினாவிடை:**

நான்காம் பருவம் **பகுதி**-3

1. வைகுண்டரை பார்த்து வருவதற்காக கலிநீச மன்னன் தயாரான போது தடுத்தவன் யார்?
நீசச்சறடன்

2. வைகுண்டரை பிடித்து வருவதற்காக யாரை அனுப்ப வேண்டும் என்று சரடன் கூறினான்.?
கார்க்கெதி கவுட சாஸ்திரி என்ற கடிகணை அனுப்ப கூறினான்.

3. கலிநீச மன்னன் கவுட சாஸ்திரியிடம் வைகுண்டரை எப்படி அழைத்து வருவதற்கு கூறினான்?
சாணான் தன்னை சூழ்ந்து நூல் கயிற்றால் கட்டி கொண்டு வாருங்கள் என்றுக் கூறினான்.

4. கவுட சாஸ்திரி வைகுண்டரை பிடிப்பதற்காக எந்த கோலத்தை எடுத்துச் சென்றான்?
கடும் படை கோலமிட்டு சென்றான்.

5. கவுட சாஸ்திரி வைகுண்டரை பிடிப்பதற்காக தன் பக்கமாக யாரை விட்டுச் சென்றான்?
பரிநடைகாரர்களை

6. கவுட சாஸ்திரி வைகுண்டரை பிடிப்பதற்காக தன் காவலாக யாரை விட்டுச் சென்றான்?
கரிநடைகாரர்

7. கவுடா சாஸ்திரி வைகுண்டரை பிடிப்பதற்காக வரும்போது எத்தகைய கவசம் போர்த்தி வந்தான்?.
வரிப்படை கவசம் போர்த்தி வந்தான்.

8. பரிநடைகாரர் என்பவர் யார்?
குதிரை படைக்காரர்

9. கரிநடைகாரர் என்பவர் யார்?
யானை படைக்காரர்

10. அம்பெடுத்து எய்வேன் என்று அய்யா வைகுண்டரை பிடிப்பதற்காக சென்றவன் யார்?

கலிநீச மன்னனுடைய ஒரு படை

11. கம்பு எடுத்து அடிப்பேன் என சொல்லி சென்றவன் யார்?
காலசன் என்ற நீசன்

12. கொம்பெடுத்து உதைப்பேன் என்று சொன்னவன் யார் ?
குஞ்சரத் தலைவன்

13. புண்பட கொல்வேன் என போனவன் யார்?
கவுடன்

## பாற்கடல் நோக்கி ஓடுதல்

ஓடத் துணிந்தார் ஒருவேச மும்போட்டு
ஆடத் துணிந்தார் ஆகாசத் தேதேவர்
ஆடையணியாமல் அரைக்கயிறு மில்லாமல்
நாடைக் கெணியாமல் நடந்தார் கடல்நோக்கி
நல்ல மனுச்சாதி நாரா யணாவெனவே
செல்ல மக்களெல்லாம் சிவசிவா என்றுசொல்லிக்
கூடத் தொடர்ந்துக் குவித்துப் பதம்போற்றித்
தேடரிய நல்லோர் சேவித்துப் பின்வரவே
ஆகாத நீச அறியாயச் சாதியெல்லாம்
வாயாரப் பேசி வம்புரைத் தேநகைத்தார்
பதறி யிவன்போறான் படைவருகு தென்றுசொல்லிக்
கதறிமிக ஓடுகிறான் கள்ளச்சுவா மியிவனும்
சாமியென்றால் நருட்குத் தோற்றுமிக ஓடுவானோ
நாமிவனை நம்பி நடந்ததுவும் வீணாச்சே
பேயனுட பேச்சைப் பிரமாண மாய்க்கேட்டு
ஞாயமது கெட்டோம் நாமெல்லா மென்றுசொல்லி
நீசக் குலத்தோர் நெடுந்தூரம் வைத்தார்காண்
தேசமதை யாளும் செல்லவைந்தார் சூட்சமதை
அறியாமல் நீசரெல்லாம் அப்போநன்றி யுமறந்து
வெறிகொண்ட பேயனென மேதினியில் பேசினர்காண்
நல்ல மனுவோர் நாரணா தஞ்சமெனச்
செல்ல மனுவோர் திருப்பாத முந்தொழுது
கூடி நடந்தார் குருவே குருவேயென

நாடி நடந்தார் நல்லபதியேற் வரெனக்
கண்டுகொள்வோ மென்று காட்சை யுடன்நடந்தார்
பண்டு அருள்பெற்றோர் பச்சைமா லுடன்நடந்தார்
அப்போ வைகுண்ட ராசர் மனமகிழ்ந்து
எப்போதும் வாழ்வார் எனக்கான மக்களெல்லாம்
வம்புரைத்த நீச வழிமுழுதுஞ் செத்திறந்து
முன்பு விதியால் முழுநரக செத்திறந்து
என்று சபித்து எம்பெருமாள் தானடந்து
பண்டு பிறந்த பால்கடலுள் சென்றனரே

விளக்கம்:

இறைவன் பரிசுத்த ஞான வடிவமாக விளங்குபவன் தம்முடைய மாயை வசப்படுத்தி மனிதர்களைப் போல உருக் காட்டி சுகத் துக்கங்களை அனுபவிக்கின்றதே போல இவ்வுலக மக்களை தன்வயப்படுத்துகின்றதற்காக ஒரு மாயை செயல்படுத்துகின்றார் .அவர் பிறப்பதும் இல்லை. இறப்பதும் இல்லை. ஓடுவதும் இல்லை என்பதுவே உண்மை. மாயாதி சூட்சனின் மாயா விளையாட்டு இதை அறியாத நீசர்கள் அவரை வெறி கொண்ட பேயன் எனப் பேசி தங்களுக்கு தாங்களே கேடு விளைவித்துக் கொள்ளுகிறர்கள்.

நல்ல மனுவோர்கள் எல்லாம் நாராயணா தஞ்சம் என்று அவரின் திருப்பாதம் தொழுது குருவே குரு எனவே கூடி நடந்தார்கள். அப்போது அய்யா வைகுண்டர் எப்போதும் வாழ்வார் எனக்காக மக்கள் எல்லாம் என வாழ்த்தினார். இங்கு எனக்காக மக்கள் எனப்படுவார்கள் பதிவிரத தன்மையுடைய பக்தர்களை குறிக்கிறது.வம்புரைத்த நீச வழி முழுவதும் அசுர சக்திகளும் அனைத்தும் முன் வினையின் பயனாக முழு நரகமே விழுவார்கள் என்று சாபம் விட்டார் .

**வினாவிடை:**

14. கலிநீசன் படை வகுத்து வருவதை அறிந்த அய்யா வைகுண்டர் செய்தது யாது?
கலிநீசன் படை வகுத்து வருவதை அறிந்த அய்யா வைகுண்டர் அந்த நீசனுடைய படைக்கு பயந்து ஓடுவதைப் போல் ஒரு பாவனை செய்து தன்னுடைய இடுப்பில் இருக்கின்ற ஆடை அவிழ்ந்து போவது கூட தெரியாமல் அங்கிருந்து ஓடினார்.

15. அய்யா வைகுண்டர் கலிநீச மன்னனுடைய படைக்கு எதிராக பயந்து ஓடுவதைப் போல பாவனை செய்தது எதற்காக?
யார் யார் தன்னை சூழ்ந்திருக்கின்ற மக்கள் உண்மையாக தன்னை நம்பி வந்திருக்கின்றார்கள் யார் யார் பொய் தன்மையோடு இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வதற்காக ஒரு பாவனையை செய்துக் காட்டினார்.

16. அய்யா வைகுண்டர் பாற்கடலை நோக்கி செல்கின்ற போது சான்றோர்களை மக்களினுடைய நிலை எவ்வாறு இருந்தது?
அய்யா சிவ சிவ சிவசிவா அரகரா அரகரா என்று மக்கள் எல்லோரும் அய்யாவை பின் தொடர்ந்து சென்று ஓடினார்கள்.

17. அய்யா வைகுண்டர் பாற்கடலை நோக்கி செல்கின்ற போது கலிநீச மக்களினுடைய நிலை எவ்வாறு இருந்தது?
வாயார பேசி வம்புரைத்தார்கள்

18. சான்றோர் மக்களோடு பாற்கடலை நோக்கி ஓடிய அய்யா கடற்கரையில் வந்து சான்றோர் மக்களிடம் கூறியது யாது?
பண்டு என்னை பெற்ற தாதாவாகிய என் தந்தை என்னை பாற்கடலுக்குள் அழைக்கின்றார். நீங்கள் எல்லோரும் இதிலே நில்லுங்கள் என்று கூறிவிட்டு கடலுக்குள் சென்றார்.

விருத்தம்

சென்றனர் தேவ ரோடு செகல்கரை தனிலே நின்று
நன்றினந் தன்னைப் பார்த்து நவிலுவார் வைந்த ராசர்
பண்டெனைப் பெற்ற தாதா பாற்கட லுள்ளே யென்னைச்
சென்றிட அழைக்கிறார் நீங்கள் செகல்கரை தனிலே நில்லும்

விருத்தம்

நில்லுமென் றினத்தை யெல்லாம் நிறுத்தியே கடலி னுள்ளே
பல்லுயிர் யாவும் ஆளும் பரமனு மங்கே செல்ல
வெல்லமர் தேவ ரெல்லாம் மேகனிற் குடைகள் போட
வல்லவன் தகப்பன் பாதம் வணங்கியே வைந்தர் சொல்வார்

விருத்தம்

அப்பனே வொப்பில் லாதா அலைகடல் துயின்ற மாயா
செப்பவுந் தொலையா நாமம் சிமையில் விளங்கப் பெற்றாய்
தப்பர வில்லா என்றன் தகப்பனே கேண்மோ வையா
எப்போநான் விளங்கி யுன்றன் இரத்தின சிம்மாசன மேறுவேன்

விருத்தம்

ஆண்டு ரண்டாச்சே மாதம் அயிரு பதினாலாச்சே
வேண்டுத லின்னங் காணேன் வெம்புறேன் கலியில் மூழ்கி
கூண்டுநீர் முன்னே சொல்லிக் குருவுப தேசம் வைத்த
ஆண்டின்னம் வருகி லையோ அப்பனே மெய்யுள் ளோனே

முட்டப்பதி விஞ்சை - 1

விருத்தம்

இப்படி மகன்தான் சொல்ல இருகையால் மகனை யாவி
முப்படித் தவத்தால் வந்த முதலெனத் தழுவிக் கூர்ந்து
எப்படி யென்றோ நீயும் ஏங்கவே வேண்டா மப்பா
ஒப்பில் லாச்சிங் காசனம் உனக்கென வளரு தப்பா

விருத்தம்

ஏங்கியே பதற வேண்டாம் எனது மகனே நீகேளு
மூங்கிக் கலியை விட்டகன்று முழித்துக் குதித்து வுதித்தஅன்று
தாங்கி யுனைநான் வந்தெடுத்துத் தனது தாயை யிடம்நிறத்திப்
பாங்கி லுதித்த மகனுனக்குப் பட்டந் தரிப்பேன் பதறாதே

விருத்தம்

வண்ணம் பதியி னலங்காரம் வகைகளின்ன தென்று சொல்லி
எண்ணத் தொலையா தென்மகனே இரத்தின சிங்கா
சனப்பவிசு
கண்ணைப் பறித்து நீசனுட கருவை யறுத்துக்
கலியழித்துஎண்ணும் வளர்ந்து வாழவைப்பேன் என்னா
ணையிது நீசமகனே

விருத்தம்

மண்ணி லுள்ளோர் தாமறிய மனுவோர் சீவ செந்தறிய
கண்ணே யிவர்கள் கண்காணக் கலியிற் காட்சி மிகநடத்தி
புண்ணிற் கதிரு பட்டாற்போல் பொல்லா நீசன் கண்டுழைந்து
எண்ணியறியா நீசனெல்லாம் ஏங்கி மாள வைப்பேனே

விருத்தம்

மகனே நீயும் தவமிருக்கும் வாய்த்தஇடத் திலிப்போ சென்றால்
உகமே யறியக் கலிநீசன் ஓடி வந்து உனைப்பிடித்துச்
செகமே ழறிய உன்கையைத் திருக்கிப் பினனே கட்டிறுக்கிப்
பகையே செய்து மிகஅடித்துப் பார விலங்கில் வைப்பானே

விருத்தம்

வைப்பான் மூன்றே முக்கால்மாதம் வாய்த்த விலங்கில்
நீயிருந்து
செய்ப்பாய் கலியை யறுப்பதற்குத் தெய்தி இதுவே கைவாச்சு
போய்ப்பா ரென்பான் பின்னுமவன் பெரிய குற்ற மிகவேற்று
மெய்ப்பா யவனு முரைத்ததுபோல் மெள்ள வுரைத்து
இருந்திடுநீ

விருத்தம்

மனுவை யடித்த துபோலே வசைகள் சொல்லி மிகஅடிப்பான்
தனுவை யடக்கிக் கொண்டிருநீ சற்றும் புதுமை காட்டாமல்
இனிமே லறிவா யென்றுசொல்லி எண்ணி மனதி
லெனைநினைந்து
கனிபோல் மகிழ்ந்து நீயிருநீ கண்ணே யெனது கற்பகமே

விருத்தம்

அன்பா யுன்னை யடுத்திருந்த ஆதிச் சாதி யவ்வினர்க்குத்
தன்பா லருந்துஞ் சாதிகட்குத் தவத்துக் குறுதி தான்கொடுத்து
என்பாற் கடலின் கரைதனிலே ஏழு மணிக்கு விடைகொடுத்துப்

பின்பா லவரை யருகழைத்துப் புசத்தி லடுக்க இருத்திடுநீ

விருத்தம்

கண்டாய் கண்டா யுடன்புதுமை கண்ணே வுனக்கு நற்காலம்
கொண்டாய் கொண்டாய் பத்தறையில் கோவில் காலும் சிவலாயமும்
தண்டா யுதத்தால் வாகனமும் சத்தி மாத ரிருபுறமும்
பண்டோர் காட்சி யுனக்குள்ளே பண்பாய்க் காணு தென்மகனே

விருத்தம்

காட்சிச் சிறப்புங் கலியாணம் கவரி வீசிக் கொலுவாரம்
சாட்சிக் கணக்கு முன்வருத்திச் சந்திர வர்ணக் கொடிநிறுத்தி
வாச்சி யுனக்குத் திருநாளும் வாய்த்த டம்மான முழங்க
காட்சி யுனது கண்முன்னே காணு மகனே கலங்காதே

விருத்தம்

பல்லக் கேறி தெருவீதி பகலத் தேரு நீநடத்திச்
செல்லப் பதிகள் மிகமுகித்துத் திருநாள் கண்டு மகிழ்ந்திருநீ
வல்லக் கொடிகள் மரம்நிறுத்தி வருவாய் நித்தம் வாகனத்தில்
பொல்லாக் கலியன் கண்டுழைந்து பொடிவா னித்த மடிவானே

விருத்தம்

இப்படிச் சிறப்பு எல்லாம் உனக்கிது மகனே மேலும்
எப்படி மலங்கி யென்னோ) டு (இதுவுரைத் தேது பிள்ளாய்
சொற்படி யெல்லா மந்தத் தேதியில் தோன்றுங் கண்டாய்
அப்போநீ யறிந்து கொள்வாய் அப்பனும் நீதாய னானாய்

விளக்கம்:

பின்னர் பண்டு தான் பிறந்த பாற்கடலில் கரையில் நின்றபடி தம்மை தொடர்ந்து வந்த நல்ல மக்களை பார்த்து பண்டெனைப் பெற்ற தாதா பால் கடலில் உள்ளே என்னை அழைக்கின்றார். நான் அங்கு சென்று வருகிறேன் . நீங்கள் இங்கேயே நில்லுங்கள் என்று

நிறுத்திவிட்டு பால் கடலில் சென்றார். தேவர்களெல்லாம் குடை நிழற்ற, வல்லவனான தந்தையும் திருப்பாதம் வணங்கி பின் வருமாறு பேசுகின்றார்.

"அப்பனே ஒப்பில்லாத அலைகடல் துயின்ற மாயா செப்பவும் தொலையா நாமம் சீமையில் விளங்க பெற்றாய் தப்பரவில்லா எந்தன் தகப்பனே கேள்மோ அய்யா எப்போ நான் விளங்கி உந்தன் ரத்தின சிம்மாசனம் ஏறுவேன்" என்றுக் கேட்கின்றார். இங்கு நாம் ஒன்றே உற்று நோக்க வேண்டும் அதாவது மேற்கூறிய விருத்தத்தின் மூலம் நாம் அறியப்படுவது யாதெனில் அய்யா வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் கேட்கின்றார்,

அப்பனே ஒப்பில்லாதவனே! அலை கடலில் அறிதுயில் கொள்ளுபவனே! மாயவனே! சொப்பொண்ணா திருநாமம் விளங்க பெற்றவனே! கள்ளம் கபடம் இல்லாத என் தகப்பனே! நான் எப்போது ஆன்ம தரிசனம் பெற்று மகிழ்வது என்றுக் கேட்கின்றார். அதாவது மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியாக இருக்கின்ற வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் கேட்கின்றார் நான் எப்போது ஆன்ம விடுதலை பெறுவது என்றுக் கேட்கின்றார்.

இதிலிருந்து நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் அதாவது மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியாக வந்தவர் வைகுண்டார் அப்படி வந்த வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் இப்படி கேட்பது முறையா? எல்லா தெய்வ சக்திகளையும் தனக்குள்ளே ஐக்கிய படுத்தி பரபிரம்மமாக இருக்கின்ற வைகுண்ட நாராயண மூர்த்தியிடம் கேட்கின்றது கேட்கின்ற போது இங்கே ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது.

காரணம் வைகுண்டருக்கு விஞ்சை அருளுகின்ற போது வைகுண்ட தெட்சணம் நோக்கி எழுந்தருளுகின்ற அந்த நேரத்திலே நீ கை குவித்தால் நாங்கள் மிக தாங்கரிது என்று அங்கு நாராயணமூர்த்தி கூறி வழி அனுப்பி வைத்தார்கள். ஆனால் இப்போது அதே வைகுண்ட நாராயண மூர்த்தியிடம் எனக்கு எப்போது முக்தி அருளிவீர் என்று கேட்கின்றார். இதிலிருந்து நாம் ஒரு உண்மையை புரிந்து கொள்ள வேண்டும் அப்போது வைகுண்டமாக பர

பிரம்மமாக அனைத்து தெய்வ சக்திகளையும் தனக்குள்ளே ஐக்கிய படுத்தி ஜோதி சொரூபனாக இருந்தார் வைகுண்டர்.

ஆனால் இப்போது ஒரு மானிட உரு கொண்டு இருக்கின்றார். உலக மக்கள் அவரை ஒரு மனிதனாகவே எண்ணி இருக்கின்றார்கள் மனித உருவம் எடுத்ததனுடைய நோக்கம் இந்த உலகில் இருக்கின்ற அனைத்து ஜீவராசிகளும் இறைவனுடைய பாதரமாகி அந்த தர்மக வாழ்வே பெற வேண்டும். அவருடைய சிவஞான பொக்கணத்திற்கு அங்கே வைத்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தானே நோக்கம் அந்த நோக்கத்தை மக்களுக்கு உணர வைக்க வேண்டும். இறைவனே மனிதனாக இருக்கின்றார்.

துன்பம் வரும் போது ஒரு மனிதன் எப்படி தந்தையிடம் முறையிடுவார்களோ அதுபோல இப்போது வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் முறையிட்டு தன்னுடைய வேண்டுதலை எங்கே தெரிவிக்கின்றார் இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது என்னவென்றால் வைகுண்டத்தை நம்முடைய மனதிலேயே ஏற்றுக்கொள்ளுகின்ற நாம் நம்முடைய துயர துன்பங்களை நம்முடைய தந்தையாகிய பிரம்மத்திடம் சொல்ல வேண்டும் என்பதை இங்கு உணர்த்தப்படுகின்றது. காரணம் வைகுண்டம் எல்லா ஜீவராசிகளுக்கும் உயிருக்குயிராய் இருக்கின்றார் அந்த ஜீவராசிகளுக்கு துன்பம் வருகின்ற போது இறைவனிடம் முறையிடுவது இங்கே எடுத்து சொல்லப்படுகின்றது.

ஆண்டு இரண்டாச்சே மாதம் ஆ இருபத்தி நாலாச்சே (24+8+14+14=60) இன்னும் வேண்டிய பலனை பெறவில்லையே! கலியில் மூழ்கி வெம்புகிறேனே! நீர்குரு உபதேசம் செய்து வைத்த விடிவுகாலம் இன்னும் வரவில்லையா அப்பனே ஒப்பில்லாதவனே! என்று வேண்டுகின்றார்.

இப்படி வைகுண்ட தந்தையிடம் சொல்ல, நாராயணமூர்த்தி தன்னுடைய அருள் திருக்கரங்களால் ஆர தழுவி முப்படித் தவத்தால் வந்த முதலே என் மகனே நீ பதற வேண்டாம். நான் உனக்கு தருவேன் என்று கூறிய அந்த ஒப்பில்லாத சிம்மாசனம் உனக்காக வளர்கிறதப்பா என்றார். எனவே எப்படியோ என்று நீ ஏங்கி தவிக்க வேண்டாம் என்றார்.

மேலும் இந்த கலியில் இருந்து விடுதலை பெற்றதும் நானே உன்னை நாடி வந்து எடுத்து தனது தாயை இடம் நிறுத்தி பாங்கில் உதித்த அதாவது பூரணத்திலிருந்து உதித்த பூரண பொருளாக இருக்கின்ற மகனே உனக்கு நிச்சயமாக இளவரசு பட்டம் தரிப்பேன் பதறாதே என்று கூறினார். மேலும் நீ ஆளும் வண்ணப்பதியாகிய திருச்சிற்றம்பலத்தின் அழகு இத்தகையது என்று யாராலும் அளவிட்டு சொல்ல முடியாது. எண்ணத்தொலையாத இரத்தின சிம்மாசனத்தின் பவிசோ அதற்கு மேலானது.

முப்பத்து இரண்டு அறத்தால் ஆன அறச்சிம்மாசனத்தில் இருந்து நீ ஆட்சி செய்யும் பார்த்து கலிநீசன் மனம் வருந்தி தவித்து தவித்துச் சாக வேண்டும். கலி நீசனின் கண்ணை பறித்து அவனை முற்றிலுமாக கருவறுத்து நல்ல ஆன்மாவை தேர்ந்து எடுத்து சுத்த தங்கமாக்கி என்றும் அழியாத பேரின்ப நிலை அருளுவேன். இது சத்தியம் என்று வைகுண்ரிடம் கூறினார்.

மேலும் மண்ணில் உள்ள மனுக்களும் மற்றும் அனைத்து ஜீவ செந்துக்களும் அறியும் படியாக இந்த கலி உலகில் நீ போய் நடத்துகின்ற திருவிளையாடல்களால் கலி நீசனானவன் புண்ணில் கதிருப்பட்டது போல் துடித்து துடித்து மாழவைப்பேன்.

மகனே நீ இப்போது தவம் இருக்கும் தெட்சணத்தில் சென்றதும் பூலோகத்தில் உள்ள அனைவரும் அறியும் படியாக கலிநீசன் ஓடி வந்து உன்னை பிடித்து மனுவை கட்டி அடித்தது போல வசைகள் சொல்லி அடித்து துன்பப்படுத்தி பார விலங்கில் வைப்பான். அவன் இட்ட விலங்கோடு சிறையில் இருப்பாயாக. இதுதான் கலியமுடியடி வேரில்லாமல் முழுமையாக அறுப்பதற்கு அருமையான வாய்ப்பு ஆகும். அவ்விதம் சிறை இருக்கும் போது அவன் பெரிய குற்றம் ஒன்றுக்கு ஆளாகி மனம் கலங்கி தவிப்பான். அப்போது உன்னை உன்னிடத்திற்கு போய்விடு என்பான். நீ உடனே அங்கிருந்து வந்துவிடாமல் மௌனமாக மூன்றே முக்கால் மாதமும் அங்கே இருப்பாயாக என்றுக் கூறினார்.

ஒரு சாதாரண மனிதனை அடித்தது போல பலவிதமான வசைகளை சொல்லி உன்னை அடிப்பான். ஆனால் தனுவை அடக்கிக் கொண்டு இருக்க வேண்டும் சற்றும் புதுமை காட்டக்கூடாது .மேலும் இனிமேல் அறிவார் என்றுச் சொல்லி

மனதில் நினைத்து மகிழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு மகிழ்ந்திருக்க கூடிய அந்த நேரத்திலே உன் சக்திகளை எல்லாம் அடக்கிக் கொண்டு பொறுமையாக இரு. நாள் வரும்போது இதன் விளைவை நீ அறிவாய் என்று எண்ணி கனி போல் மகிழ்ந்து இரு கண்ணே! என் கற்பகமே! என்று கூறினார் .

மேலும் கூறுகின்றார் அன்பாய் உன்னை அடுத்திருந்த அதாவது அன்பாக உன்னோடு எப்போதும் அருகிலே இருந்து கொண்டிருந்த ஆதி சாதியாகிய மூலப்பொருள் கண்ட முதல் சாதியாகிய மக்களுக்கு கலியின் உண்மையான தன்மையை உணரச்செய்து மக்கள் தவம் செய்வதற்குரிய வைராக்கியங்களை எல்லாம் கொடுத்து, தன்னை உணரும் வல்லமையை அருளி கொண்டையமுது என்னும் மூப்பு மரணம் இல்லாத நல் உடம்பினராய் அவர்கள் உன்னோடு இருப்பதற்குரிய வழிகளை எல்லாம் கொடுத்து ஏழு மணிக்குள் விடை கொடுத்து அவர்களை பிறவிப் பிணியில் இருந்து விடுபட செய்து அவர்களுக்கு நற்பேறு அருளி உன் அருகிலே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கண்டாய் கண்டாய்வுடன் புதுமை மகனே உனக்கு நற்காலம் ஆகும். யார் யாரெல்லாம் ஆன்ம விழிப்பு பெற்று தன்னுள் இறைவனை காணுகின்ற அந்த நேரம் அது உனக்கு ஏற்ற நற்காலமாகும். அப்போது கோவில் காலும் சிவாலயங்கள் தண்டாயுதலாகனமும் சக்தி மாதிரி இருபுறமும் சூழ்ந்து வரு பண்டோர் காட்சி அதாவது கோயிலில் இறைவன் தெருவீதி வலம் வருகின்ற காட்சி உனக்குள்ளே பண்பாய் காணுது மகனே என்றார். நாம் கோயில்களில் இறைவன் வீற்றிருக்கும் ஆலயமாக நாம் நம் உள்ளத்தை பண்படுத்துகின்றப் போது இறைவன் கோயிலில் இருந்து நடத்தும் அத்தனைச் சிறப்புகளையும் அருள் காட்சிகளையும் நாம் அக கண்ணால் பார்த்து மகிழ முடியும் என்பதை இங்கே எடுத்துக்காட்டுகின்றார். எப்போது நாம் இறைஞானத்தை நம்முள் உணருகின்றோமா அது உனக்கு ஏற்ற காலமகனே என்று அய்யா கூறுகின்றார்.

இறைஞானம் பெற்ற ஆன்மாவுக்குள் காட்சி சிறப்பு கல்யாணம் கவரி வீசிக்கொலுவாரம் சாச்சி கணக்கு முன்வருத்தி சந்திரவர்ண கொடி நிறுத்தி வாச்சி உனக்கு திருநாளும் வாழ்த்த டம்மானம் முழங்க காட்சி உனதுள் உள் காணும் கருணை மகனே கலங்காதே என்று கூறுகின்றார் அதாவது எல்லா விதமான சிறப்புகளையும்

நம் உள்ளே கண்டு கொள்ள முடியும் என்பதை அய்யா நமக்கு எடுத்துக் கூறுகின்றார். சுயநலமின்றி தியாக மனப்பாண்மையோடு வாழும் போது தர்மயுக சிறப்பை அகத்தில் கண்டு கொள்ள முடியும்.

சந்திரவர்ண கொடி என்பது தூய்மையின் அடையாளம். தூய்மையான வெள்ளை உள்ளத்தில் இறைவனை நாம் கண்டு அந்த ஜோதி தரிசனம் பெற்று எல்லா சிறப்புகளையும் கண்டுகொள்ள முடியும். வெள்ளை உள்ளம் கொண்ட நல்ல ஆன்மாக்கள் உன்னை சூழ்ந்து இருக்க நீ ஒரு குடைக்குள் செங்கோல் செலுத்தி அரசாள்வாய் கருணை மகனே கலங்காதே என்று வைகுண்டருக்கு கூறுவது போல் நமக்கு கூறுகின்றார்.

மேலும் இறைஞானத்தை உணர்ந்தவர்கள் ஆகிய நீங்கள் பலவித சிறப்புகளை எல்லாம் பல்லக்கு ஏறி தெரு நடத்தி செல்லப்பதிகள் மிக முகித்து திருநாள் கண்டு மகிழ்ந்து இருப்பாய் மகனே என்றுக் கூறினார். மேலும் வல்லக் கொடிகள் மிக நிறுத்தி வருவாய் நித்தம் வாகனத்தில் பொல்லாக் கலியில் கண்டுடைந்து அழிந்து விடுவான். இந்த கலியுகத்தில் கலியன் கண்காணும் படியாக பல சிறப்புகளை எல்லாம் நடத்தி மக்கள் சிறந்து இருப்பாய். மேலும் புது புது பதிகளை எல்லாம் தோற்றுவித்து திருநாள் நடத்தி மகிழ்ந்திருக்க வேண்டும். மக்கள் ஆன்ம விழிப்பு பெற்று மகிழ்ந்திருப்பார்கள்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும். தினந்தோறும் நீ வாகனத்தில் வருவதை பார்த்து நல்ல உள்ளங்களில் இறைவன் குடிகொண்டு அந்த நல்ல உள்ளங்கள் ஒவ்வொருவராக ஆன்ம விடுதலை பெற்று இறைவனுடைய பாதாரத்தை அடைவதை பார்த்து கலியனானவன் தானாக கண்டுளைந்து நித்தம் நித்தம் அழிந்து கொண்டே இருப்பான் என்றுக் கூறுகின்றார்.

இவ்வாறு அத்தனை சிறப்புகளும் அங்கே நடந்து கொண்டிருக்கும். அவ்வாறு சிறப்புகள் நடந்து கொண்டிருக்கின்ற போது நீ மேலும் மேலும் தர்ம சிறப்புகளைக் கண்டு அகம் மகிழ்வாய். ஆகையால் மனம் பதறி என்னோடு வேதனை கொள்ள வேண்டாம். நான் சொன்ன அந்த சிறப்பு எல்லாம் அந்தந்த தேதியில் உன்னுடைய மனத்துக்குள் தோன்றும். அப்போது நீ அறிந்து கொள்வாய் அப்பனும் நீ தான் ஆனாய் என்று வைகுண்டருடன் அங்கு

கூறுகின்றார். இப்படி வைகுண்டரிடம் சொல்லுவது போல் நம்மிடம் கூறுகின்றார்.

**வினாவிடை:**

1. திருப்பாற்கடலுக்குள் சென்ற வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் கேட்டது யாது?
எப்போது நான் பேறு பெற்று உந்தன் ரத்தின சிம்மாசனத்தில் ஏறுவேன் என்றுக் கேட்டார்.

2. ஆண்டு இரண்டாச்சே மாதம் ஆஇருபதினாலாச்சே வேண்டுதல் இன்னும் காணோம் வெம்புகிறேன் கலியில் மூழ்கி என்று எத்தனை ஆண்டுகாலம் கலியில் மூழ்கியதாக கூறினார்?
60 மாதங்கள்
ஆண்டு இரண்டாச்சே = 2 ஆண்டுகள் 24 மாதங்கள்
ஆ- 8 = 8 மாதங்கள்
இரு பதினான்கு= 14+14 =28
(24+8+14+14=60 மாதங்கள்)

3. நாராயண மூர்த்தியிடம் வைகுண்டர் 60 மாத காலங்கள் நான் தவத்திலிருந்த பிறகும் எந்தவித பேறையும் பெறவில்லையே என்று கேட்டவுடன் நாராயண மூர்த்திக்கூறிய பதில் யாது?
மகனே வேதனை பட வேண்டாம் ஒப்பில்லாத சிங்காசனம் உனக்காக வளருதப்பா என்றுக் கூறினார்.

4. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எப்போது அந்த ஒப்பில்லாத சிங்காசனத்தை அருளுவதாக கூறுகின்றார்?
இந்த உலக மக்கள் அறியும் படியாக கலியை அழித்து கலி நீசனுடைய கருவை அறுத்து உலக மக்கள் காணும் படியாக சிறந்த காட்சிகளை எல்லாம் மிக நடத்தி அதன் பிற்பாடு உனக்கு வைகுண்ட மாமணி பட்டம் அருளுவதாக கூறினார்.

5. கலிநீசன் அய்யா வைகுண்டரை பிடித்து எத்தனை ஆண்டுகள் சிறையில் வைப்பான் என்று நாராயணர் வைகுண்டரிடம் கூறினார்?
மூன்றே முக்கால் மாதம்

6. கலிநீசனுடைய கண்ணுக்கு அய்யா வைகுண்டர் எவ்வாறு காட்சி அளித்தார்?
ஒரு சாதாரண மனிதனாக கட்சி அளித்தார்.

7. நாராயணமூர்த்தி வைகுண்ட இடம் நித்தம் திருநாள் நடத்துவதற்கு கூறிய காரணம் என்ன?
நித்தம் திருநாள் நடத்தி வருகின்றபோதுஎன்னநீசன் தன்னம் தன்னால் அழிந்து மனம் வேதனைப்பட்டு அழிவான் என்பதால் ஆகும்.

நடை

நல்ல மகனே நான்வைத்த விஞ்சையெல்லாம்
எல்லை தனில்வந்து இகனை நடத்துமப்பா
என்னென்ன பவிசு இன்னம் நடக்குமப்பா
உன்னையின்னங் காணார் உலகி லொருமணிக்குக்
கெடுத்தானே யென்று கெடுவார் வெகுகோடி
நடுத்தானம் நம்முடைய நம்மக்கள் குன்றாது
புழுத்துச் சொரிவாய்ப் பூமி தனில்நீயும்
கழுத்துவரை முன்னூன்றிக் கண்ணுந் தெரியாமல்
ஆவி யலுகாமல் ஆடையொன் றில்லாமல்
பாவிப் பயல்கள் பரிகாசஞ் செய்யவென்று
கிடப்பாய்த் தெருவில் கிழவன்வேச மெடுத்துத்
துடைப்பார்கள் நம்மினத்தோர் தூக்குவார் நம்மினத்தோர்
சாணாச் சுவாமி சாவாறு ஆகுதென்று
வீணாக நீசரெல்லாம் வெகுளியாய்த் தானகைப்பார்
பெண்சிலரைக் கட்டிப் பெரும்புவியோ ரறிய
மண்சீமை யோரறிய மங்கையொடு சண்டையிட்டுத்
தெருவிற் கரையேறித் தேவியரைத் தான்கூட்டி
கருவி லுருத்திரண்டு கண்ணாளர் தாம்பிறந்து
சீமை நருளறியத் தேசந் தனிலாண்டு
தாண்மை பொறுதியுடன் சாணார் விருந்தழைத்து
மனுக்கள் முறைபோல் வாழ்வாய்ப் புவிமீதில்
தனுக்க ளுனக்குள்ளே சர்வது மேயடங்கும்
எல்லா மடக்கி யானுன் னிடமிருந்து
நல்லானே யுனக்கு நாட்டில் சிறப்புமெத்தக்
காணு மகனே கலிநீசன் கண்ணுமுன்னே

ஆணும் பெண்ணோடும் அன்புற்றி ருக்கையிலே
நல்ல திருவாளி நற்பட்டு வாகனத்தில்
செல்லத் திருவோடும் செம்பவள மாலையுடன்
வாகனத் தேரும் வருமா ஞாலத்திருந்து
கோகனக மாலே குணமாக வேகூடிக்
காணுவோர் காண்பார் காணாதார் வீணாவார்
தாணுவே நீயொருவன் தானாக ஆண்டிருப்பாய்
இன்னம் பவிசு எண்ணத் தொலைந்திடுமோ
வன்ன மகனே வாறதெல்லாங் கண்டிருநீ
பதறாதே போயிருநீ பாரத் தவசியிலே
குதறாதே போயிருநீ கூண்டத் தவசியிலே
வாறநீ சன்தனக்கு மலங்காதே நின்றுகொள்ளு
போறநீ சன்தனக்கு பொறுமையாய் நின்றுகொள்ளு
என்று மகன்தனையும் எழுந்திருந்து போநீயென
மன்று தனையளந்தோர் மகனைக் கடல்கடத்திக்
கரையிலே கொண்டு கண்ண ருடனுறைந்தார்
பிதாவை யனுப்பிப் பெரியவை குண்டப்பொருள்
விதானித்து உச்சரித்து வேதவுல் லாசமிட்டுத்
தெச்சணா பூமி சென்று தவத்ததிலே
உச்சரித்து நாதன் உகந்து நடக்கலுற்றார்
நடந்தாரே தெச்சணத்தில் நல்ல முனியுடனே
படந்தார மாயன் பண்டு தவமிருந்த
தலத்திலே வந்து சுவாமி தவமிருந்தார்
சொல்லத் தொலையா காட்சியொடு
சுவாமி மிக இருந்தார்.

விளக்கம்:
மகனே நான் கூறிய விஞ்சை உபதேசத்தின்படி நீ நடந்து வருவாயேயானால் நீ என்ன என்ன சிறப்புகளை பெற வேண்டும் என்று நினைக்கின்றாயோ அதன்படி உன்னுடைய வாழ்வானது அமையும். நான் உனக்கு கூறியிருக்கிற ஞான உபதேசமானது எல்லை தனில் வந்து இகனை நடத்தும் அப்பா, அதாவது அந்தந்த நேரங்களில் எல்லா சிறப்புகளும் வந்து உன்னை சிறப்பிக்கும் இதை நீ அறிந்து கொள்வாய் அப்பா என்றுக் கூறுகின்றார். மேலும் பல சிறப்புகள் இன்னும் பல நடக்க இருக்கின்றது. உன்னை அறியாத நான் சொன்ன உபதேசத்தை பின்பற்றாத மக்கள் இந்த உலகில் சில காலத்திற்குள் எல்லாம் கெட்டுவிட்டது என்று

அழிந்து போவார்கள் . ஆனால் அய்யா சொன்ன அந்த நூல் முறைப்படி வாழ்ந்த நல்ல குல சான்றோர் மக்கள் என்றும் சிறப்போடு வாழ்வார்கள்.

அது மட்டுமல்ல இந்த கலி உலகில் மக்கள் முன்னிலையில் நீ பல துன்பங்களை அனுபவிப்பாய். அப்போது சான்றோர் குல மக்கள் உன்னை ஏற்று எடுத்து உனக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்வார்கள். உன் துன்ப துயரங்கள் தீருகின்றது வரையிலும் உன்னோடு இருப்பார்கள். ஆனால் நீசக் குலங்கள் எல்லாம் சாணான் சுவாமிக்கு சாவு வந்துவிட்டது என்று வீணாகப் பேசி நகைத்து அழிவைத் தேடிக்கொள்வார்கள். மேலும் மனுச் சொரூபம் எடுத்து மக்களுக்கு ஆன்ம ஞானம் பெற வழிகாட்டுவதற்காக அவதாரம் எடுத்திருப்பதால் கலியுகத்தில் நான் சொன்ன விஞ்சை உபதேசத்தின் படி மக்கள் வாழ வழிகாட்ட வேண்டும்.

சான்றோர் மக்களைப் பெற்றெடுத்த சப்தமாதர்களையும் மாலையிட்டு அதாவது உன்னோடு ஐக்கியப் படுத்தி இந்த உலகம் தான் அறியும் படியாக மங்கையர்களோடு வாழ்ந்து வருவாய். அப்போது மானிட வாழ்வில் எவ்வாறு கருத்து வேற்றுமை உருவாகுமோ அது போல அவர்களோடு சண்டையிட்டு தெருவில் கரையேறி தேவியரை தான் கூட்டி கருவில் உரு திரண்டு கண்ணாளர் தான் பிறந்து உலக மக்கள் எல்லோரும் அறியும் படி இந்த தேசத்தை நீ ஆண்டிருப்பாய். அப்படி ஆண்டிருக்கின்ற போது அந்த சான்றோர் குல மக்கள் உன்னை வந்து அழைத்து உனக்கு விருந்து வகைகளை எல்லாம் செய்து மனு முறை போல் உள்ள வாழ்வை வாழ்வாய். அப்போது உனக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கின்றச் சான்றோர் மக்கள் பிறவி என்ற பிணியில் இருந்து விடுப்பட்டு உனக்குள்ளே ஐக்கியமாகி விடுவார்கள்.

அதாவது ஜீவாத்மாக்கள் எல்லாம் பரம்பொருளாகிய வைகுண்டத்திற்குள் அடங்கிவிடும் மகனே என்றுக் கூறுகின்றார். மேலும் எல்லாம் அடக்கி யான் உன்னிடமே இருந்து நல்லோனே உனக்கு நாட்டில் சிறப்பு அதிகம் தோன்றுவதற்குரிய வழிவகைகளை எல்லாம் செய்வேன். அவ்வாறு நான் செய்கின்றபோது கண் கொள்ளா எல்லா சிறப்புகளும் உனக்கு கிடைக்கும் மகனே. அவ்வாறு எல்லா சிறப்புகளோடும் வாழ்வதை

பார்த்து கலி நீசர்கள் எல்லாம் மனம் வெதும்பி அழிந்து போவார்கள். ஆண் பெண் உடனே அதிக சிறப்புகளோடு அன்புற்று இருக்கையிலே நல்ல திருவாளி நற்பட்டு வாகனத்தில்செல்லத் திருவோடும் செம்பவள மாலையுடன்வாகனத் தேரும் வருமா ஞாலத்திருந்து கோகனக மாலே குணமாக வேகூடிக் கண்கொள்ளாக் காட்சியுடன் சீரும் சிறப்புமாக தெருவீதி வலம் வந்து நித்தம் திருநாள் நீ நடத்தி பல சிறப்புகளை பெற்றிருப்பார்.

அப்போது காணுவோர் காண்பார் காணாதார் வீணாவார். உன்னை அறிந்து உன்னோடு சேர்ந்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் பேறு பெறுவார்கள். அப்படி பல சிறப்புகளைச் செய்து வருகின்ற போது உன்னை நாடி வந்து அந்த சிறப்புகளில் கலந்துகொண்டு இருந்த மக்கள் உன்னை அடைந்து கொள்வார்கள். ஆனால் அதை வீணென்று ஏசி துன்பப்படுத்தியவர்களும், மக்களுக்கு நன்மை செய்கின்ற போது தடுத்து அந்த சிறப்புகளை செய்ய விடாத வண்ணம் அங்கு செயல் புரிந்தவர்கள் அத்தனை பேரும் அழிந்து போவார்கள்.

மகனே கலி நீசன் கண் காணும் படியாக நீ ஒருவன் மட்டும் தானாக இந்த உலகம் ஆண்டிருப்பாய். அப்படி பல பவுசுகளை நான் உனக்கு தந்திருக்கின்றேன். இந்த பவுசுகள் எத்தனை என்று எண்ணிக்கையில் அடங்காது. வன்ன மகனே வருகின்ற சிறப்புகள் எல்லாம் நீ பார்த்து இருப்பாய் மகனே. பதறாதே போயிருநீ பாரத் தவசியிலே குதறாதே போயிருநீ கூண்டத் தவசியிலே ,வாறநீ சன்தனக்கு மலங்காதே நின்றுகொள்ளு, போறநீ சன்தனக்கு பொறுமையாய் நின்றுகொள்ளு அவனிடம் எந்தவிதமான அற்புதத்தையும் காட்டக் கூடாது. அந்த நீசனிடம் நீ பொறுமையாக இருக்க வேண்டும்.

அவ்வாறு நீசன் உன்னை துன்பப்படுத்துகின்ற போது நீ பொறுமையாக நின்று கொள்ள வேண்டும் என்றுக் கூறி நாராயண நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் தெட்சணம் செல்வதற்கு விடை கொடுக்குகின்றார் அவ்வாறு விடை கொடுத்து மகனை கடல் கடத்தி கரையிலே கொண்டு வந்து தெட்சணம் செல்வதற்கு விடை கொடுக்குகின்றப்போது, தந்தையாகிய நாராயணமூர்த்தியினுடைய பாதத்தில் பணிந்து தாங்கள் எனக்கு

தெட்சணம் செல்வதற்கு விடைத்தாருங்கள் என்று விடை வேண்டிய வைகுண்டர் கலைமுனி ஞான முனியென்ற இரு முனைமார்களோடு வந்து தெட்சணத்தில் வந்து தவம் இருந்தார்.

**வினாவிடை:**

1. முப்பொருளும் ஒருவராய் வைகுண்டார் வந்திருக்கின்ற போது தந்தையாகிய நாராயண மூர்த்தியிடம் அவர் ஒவ்வொரு கேள்விகளையும் கேட்பதற்குரிய காரணம் என்ன?
   வைகுண்டருக்குள் அனைத்து சக்தியும் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் அவர் உலக மக்கள் காணும்படியாக ஒரு சாதாரண மனிதனைப் போல அவதாரம் எடுத்திருக்கின்ற காரணத்தினால் ஒரு சாதாரண மனிதன் துன்பங்கள் துயரங்கள் வருகின்ற போது எப்படி முறையிட வேண்டும் என்பதை யாரிடம் முறையிட வேண்டும் என்பதை உலக மக்கள் அறியும் படியாக செய்வதற்காக தானே தந்தையிடம் உரையாடுவது போல் ஒரு காட்சி இங்கே நமக்கு செயல்படுத்துகின்றார்.

2. மனுக்கள் முறை போல வாழ்வாய் புவிதனிலே யார் யாரிடம் கூறியது? நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் கூறியது.

3. “தனுக்கள் உனக்குள்ளே சர்வதுமே அடங்கும்” இவ்வாக்கியம் உணர்த்தும் செய்தி யாது?
   வைகுண்டம் என்கின்ற பரம்பொருள் எல்லோர் உள்ளிலும் இருக்கின்றார்
   என்பதை உணர்த்துகிறது.

4. வைகுண்டருக்கு விஞ்சை கொடுத்து அனுப்பிய பிறகு நாராயணமூர்த்தி எங்கு வந்து இருக்க சொன்னார்?
   பண்டு தவம் இருந்த தளத்தில் தலமாகிய சுவாமி தோப்பில் வந்து இருக்க சொன்னார்.

***************************

# அருள் நூல்

# பஞ்சதேவர் உற்பத்தி

**காப்பு**

**விருத்தம்**

சீரணிகொன்றை சூடும் சிவனுடைய பாதம்போற்றி
நாரணர் மனுப்போலிந்த நகா;க்கலியுகத்தில் வந்து
போரணிமனுக்கள் யாவும் பேணியோர் தலத்துள்ளாகி
காரணமகிமை காட்டிக் கருத்துள்ளம் தற்காத்தாரன்றே

பொறுதியாய்த் தர்மநீதி புலனுள்ள மனுக்கள்யாவும்

நன்மையாய்த்தென்னாளும் நமதுசொற்படி போல்வாழ
தின்மைகள் பலதும்செய்யும் திருடரைக் கருவாய் செய்ய
செம்மையாய் நமக்குள்ளைந்து சீவாயி வேண்டுமென்றார்

என்றவர்நினைத்தபோது ஈஸ்வரனார் மகிழ்ந்துமுன்னாள்
தண்டமிழ்ப் பதத்தாலிந்த தாட்டிக வீரரான
மன்றமிழ் சுடலைநாதன் மாநிலம் காத்தவீரன்
என்றிவர்முதலாய் ஐந்துவீரர்கள்இசைவால்வந்தார்

வந்திடும் பேரைக்கண்டு மாயவர் மனதுள்மெச்சி
புந்தியில் மகிழ்ச்சி கூர்ந்து புதுவரம் அவர்க்க ஈந்து
மந்திரித்தலைவா யெந்தன் மக்களே பாpசையேந்தும்
தந்திரத் தோழன்மாரே சாற்றுவழி கேளென்றார்

மொழியிது வென்று நாமம்உலகினில் மறவார்நம்மை
தெளிவுடன்பார்த்தேன் நாளும்திறமாய்க் காக்கவேணும்
பழிகொலை களவுபேயாட்டம் பழநீசக்குலங்கள் தன்னை
குளிர்சுளிர் நோயைத்தாக்கி கொன்றிடு உலகில்தானே

வேறு

சிவனே சிவஞானத் தேசிகனே
தேவர் தேவர்க்கும்தாயகமே
தவமே தவஞான தவக்கொழுந்தே
சர்வதயாபர சங்கரனே

சங்கம் நிறைந்தருள்தற்பரனே
தமியேன் உனதுட வருளாலிந்த
மங்கைபதிநாட்டில் தாமரையூர்
வளரும் தவம்செய்யும் மாயன் கைக்குள்

ஏவல் சீவாயிமாரெனவும்
ஏகனருள் கொண்ட ஒழுங்குடனே
காவல்காரராய் வரங்கள் வேண்டிக்
கருடரெனப்போர் தழைக்தோங்க

மூவுலோகம் தளைத்தோங்க
முதலோன் மகவெனகீர்த்திபெற்ற
காவபுகழ்கொண்ட கருடராசன்
கதைப்பாடத் திருமால் காப்பாம்

அண்ணன் தம்பியோடைந்து பேரும்
அருளால் சிவவேடமுந்தாþத்து
ஒண்ணு போலொரு சொல்லதுவாய்
உடைய அன்பவரைத் திறமாய்க்காக்க

வண்டத்தனம் பேசும்வன்பர்களே
வாணன் வதைத்திந்த கலியுகத்தில்
கொண்டே யிருட்கலி தனையறுத்து
கூண்டபதிக்கோட்டைக் கொத்தளமும்

துலங்கா பதிகளும் துலங்கவைத்துத்
தொணும் சிவாலயம் காத்தாண்டு
பெருமைமிகு ஆடை பால்பழமும்
பொþய மணிமேடை அம்பலமும்

நன்மை பலதான வரிசையுடன்
நாரணர் சட்டம் மீறாமலே
ஒழுங்காய் உலகினில் ஒருசொல்லாக
உண்மை பலசெய்தாரதை

முழுதும் காவியமாய் படிப்வர்க்கு
முதலோன் அருள்தந்து முன்நிற்கவே
கருரெனும் வீரர் கருடராசன்
கடியகமண்டல சிமளராசன்

துட்டரெனும்வீரர்; தேர்த்தகனும்
குட்டிவீரனும் தேர்க்குடையோன்
அன்பர்க்கனுகூல மாவீரன்
அஞ்சுபேர்க்கதை அன்பாய்கூற

வாரபிழையொன்றும் வாராமலே

வாயில்வந்திங்கே வகுத்துரைப்பார்
சீராய்ச் சரவணம் மேல்துயிலும்
செந்தில் வேற்குரு கந்தப்பரே

கந்தக்கருங்குhல் தெய்வமாது
கன்னி யீஸ்வரி சரசுவதியே
சிந்தை மகிழ்ந்திருந்த செந்தமிழுக்;கு
தெய்வமடவாரும் காப்பாமே

விருத்தம்

ஆதியாம் கடவுளான அச்சுதன்பச்சைமாலும்
சாதிகள் தமக்குவேண்டிச் சந்தனச் செந்தூர்தன்னில்
வாரிமயில்மனுவாய்த்தோன்றி வளா;கன்னி நகாpல்மாயன்
நீதியைமனதிலெண்ணி நெடியவன் வருகவென்றே

வருகிறபோதே மாயன்மனமது மகிழ்ந்துகொண்டு
கருதியேயீசர் தம்மைக்கட்டுடன் வணங்கிச்செல்வார்
சுருதியாய் நமதுகைக்குள் சீவாயியேவலாக
பருதிபோல் ஐந்துவீரர்படைத்துநீர் அனுப்புமென்றார்

அனுப்புமென்றிந்த மாலுரைகேட்க
ஐயன் மெத்த மனம்மகிழ்ந்து
என்னமாய்ச் செய்து அனுப்பமாலோனே
நீகேட்ட சட்டமாயிக வீரர்கள் யாரென்ன
சன்னபின்னம் போலுள்ள வீரர்கள்
தர்மபுரி நன்மைக்குமாதே

என்னமாயிது நான்செய்வதெப்படி
என்றுயென்மனம் யெண்ணுதே மாலோனே
ஆடுகோழி யிலைப்பட்டை தீபங்கள்
ஆகாதென்றல்லோ ஆகமம் பூரித்தீர்
நாடுமட்டும் அடக்கி உண்டிடும்
நல்லவீரர்கள் சம்மதிப்பார்களோ

கடியசேவகன் கயிலையில் பையனும்
அக்கினியேறி மாயப்பலவேசம்

அத்திவாக்கனும் காத்தவராயனும்
அந்துபேருமே தீர்க்கமுள்ளவர்
தீர்க்கமுள்ளவர்கள் ஐந்துபேர்கள்தான்
தேசத்திலும்பல வேசங்கள்கொண்டவர்

கோலமாம்பல தூலங்கள் கற்றவர்
சொல்லும்மாயங்கள் யிங்கவர் கண்டிடும்
மார்க்கமாகவே நாலுவேதத்திலும்
மாறாட்டியே வெகுபூசையுண்டவர்
பன்றிகோழி பலிபல தானதும்
பார்த்துச்செய்வோரை காத்துக்கொள்ளுவார்

அன்றிநித்தம் அவரை தொழாது
அதட்டுவோரை உருட்டியே கொல்லுவார்
மூடும்கண்கள் விழிப்பதற்குள்ளாக
உலகம்ஈரேழும் உலாவித்திரிபவர்
வாசமான வடவா முகத்திலே
வன்னிசெந்தழல் ஆவிகுளிப்பவர்

தேசமெங்கு மவரல்லால் வேறில்லை
கொல்லும் வரிசைக்க வாள்வல்லவர்
வேசமானால் பலது கொண்டாடுவார்
வெற்றிவீரர் வெகுபுத்திக் காரராம்
ஆனதாலவர் அருகில்வந்தாக்கால்
அட்டதுட்டிக்கு இடமல்லோ ஆக்குவார்

ஈனம்சற்றும் இரக்கம் கிடையாது
ஏற்றமாலோனே யோதுதான்சொல்கிறீர்
ஆகுமோ அந்த பேர்களமக்கென்றார்
ஐந்துபேரையுமிங்கே அழைக்கிறேன்
பாகுசெநரிந்தஈசர் உரைத்திட
பண்டுமாலும் பகுத்துரை செய்வார்

நல்லமாமறை மைத்துணரானவர்
நாட்டிலிப்படி கோட்டிகளாக்கிடில்
செல்வமாகிய தெச்சணம் மீதினில்
சென்றுநான்தவன் செய்துநிறைவேற்றி

அன்பரானமனுக்கள் தெரிந்துநான்
அரசேயாள வரம்பெற்றதெப்படி

இந்தமாஞாலா பேர்களிருந்தக்கால்
எந்தஞாயமாய் நான்தவம் செய்குவேன்
சீமையெங்கும் அநியாயம் கண்டதால்
சொல்லுமுபாயம் இறைகூடி கண்டமும்
வன்மையாக நிறுத்தியே தா;மமாய்
மக்கள்தன்னையும் வைத்தாள வென்றுதான்

பேய்கள் செய்யும் கொடுமை அகற்றியே
பலிகள் தீபஒலிகளடக்கியே
ஞாயமாக நான் சீமையாளவும்
நாரணர்சுவாமி வைகுண்டமாகவும்
தேசமாகிய தெச்சணமீதினில்
செல்வச் சான்றோரிடமே பிறந்துநான்

வாசமானபுமை நடத்தவே
மாயனேமிதம் கொண்டிருக்கவே
திட்டமாயிந்ததுட்டவீராþன்
செய்திகேட்ட சிணப்பொழுதன்
வட்டமாகிய நெஞ்சம் குளிருதுமனம்
வாழ்கயிலைக் கதியதியாக

சூழஇந்தத் துடிவீரர் தங்களை
சூச்சமாகச் சுருக்காய் அழைத்துநீர்
முன்னிருந்த வரத்தின் முறைமையை
உபாயமாக அடக்கி மறுவரம்
பின்னும் தங்கப் பிறவியாக்கிப்
பேரும்மாற்றி புதுவர மீந்துநீர்
எந்தனோடு இதமா அனுப்பினால்
ஏற்றகாரியம் பார்த்து முடிப்பேன்நான்
சிந்தையது செய்யாதே பானாக்கால்
தெச்சனாபுரி சென்றேறப் போகாது
என்று மாயோனிதுவுரை கூறிட
இருந்தபேர்களும் உள்ளதென் றார்களே

விருத்தம்

ஆயனார் உரைத்தபோது அரனுமே மனதுமெச்சி
உபாயமாய் வீரர்தம்மை வரவழைத் திங்கேகொண்டு
ஞாயமாய்ப் பிறவிசெய்து நாரணர் கைக்குள்ளாகக்
நோயமாய் மனதிலலெண்ணி நினைத்தனர் ஈசர்தானும்

நடை

அட்டதிசையெங்கும் கீர்த்திபெற்ற அஞ்சுபேரையும் இங்கழைக்க
அருமையானஇங்கழைத்து உரிமையாக இப்போது
மெட்டித்தனமாக முன்னீந்த வரம் வேண்டி
மேலுந் தா;மாரிக்கு ஏற்றவிடை ஈயவென்று
மாலுரைத்தமொழி தவறாவண்ணம் செய்யவென்று
மனமகிழ்ந்து தானும்வெகு உபாயம் எடுத்தார்

மேலும், கந்தசாமி யவர்க்கு மாசியெட்டாந்திருநாள்
மேனமைதனைப் பார்ப்பதற்கு நாமும் போவென்றே
போகவேணுமென்றுசொல்லி பொக்கணங்களிட்டு
பொாpயபுலித் தோலுடனே வரிவேலை யுமெடுத்தார்
கையில் மழுசூலம் காப்பறைகளேந்தி
கண்டந்தனில் பண்டமாலை கொண்டுபூண்டு சென்றார்

மெய்யில் வெண்ணீறணித்து உத்தராட்சம்பூண்டு
மேன்மைபொற்கரத்தில் செம்புமுந்திரிதூக்கி
தாவடமும்மேவிடத்தில் தாவண்ட சங்காரன்
சண்முகம் திருநாள்வேளைதன்னில் போவென்றே
கோவிடத்தில் வாழுகின்ற குருவசிட்டரானார்
கூண்டபல தேவர்களும் கொடியாகச்சூழ
பூவுலகில் உள்ளதேவர் போதவந்துசூழ

பேய்பிடாரி பூதகணம் புட்டாரக்காளி
நாவுலகில் உள்ளதே நான்முகனும்சூழ
நாட்டில்வரம்பெற்ற வெகுதாட்டிமையோர்
ஏவல்பொாpயோர் களெல்லாம் யீசுரரைப்போற்ற
ரிடபவாகனமேறி யீசர்சென்றாரங்கே
செல்லும்வேளை கந்தனுக்கு தீபரணைகாட்டி

தேருவடந்தனைப்பிடித்துத் தெருவீதிவந்தார்
வந்ததேர் உச்சிதனில் மாயனிருந்தாண்டார்
மகாமேரு போறைந்து வாசமாக்கொண்டார்
எந்தபேரும் வந்திழுத்து சந்துபொந்துபோக
எட்டுதிசைதோறும் கிடாய்வெட்டிப் பலியிட்டார்
இட்டகிடா ரெத்தமெல்லாம் துட்டவீரருண்டு
இனும்போதாதென்றுபலி பின்னுங்கொள்ளைகொண்டார்

முட்டடங்கா கயிலைபையன் மாயன்மகாலிங்கம்
வாழும் பலவேசக் கயிலாசவீரனோடு
சட்டமாக இட்டபலி உண்டுத்தேரைத்தொட்டு
தங்களாலே ஆகாதென்று சங்கடங்கள் கொண்டார்
வட்டமிட்டவீரருட பொட்டுமிகப்போச்சு
வாரமுள்ளவீரமெல்லாம் சொரம்போச்சுதங்கே

என்னகேடு ஆச்சுதென்று யேங்கி அஞ்சுபேரும்
ஏழையான பத்திரமாகாளியிடம் சொல்வோம்
பொன்னழகி எங்களையும் பெற்றவளேயம்மா
புட்டாரநாயகியே கட்டழியம்மா
இத்தனைநாள் யெங்களாலே யோலாதொன்றுமில்லை
ஏழுகடல்தாண்டி யுலகாண்டிருந்தோம் அம்மா

முத்திபெறும் அக்கினித்தூண்முழுவதும் கையிலெடுத்தோம்
மூன்றுலோகம் சுற்றிபின்னும் மீண்டுகொண்டு வந்தோம்
வெள்ளிமலை மீதிலுறை அரசனுடையமகளே
அஞ்சிரண்டு மாசத்திலே பிஞ்சியீரல் உண்டோம்
மாடனருள் அண்ணாவி மாமலையில்சென்று
மாய்மாலமாய்மாய மந்திரத்தைப் பொய்த்தோம்

சுட்டுசுருக்கான பலதுட்டமா கணத்தை
கண்ணில்காணாமலரைக் காற்றாய் பறக்க வைத்தோம்
பூமிகயிலாசம்வரை எங்கள் பேரல்லால்
பின்னுமொரு துட்டவீரர் கண்ணில்காணோமம்மா
மாயனுக்கும் ஆயனுக்கும் மாமறைக்கும் தாங்கள்
மற்றும்பல தேவதைக்கும் யேற்றுக்கொண்டோம்

அம்மா பேருலகில் சொல்லாமல்; பேர்மாறி நிற்போம்
அம்மாவுந்தனக்கு நாங்கள் அடிமையானதல்லால்
ஆருமெங்கள் தனைவெல்லும் பேர்களில்லை அம்மா
இப்படியே பெருவரங்கள் ஈசரன்று தந்தார்
என்னமாயமோ வறியோம் இப்போவந்த கூத்து
தப்பாமல் வந்தெமக்குத் தற்காக்கவேணும்
சந்தனந்தான் தேர்நின்று தெந்தனங்களோடும்
தெருவோட்டி வைப்பதற்குச் சீர்செய்யவேணும்
தேன்மொழியே பத்திரமா காளியெனத்தொழுதார்

விருத்தம்

கொழுதோர் வீரர்தம்மைத் தோகை மாகாளிபார்த்து
பாழாகும் இந்தசீமைப் பாதகக் கொடுமையாலே
அழியவும்நாள்வந்தாச்சு அண்ணரும் பிறந்துமாச்சு
வழியதேய்தற்கு யானும்வகுத்துரை செய்யவேனென்றாள்
காலமும்கடைநாள் ஆச்சுக்கலியுகம் அழியப்போகு
ஏலவேகொடுத்ததெல்லா மித்துடன் பிறக்கலாச்சு
மாலவன் தவசதாக மாசிறை யிருக்கலாச்சு
ஞாலமேயிதற்கு வேறுநானென்ன செய்வேனென்றாள்

நடை

கட்டுடனே உங்களுக்குக் காரணங்களின்னதென்று
காரியமாய் சொல்லுகின்றேன் கேளீர்
மட்டடங்கா கலிவந்து பிறந்ததன்றுமுதல்
மான வரம்பில்லை யப்பாகண்டீர்
ஈனமுள்ளதேவருக்கும் ஈசர்பிறமாதனக்கும்
ஏற்கநடப்பொன்றில்லை கண்டீர்

மானமுறை நீதியில்லை வழக்குசாயலுடனே
வம்புசெய்யும் பேர்கள் தினம் கூட்டம்
ஐயமிறைக்கூலி தெண்டம்
அட்டிஅநியாயம் மெத்த
ஆண்களைத் தீண்டி வேலைகொள்வார்
மானமாகவாழும் எளியோர்கள் சொத்தையெல்லாம்
வாரிவம்பர் சேரக்கைக் கொள்ளை கொள்வார்

ஏழைமதியாகப் பேசும் இல்லாதெளியோரை
எங்கேயென்று தேடி அடிப்பாரே
இப்படி கலியருக்கு தானதால் யென்னால் என்ன ஆகுங்கண்டீர்
வைகுண்டாrpடம் போங்கோ வலதுபக்கம் வாழ்வீர்கள்

விருத்தம்

எட்டெட்டு அறுபத்தி னாலுவைகுண்டமாச்சு
பட்டுபட்டுழன்று கலிதன்னால்சாகும்
மட்டுப்படமூன்று பத்திரண்டு அதுவும் திராசியாச்சே
கட்டடங்காப் பதினாறும் அவர்க்குள்ளே ஆச்சு

விளக்கம்:

சுடலை நாதன், மாயப்பலவேசம், காத்தவராயன், அக்னியேறி, அத்திவாக்கன் ஆகிய ஐந்து பேரும் சிவனிடம் வரம் பெற்ற துஷ்ட தெய்வங்கள். இவர்களை அப்படியே விட்டால் அய்யா வைகுண்ட மாபொருளின் கலி அழிக்கும் நோக்கத்திற்கு இடையூறாக இருப்பார்கள். எனவேதான் அவர்களுக்கு மாற்றி உருகொடுத்து சத்வகுண தெய்வங்களாக்கி தன்னுடைய வலது பக்கம் மேடை அம்பலம் அமைத்து அதில் இருந்தவாறு தன் மக்களுக்கு உதவும் வகையில் அவர்களை தன் ஏவல் சிவாய்காளாக்கிய நிகழ்வை பஞ்ச தேவர் உற்பத்தி பக்தர்களுக்கு சொல்லுகிறது.

அழகிய கொன்றை மலர்களை சூடும் சிவன் திருவடிகளை போற்றி நாராயணரே நல்ல வைகுண்டராய் மனுவை சோதித் தெடுக்க மனநிறம் காட்டி தெட்சணம் எழுந்தருளி மேன்மை மிக்க சான்றோர்களை பேணி ஒரு தலத்துள்ளாக்கிய பிரம்ம வைகுண்டரின் திருவடிகளை பணிகிறேன்.

பொறுமை என்னும் ஆயுதத்தால் தர்ம நீதியை நிலைப் படுத்தி ஆள்வதற்கும், தர்மத்திற்கு எதிராக உள்ள கலி நீசர்களை அழிக்க செம்மையாய் நமது கைக்குள் வந்து பணிபுரிய ஐந்து சிவாயி வேணும் என்று சிவனிடம் கேட்டார் வைகுண்டர்.

ஏவல் பணி செய்வதற்கு சிவாயிகள் வேண்டும் என்று அவர் கேட்டபோது சிவபெருமான் மகிழ்ந்து மேற்படி ஐந்து வீரர்களையும்

வருக என நினைத்தார். உடனே அவர்கள் ஐந்து பேரும் வந்து இசைவாக சிவபெருமானிடம் வந்து நின்றனர். உடனே சிவபெருமான் மகிழ்ந்து அவர்களுக்கு புது பிறவியும் புதுவரமும் ஈந்து நான் தரும் பரிசை ஏற்றுக் கொண்டு நான் சொல்கிறபடி சேவை செய்யுங்கள் என்றார்.

உலகினில் எந்தன் நாமம் மறவாமல் தம்மை தெளிவுடன் பார்த்து என்நாளும் திறமாக காக்க வேண்டும். கொலை கொள்ளை என பேயாட்டம் போடும் கலிநீச குலங்கள் தம்மை குளிர்களிர் நோயை தாக்கி கொன்றிடுங்கள். இப்படி வரங்கள் வேண்டி இசை உள்ள வரிசை பெற்று முன்னுள்ள குணங்களை எல்லாம் நீங்கள் விட்டு ஞானம் உடையவர்களாக வெற்றிலை, பாக்கு, கனிக்குலை, பிச்சிப்பூ, குலுங்கா விடலைகளும் உப்பில்லா பால் அன்னம் இவற்றை நிறைவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்ற வீரர் கதைக்கு மால் காப்பதாமே.

சிவனே சிவஞான தேசிகனே! தேவர்களுக்கெல்லாம் நாயகமே! தவமே! தவக்கொளுந்தே! சர்வதயாபர சங்கரனே! சங்கம் நிறைந்த அருள் தற்பரனே! தமியின் உனது உடைய அருளால் இந்த தென்குமரி நன்னாட்டில் தாமரையூர் பதியில் தவம் செய்யும் மாயன் கைக்குள் ஏவல் சிவாயிமாரனெ ஏகமருள் கொண்ட ஒழுங்குடன் கருடன் என் பெயர் தழைத்தோங்க காவல் தெய்வமாக பணிபுரியும் அண்ணன் தம்பி ஐந்து பேரும் சிவ வேடமும் தரித்து நல்ல அன்பரை திறமாக காத்தும், வண்டத்தனம் பேசும் அன்பரை வதைத்தும் இருள் கலிதனை அறுத்து, துலங்கா பதிகளும் துலங்க வைத்து பொறுமையுடன் அகில் வாடை பால் பழமும் பெரிய பணி மேடை அம்பலமும் நன்மை பலதான வரிசையுடன் நாராயணர் சட்டம் மீறாமல் நல்ல அன்பர்களுக்கு அனுகூலமாக வீரர் ஐந்து பேர் கதை பாட நான் பாட செந்தமிழ்க்குதவுவாயே.

ஆதி பரம்பொருள் நாராயணரே! ஆதி ஜாதி சான்றோர்களை காப்பதற்காக திருச்செந்தூர் பாற்கடலில் ஆனந்தகோடி சூரிய பிரகாச சுத்த வைகுண்டமாய் தோன்றி மனுவை சோதித்து எடுக்க மனுநிறம் காட்டி தென்குமரி நன்னாட்டில் எழுந்தருளி தர்ம நீதியை நிலைப்படுத்த எண்ணியவரான வைகுண்டர் சிவபெருமானை ஈஸ்வரரே வருக என அழைத்தார். சிவபெருமான் வந்தது மாயன் மனம் மகிழ்ந்து அவரை வணங்கி நமது கைக்குள்

ஏவல் சிவாயியாக பருதி போல் ஐந்து வீரர் படைத்து தாங்கள் அனுப்ப வேண்டும் என்று சிவப்பெருமானிடம் கேட்டார் வைகுண்டர்.

இதை கேட்ட ஈசர் என்னவாம் செய்து அனுப்ப மாலோனே! நீ கேட்ட ஐந்து வீரர்களும் தர்மபுரி நன்மைக்கு ஆகாதவர்கள் ஆயிற்றே என்றார்.

காரணம் கலியழியும் வரை ஆடு, கோழி, இலைப்பட்டை, தீபங்கள் ஆகாது என்று அல்லவோ ஆகமுகம் போதித்தீர். நாட்டில் உள்ள உயர் பிராணிகள் அனைத்தையும் விரும்பி உண்டிடும் வீரர்கள் இதற்கு உடன்பட மாட்டார்களே! என்றார் சிவபெருமான்.

கடிய சேவகன், கயிலை பையனும், அக்கினி ஏறி, மாயப்பலவேசம், அத்திவாக்கன், காத்தவராயன் ஐந்து பேருமே தீர்க்கமுள்ளவர்கள். தேசத்தில் பல வேசங்கள் கொண்டவர்கள். பல வேடங்கள் எடுக்கும் வித்தை கற்றவர். வேண்டாதவரைக் கொல்லும் மாயங்கள் தெரிந்தவர். நான்கு வேதங்களிலும் மாறாட்டம் செய்து அசைவம் உண்பவர். பன்றி, கோழி, பலி பலதானதும் பார்த்து செய்வோரைரை காத்துக் கொள்பவர். அவ்வித மின்றி அவரைத் தொழாத பேர்களை அதற்றி விரட்டியே கொன்றிடுவார். மூடிய கண்ணு முழிப் பதற்குள்ளாகவே உலகம் ஈரேழும் உலாவி திரிபவர். வடவா முகத்தில் அக்கினி செந்தழல் ஆவி குளிப்பவர். தேசமெங்கும் அவரது ஆதிக்க மாதலால் வேறில்லை. பலவேசம் கொண்டவர் வெற்றி வீரர். வெகு புத்திக்காரர். அவர்களை உம் அருகில் வந்தால் அட்டத்துட்டிக் கிடமல்லோ ஆக்குவார். ஈனம் சற்றும் இரக்கம் கிடையாது. இந்த குணம் உடைய ஐந்து பேரும் உமக்கு ஆகும் என்றால் ஐந்து பேரையும் இங்கு அழைக்கிறேன் என்றார் சிவபெருமான்.

தேனினிய ஈசர் சொன்னதை கேட்ட திருமால் நல்ல மாமறை மைத்துனரே! நாட்டில் இப்படிப்பட்ட கோட்டிகள் செய்பவர்கள் இருந்தால் நான் தெட்சணா பூமியில் சென்று தவம் செய்து நல்லவர்களை தேர்ந்தெடுத்து அரசாள வரம் பெற்றது எப்படி? இந்த மாய்ஞ்ஞாலப் பேர்கள் இருந்தால் எந்த நியாயமாய் நானும் தவம் செய்வேன்.

சீமை எங்கும் அநியாயம் இறைத்தெண்டம், பொய், களவு அதிகமானதால் அவற்றை வன்மையாக நிறுத்தி, பேய்கள் செய்யும் கொடுமையை அகற்றி, பலி தீபம் ஒலிகள் அடக்கி, நியாயமாக நான் சீமை ஆளவே நாராயணரே நல்ல வைகுண்டராய் அவதரித்து, தெட்சணா பூமியில் செல்வச் சான்றோரிடம் சென்று நான் புதுமைகள் பலர் செய்து, நல்லோரை தெளிந்து எடுக்க நிச்சயத்துள்ளேன்.

ஆனால் தாங்கள் இந்தத் துட்ட வீரர்களின் செய்திச் சொன்ன பொழுதே என் மனம் குமுறுகிறது.
நேர்மையும் ஒழுங்கும் உடைய கயிலைக்கதிபதி நாயகரே! இந்தத் துட்ட வீரர்களைத் திட்டமிட்டு அழைத்து, நீர் முன்னிருந்த வரத்தின் முறைமையே உபாயமாய் அடக்கி, புது வரம் ஈந்து தங்க பிறவியதாக்கி, பேரும் மாற்றி, எந்தனோடு இதமாய் அனுப்பினால் ஏற்ற காரியமாக இருக்கும் அதை நானும் பார்த்து முடிப்பேன். மனமுவந்து இதை நீர் செய்யவில்லையாயின் என்னால் தெட்சிணா பூமியில் சென்று தவம் செய்ய முடியாததாக ஆகிவிடும் என்று மாயன் இவ்விதம் கூறிட அருகில் இருந்த பேயர்களும் ஆமோதித்தனர்.

மாயனார் இவ்விதம் உரைத்ததும் அரனார் மணமகிழ்ந்து அந்த துட்டவீரரை தந்திரமாய் வரவழைத்து நியாயமா நல்ல பிறவியது ஆக்கி புதுவரம் ஈந்து நாராயணர் கைக்குள் ஆக்க நேயமாய் மனதில் எண்ணி திட்டமிட்டார்.
எட்டு திசையும் புகழ்பெற்ற ஐந்து பேரையும் அழைத்து, மெட்டு தனமாக முன்னரே ஈந்த வரம் மாற்றி, தருமபுரிக்கு ஏற்றப் பிறவிய தாக்கி புதுவரம் ஈந்து மால் உரைத்தபடி செய்ய உம்பர் கோனும் உபாயம் இட்டார்.

திருச்செந்தூரில் முருகன் கோவிலில் கொடியேறி மாசி எட்டாம் திருநாள் நடக்கிறது. இத்திருவிழாவின் மகிமை கண்டு மகிழ தானும் போகவேண்டும் என்று பொக்கணங்கள் தோளிலிட்டு, பெரிய புலி தோலணிந்து வேலும் எடுத்து, கையில் மழு, சூலம் கப்பரைகள் ஏந்தி, கண்டம் தனில் பண்டமாலை பூண்டு, மெய்யில் வெண்ணீறும் ருத்திராட்ச மாலை அணிந்து, மேன்மை பொற்கரத்தில் செம்பு முத்திரி தூக்கி, சண்முகம் திருநாளுக்கு போக வேண்டும் என்று கோவிடத்தில் வாழுகின்ற குரு வசிஸ்டர் ஆனார் சிவபெருமான்.

தேவலோக தேவர்களும் பூலோக தேவர்களும் கோடியாக கோடியாக சொல்ல பேய் பிடாரி பூதக்கணம், புட்டா புரக்காளி, வேத நான்முகன், நாட்டில் வரம்பெற்ற தாட்டிமையோர் சூழ ஏவல் பெரியோரெல்லாம் போற்றி வர ரிஷப வாகன மேறி திருச்செந்தூர் சென்றார் சிவபெருமான்.

அங்கு கந்தனுக்கு தீபாராதனை காட்டி தேர் வடம் பிடித்து இழுக்க தொடங்கினர். தேரின் உச்சியில் மாயவரான வைகுண்டர் அமர்ந்து மகாமேரு போல் உறைந்து தேரை தன்வசமாகிக் கொண்டார்.

பக்தர்கள் எல்லாம் வந்து இழுத்து சந்து நொந்து போக தேர் சிறிதும் அசையவில்லை. துட்ட வீரர்கள் ஐந்து பேரும் எட்டு திசையும் சென்று கிடாவெட்டி பலியிட்டனர். இட்ட கிடா ரத்தம் எல்லாம் துட்ட வீரர்கள் உண்டு இன்னும் போதாது என்று மேலும் பலி கொண்டார்கள்.
துட்ட வீரர்கள் ஐந்து பேரும் இட்ட பலி உண்டு தேரை தொட்டு இழுத்தனர். தேர் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. தங்களாலே ஆகாது என்று நொந்து போயினர்.

வட்டமிட்ட வீரருட பெருமை எல்லாம் மிகப் போய்விட்டது. என்ன கேடு ஆச்சுதோ என்று ஏங்கி ஐந்து பேரும் எமை நாளும் பக்ரகாளியிடம் செல்வோம் என தீர்மானித்தனர்..

பத்திரகாளி அன்னையிடம் சென்று பொன்னழகி எங்களைப் பெற்றவளே அம்மா புட்டா புர நாயகியே! கட்டழகி அம்மா இத்தனை நாள் எங்களால் ஆகாது ஒன்றுமில்லை.

ஏழு கடல் தாண்டி இந்த உலகை ஆண்டு இருந்தோம். முத்தீயினால் தகித்துக் கொண்டிருக்கும் அக்கினி தூண் கையில் எடுத்து மூன்று லோகமும் சுற்றி மீண்டு கொண்டு வந்தோம். வெள்ளி கைலாசம் சுற்றி விளையாடி வந்தோம். இமரவன் என்னும் பர்வத ராஜனின் பத்து மாதத்து மகளின் பிஞ்சு ஈரல் உண்டோம். மாடனருள் அண்ணாவி மாமலையில் சென்று மாந்திரீகத்தை போய்ச்சோம். கட்டுச் சுறுக்கான பெரிய துட்ட கணங்களை காற்றாய் பறக்க செய்தோம். பூமி கைலாசம் வரை எங்கள் பெயர் அல்லாமல் இன்னொரு துட்ட வீரர் கண்ணில் காணோம் அம்மா.

மாயனுக்கும் ஆயனுக்கும் மற்றும் பல தேவதையும் ஏற்றுக் கொடோம் அம்மா. பேய்கள் பல தேவதைக்கும் பெருமானாக வாழ்ந்தோம். பேர் உலகில் சொல்லாமல் பேருமாறி நிற்போம் அம்மா. நாங்கள் உனக்கு அடிமையானதல்லால் எங்களை வெல்ல யாரும் இல்லை. இப்படியான யாராலும் வெல்ல முடியாத பெரும் வரங்களை ஈசர் அன்று தந்தார். என்ன மாயமோ அறியோம். சந்தனத்தான் தேரு நின்ற இடத்தை விட்டு நகராமல் நிற்கிறது. தேரை ஒட்டி வைப்பதற்கு அருள் செய்ய வேண்டும் தேன்மொழியே பத்திரமாகாளி என தொழுது நின்றார்கள்.

இவ்விதம் தொழுது நின்ற வீரர்களை அன்னை பத்மாகாளி பார்த்து இந்த உலகம் கலிநீசர்களின் பாதக கொடுமையால் அழியும் நாள் வந்தாச்சு. அண்ணன் நாராயணரும் வைகுண்ட மாபெரும் அவதரித்தாகிவிட்டது. நீங்கள் சக்தி அற்று நிற்பதற்கு காரணம் இதுவே ஆகும். எனினும் உங்களுக்கு நான் வழி காட்டுகிறேன்.

கலியும் அழிவதற்கான நாள் வந்து விட்டது. முன்னமே கொடுத்த வரங்கள் எல்லாம் இத்துடன் முடிந்துவிட்டது திருமால் தவசதாக மாசிறை இருக்கும் காலம் ஆகிவிட்டது.

இதற்கு மாறாக யார் என்ன செய்ய முடியும்? என்னாலும் ஏதும் ஆகாது. இந்நிலைக்கான காரணங்கள் என்னவென்று சொல்லுகிறேன் கேளுங்கள், யாருக்கும் அடங்காத கலியன் வந்து பிறந்த அந்த நாள் முதல் மான வரம்பு மகிமை கெட்டுப் போச்சு. இவ்வுலகில் உள்ள தேவருக்கும், ஈசர், பிரம்மா தனக்கும் இக்கலியை அடக்க சக்தி இல்லை.

மானமுறை நீதி இல்லை. வழக்கிடும் வம்பர்க் கூட்டம் பெருத்துவிட்டது. ஐயம், இறை, கூலி, தெண்டம், அநியாயம் பெருத்து விட்டது. ஆண்டி பரதேசிகளை பிடித்து வேலை கொள்கிறார்கள். மானமாக வாழும் ஏழை எளியோர் சொத்தை எல்லாம் வம்பர்கள் அபகரிக்கிறார்கள்.

எளியவரை தேடிப்பிடித்து அடித்து கொடுமைப் படுத்துகிறார்கள். இவ்வித பொல்லாத கலியில் என்னால் என்ன ஆகும். நீங்கள் வல்லாத்தான் வைகுண்டருடன் சென்று அவருக்கு ஏவல் செய்து அவரின் வலப்பக்கம் வாழ்வீர் என வழிகாட்டி அருளினார் அன்னை மாகாளி அம்மை.

பிரணவக் கலை அறுபத்து நான்கும் வைகுண்டமாச்சு. கலி தானே வலிமை குன்றி தன்னாலே சாகும். முப்பது இரண்டு அறமும் சமநிலை ஆச்சு. ரிக், யசூர், சாம அதர்வண வேதங்கள் என்னும் நான்கு வேதங்களும் நிலம், நீர் ,நெருப்பு, காற்று, ஆகாயமாகிய பஞ்சபூதங்களும், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தகரணங்கள் நான்கும், மண், பொன், பெண்ணாசை என்ற மூன்று ஆசைகளுமாகிய கட்டடங்களாப் பதினாறும் அவருக்கு உள்ளாச்சு என்றார்.

*******************************

# அகிலத்திரட்டு அம்மானை அருள் நூல்

## பட்டயப்படிப்பு

## நான்காம் பருவம்

## பாகம்-III

அகிலம் கல்விச்சாலை

**அகிலத்திரட்டு பாடம் படிக்க, அகிலத்திரட்டு வாசிப்பு பயிற்சி மேற்கொள்ள , பதி, தாங்கல்களில் அறப்பாடச்சாலை நடத்த, அகிலத்திரட்டு பாராயணப் பயிற்சி வழங்கப்படுகிறது.**

- **வகுப்புகள் ஆன்லைன் மூலமாகவும்,**
- **நேரடியாகவும் வழங்கப்படுகிறது.**

14/14-1, **மணலிவிளை, மண்டைக்காடு அஞ்சல்,**
**கன்னியாகுமரி மாவட்டம்**-629252.
**வாட்ஸ் அப் எண்**:9489655691
**வாட்ஸ் அப் குழுவின் பெயர்: அகிலம் அறிவோம்**
**தொடர்பு கொள்ள வேண்டிய அலைப்பேசி**: 9486880072,9489655691